SOUTHERN LANGUAGES BOOK TRUST

வாழ்க்கைக்கு இன்றியமையாத
கேள்விகளும் பதில்களும்

தென்மொழிகள் புத்தக டிரஸ்ட்
ஆதரவில் பதிப்பிக்கப் பெற்றது

ரூ. 1 - 60

அரசியல் அறிவு

# கேள்வியும் பதிலும்

பேராசிரியர் எம். ரத்தினசாமி

அருணோதயம்

அரசியல் அறிவு

# கேள்வியும் பதிலும்

ஆசிரியர் :

பேராசிரியர் எம். ரத்தினசாமி

தமிழாக்கம் :

கே. வி. ராமச்சந்திரன்

அருணோதயம்

ராயப்பேட்டை: : சென்னை-14.

அருணோதயம் வெளியீடு: 71
முதற் பதிப்பு: பிப்ரவரி, 1960
பிரதிகள் : 5000

விலை ரூ. 1-60

தென்மொழிகள் புத்தக டிரஸ்ட்
ஆதரவில் பதிப்பிக்கப் பெற்றது

பாரதம் அச்சகம், 14, உஸ்மான் ரோடு, சென்னை-17.

TAMIL
FIRST EDITION: 5000 copies
February 1960

## ARASIYAL ARIVU

# KELVIYUM PATHILUM

(What Every Citizen Ought to Know)

by
Prof: M. RUTHNASWAMY
M. A., (Cantab) (Barrister - at - Law)

Translated by:
K. V. RAMACHANDRAN

PUBLISHED UNDER THE AUSPICES OF
THE SOUTHERN LANGUAGES BOOK TRUST
MADRAS

TAMIL: 77

PUBLISHED BY
ARUNOTHAYAM
RAYAPPETTAI :: MADRAS-14

# அணிந்துரை

டாக்டர் ஏ. எல். முதலியார், துணைவேந்தர்,
சென்னைப் பல்கலைக் கழகம்

தென்னிந்திய மொழிகள் புத்தக டிரஸ்டு, தன்னுடைய முன் அனுபவங்களாலும், பொதுமக்களைக் கவர்வனவாயும் அதனோடு அவர்களுக்கு நற்பயன் அளிப்பனவாயும் உள்ள நூல்களை வெளியிட்டதால் பெற்ற அறிவின் திறத்தாலும், இரண்டாம் வரிசை நூல்களை வெளியிடத் தலைப்பட்டுள்ளது. அவற்றைத் திராவிட மொழிகள் அனைத்திலும் ஆக்கி அளிக்கவும் அது கருதுகின்றது. இந்த நூல்களெல்லாம் மிக்க கவனத்தோடும், படிப்பவர்களின் பலதிறப்பட்ட சுவைகளுக்கு ஏற்பவும் தெரிந்தெடுக்கப்பட்டுள்ளன. வாழ்க்கையின் பலவகைக் கூறுபாடுகளையும் பற்றிய பல பல பொருள்கள் அடங்கிய நூல்களை வெளியிட இந்தப் புத்தக டிரஸ்டு இயற்கையாகவே ஈடுபடத் தொடங்கியுள்ளது. இந்தியப் பெருந்தலைவர்களுள் சிலருடைய வாழ்க்கை வரலாறுகளையும் அவர்கள் சாதித்தவைகளையும் விரித்துரைப்பதற்கென ஒரு பகுதியும் இதில் தனியாக ஒதுக்கிவைக்கப்பட்டுள்ளது. நாட்டின் நலன்களில் அக்கறை கொண்டு, மக்களின் அடிப்படை உரிமைகளுக்காகப் போராடவும், நாட்டின் மதிப்பையும் செல்வாக்கையும் வலுப்படுத்தவும் அரும்பணி ஆற்றிய இப்பெருந் தலைவர்களுக்குத் தாங்கள் எவ்வளவு கடமைப் பட்டவர்கள் என்பதை வருங்கால மக்கள் அறிந்து கொள்வது நல்லது.

தத்துவம், சமயம், விஞ்ஞானம், பேரிலக்கியங்கள், பொருளாதாரம் என்பனவும் இவ்வரிசையில் இடம் பெற்றுள்ளன. சிறு கதைகளுக்கும் பண்டைய கலைகளைப் பொதுமக்களிடையே பரப்புவதற்கும் இதில் இடம் வகுக்கப்

பட்டுள்ளது என்பதைத் தெரிந்துகொள்வது நலமாகும். நடநாடகக் கலைகள், சிற்ப சாஸ்திரங்கள், தொல்பொருள் ஆராய்ச்சியில் கண்டறிந்த உண்மைகள், என்றென்றும் வியத்தகு பொருள்களாய் விளங்கும் தென்னிந்தியப் பெருங் கோயில்களின் வரலாற்றுக் குறிப்புக்கள் ஆகியவையும் இதில் சேர்க்கப்பெற்றுள்ளன. இப்போது வெளியிடப் பெறும் இந்த நூல் வரிசை படிப்பவர்க்குச் சுவையூட்டும் பல்வேறு வகைப்பட்ட பொருள்களை வழங்கும் என்பது என் துணிபு. பொது முறைக் கல்விக்குரிய பொருள்களைக் கொண்ட இத்தகைய வெளியீடுகள் மேன்மேலும் பெருகும் பெருந் தொகையினராகிய வாசகர்களைக் கவர்ந்து கொள்ளும் என்பதில் ஐயமில்லை.

இந்த நூல் வெளியீட்டுத் திட்டத்தில், தென்னிந்திய மொழி நூல்களுள் ஒன்றிலிருந்து ஒன்றுக்கு மொழி பெயர்க்கும் அம்சம், பாராட்டுத் தகுதியுடையதாகும். இவ்வரிசை முற்றுப்பெற்றதும், எழுதப்படிக்க மட்டும் தெரிந்த ஏராளமான மக்களைத் தங்கள் அறிவைப் பெருக்கிக் கொள்ள உண்மையான ஆர்வம் கொள்ளும்படி செய்து, அவர்களைப் பழக்கமாகப் படித்துவரும் தொகையினருடன் இணைத்து, இவ்வாற்றால் அவர்கள் தாங்களாகவே மிக்க திறம் உடையவர்களாவதற்கு இவைகள் உறுதுணை ஆகும் என்பது என் துணிவு. தென்னிந்திய மொழிகளின் புத்தக டிரஸ்டு எந்த உயரிய நோக்கங்களோடு தொடங்கப் பெற்றதோ அந்நோக்கங்கள் அஃது ஆற்றிவரும் அரும் பணியால் மேன்மேலும் நிறைவேறி வரும் என்று நான் நம்புகிறேன்.

ஏ. எல். முதலியார்,
துணைவேந்தர்.

# முன்னுரை

ஒரு ஆர்வமுள்ள குடிமகன்(ள்) கேட்கும் கேள்விகளுக்கு ஆசிரியர் (ஆ) விடையளிக்கும் வகையில், அரசியல் தகவல்கள் அடங்கிய இச் சிறு நூல் மக்கள் முன்பு வைக்கப் படுகிறது. இந்தியாவிலிருந்து மக்களுடைய, மக்களாலான அரசாங்கம் மறையாதிருக்க வேண்டுமானல், மக்கள் தெரிந்து கொண்டு பயன் படுத்த வேண்டிய அரசியல் கல்வியின் ஒரு பகுதியே இந்தப் புத்தகம்.

எம் ரத்தினசாமி

அரசியல் அறிவு

**கேள்வியும் பதிலும்**

அறிவுக்கு வேலை தரும்
பயனுள்ள வெளியீடுகள்

அருணோதயம் :: சென்னை 14.

# 1. ஏன்? என்ன?

குடிமகன்: ஒரு குடிமகன் கட்டாயம் தெரிந்து கொள்ள வேண்டிய விஷயங்கள் என்று எவற்றை நீங்கள் குறிப்பிடுகிறீர்களோ, அவற்றை அவன் ஏன் அறிய வேண்டும்?

ஆசிரியர்: அவன் ஒரு குடியாக (பிரஜையாக) இருப்பதால்.

கு: அது எப்படி ?

ஆ: ஒரு நாட்டில் குடியிருப்பவன் ஒரு குடி. அந்த நாட்டின் விவகாரங்கள், அதன் உரிமைகள், அதன் நிகழ்காலம், அதன் எதிர்காலம் ஆகியவற்றில் அவனுக்கு இயல்பான, நேரடியான ஆர்வம் உண்டு.

கு: ஒரு நாட்டில், வாழ்பவர்கள் அனைவரும் அதனிடம், அதன் விவகாரங்களில், அதன் நிகழ்காலத்தில், அதன் எதிர்காலத்தில் அக்கறை காட்டுவதில்லையா ?

ஆ: ஒரு நாட்டில் வாழ்கிறவர்களில் சில வகுப்பினர் அவ்வாறு அக்கறை கொள்வதில்லை. உதாரணமாக ஒரு நாட்டின்மீது அதன் குடிகளைப் போல, அந்நியர்கள் அக்கறை கொள்வதில்லை. பழைய காலத்தில் கிரீஸ் நாட்டிலும், ரோம் நாட்டிலும் இருந்த அடிமைகள், தங்களுடைய நிலைமை காரணமாகத் தாங்கள் வசித்த நாட்டின் மீது அக்கறை கொண்டிருக்கவில்லை.

கு: ஒரு நாட்டின் மீது அடிமையைவிட அதன் குடிக்கு அதிக அக்கறை இருப்பது ஏன்?

ஆ: ஏனென்ருல், அந்த நாட்டில் பிறந்து, அதை அவன் தன் நாடாக்கிக் கொள்வதுடன், தன் பெற்ருேரை நேசிப்பதைப் போல அதை அவன் நேசிக்கிருன். மற்றும் அந்நியனும், அடிமையும் பெருத சிலவற்றை அவன் பெற்றிருக்கிருன்.

கு: அந்நியனும், அடிமையும் பெருமல், குடி மட்டும் பெற்றுள்ளவை எவை?

ஆ: அவை உரிமைகள்.

கு: உரிமைகள் என்ருல் என்ன?

ஆ: உரிமைகள் என்பவை செயலாற்ற உதவும் சக்திகள், அதிகாரங்கள்.

கு: எப்படிப்பட்ட சக்திகள்?

ஆ: உயிர்வாழவும், சொத்து வைத்திருக்கவும், நாட்டு ஆட்சியில் பங்குகொள்ளவும் உதவக்கூடியவை.

கு: இந்த உரிமைகள், ஒரு நாட்டில் வாழ்பவர் எல்லாருக்கும் உண்டா?

ஆ: இல்லே. உயிர் வாழவும், தன் உயிரைப் பாதுகாத்துக் கொள்ளவும் அந்நியனுக்கு உரிமை உண்டு. ஓரளவுக்குச் சொத்து வைத்துக் கொள்ளவும் அவனுக்கு உரிமை உண்டு. ஆனுல், ஆட்சியில்பங்கு கொள்ள உரிமையில்லே. அடிமைக்கு எந்த உரிமையும் கிடையாது. அவன், அஃறிணைப் பொருளைப் போலவே நடத்தப்படுகிருன்.

கு: இந்த உரிமைகளும் அதிகாரங்களும் அரசாங்கங்களால் கொடுக்கப்பட்டவைகளா?

ஆ: இல்லே. அவை குடிகளுடைய இயற்கையான உரிமைகள். அதாவது ஒரு சுதந்திர நாட்டின்

சுதந்திர மக்களுடைய உரிமைகள். இங்கிலாந்து நாட்டில் அவை பொதுச் சட்ட உரிமைகள் என்றும் நம் நாட்டில் அவை அடிப்படை உரிமைகள் என்றும் கூறப்படுகின்றன. அவை அரசியல் சட்டத்தில் காணப்படுகின்றன.

கு: குடி என்ருல் என்ன என்பது இப்பொழுது எனக்குத் தெரிகிறது. ஆனுல், நீங்கள் கூற விரும்பும் பொருள்கள் பற்றி அவன் ஏன் தெரிந்து கொள்ள வேண்டும்?

ஆ: ஏனென்ருல், அவன் ஒரு சுதந்திர நாட்டின் உரிமையுள்ள குடியாக இருக்கின்ருன்.

கு: விவரமாகச் சொல்லுங்கள்.

ஆ: ஒரு உரிமை நாட்டின் சுதந்திர குடி என்ற முறையில், அதன் ஆட்சியில் பங்கு கொள்ள அவனுக்கு உரிமை உண்டு. இதைப் பகுத்தறிவுடன் செய்வதற்கு நாட்டு அரசாங்கத்தைப் பற்றி அவனுக்குச் சிறிது தெரிந்திருக்க வேண்டும்.

கு: அந்த அறிவு எதில் இருக்கிறது?

ஆ: தன்னை ஆள்கிற மனிதர்களும், அமைப்புகளும் எப்படிப்பட்டவை என்பதை அவன் தெரிந்து கொள்ளவேண்டும்.

கு: நமது நாட்டின் முக்கியமான அரசாங்க நிறுவனங்கள் யாவை ?

ஆ: சட்டங்களை இயற்றும் சட்ட அவைகள் இருக்கின்றன. அவை அரசாங்கத்திற்குப் பணம் நல்குகின்றன. (அரசாங்கம் நிர்வாகம் என்று அழைக்கப்படுகிறது) அது சட்டங்களையும், நாட்டு விவகாரங்களையும் செயல்படுத்துகிறது, நீதிமன்றம் குடிகளுக்குள் எழும் வழக்குகளையும் குடிகளுக்கும்

அரசாங்கத்துக்கும் இடையே தோன்றும் வழக்கு களையும் தீர்க்கிறது.

கு: நாட்டின் ஆட்சியில் குடி எவ்வாறு பங்கு கொள் கிருன்?

ஆ: முதலில், நாட்டின் சட்ட அவைக்கு பிரதிநிதியைத் தேர்ந்தெடுக்க அல்லது தானே பிரதிநிதியாக தேர்ந்தெடுக்கப்படுகிற உரிமை பெற்றிருக்கிருன். தானுக அல்லது தன் பிரதிநிதிகள் மூலம் அரசாங்க நடவடிக்கைகளை அவன் உருவாக்க முடிகிறது. சட்ட சபையின் கருத்துக்களை மதித்து நடக்க அரசாங்கம் கடமைப்பட்டுள்ளது.

கு: நாட்டின் ஆட்சியில் பங்குகொள்ள இந்த வழி ஒன்றுதான் இருக்கிறதா?

ஆ: அரசாங்கம் நடைபெறுகிற தன்மையைப்பற்றித் தன் கருத்துக்களை வெளியிடுவதற்காகச் சொற் பொழிவு நிகழ்த்தலாம், எழுதலாம், பொதுக் கூட்டங்கள் நடத்தலாம்.

கு: ஆனுல் அவன் இவற்றைச் செய்வது கட்டாயம் அல்லவே?

ஆ: சட்டப்படி கட்டாயமல்ல, ஆனுல் பெல்ஜியம் போன்ற நாடுகளில், தேர்தலில் தன் வாக்குரிமை யைப் பயன்படுத்தாத குடி தண்டிக்கப்படுகிருன். ஒரு உரிமைக் குடியென்ற முறையில் நாட்டு நிர் வாகத்தில் அவன் பங்கு கொள்ள வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இல்லாவிடில், அவன் குடி யல்ல. ஒரு குடிக்கு, உரிமைகளைப் போல கடமை களும் உண்டு.

கு: கடமைகள் என்றுல் என்ன?

ஆ: ஒருவன் என்ன செய்ய வேண்டும் என்று எதிர் பார்க்கப்படுகிறதோ அவைதான் கடமைகள்.

கு: குடிகளின் முக்கிய கடமைகள் யாவை?

ஆ: ஒரு குடியின் கடமைகளை இரண்டு வகைகளாகப் பிரிக்கலாம்; செய்யக் கூடியவை, செய்யக் கூடாதவை.

கு: ஒரு குடி செய்யக்கூடாத கடமைகள் எவை?

ஆ: "மற்றவர்கள் உனக்குச் செய்யக் கூடாது என்று நீ நினைப்பதை அவர்களுக்கு நீ செய்யக் கூடாது" என்ற நீதிமொழியில் அவை அடங்கும். நாட்டின் சட்டங்களை மீருமல் இருப்பது, பொது நன்மைக்காக ஆட்சியாளர் பிறப்பிக்கும் கட்டளைகளையும் விதிகளையும் மீருமல் இருப்பது ஆகியவை குடியின் கடமைகளாகும்.

கு: ஒரு குடி செய்யக்கூடிய கடமைகள் எவை?

ஆ: "மற்றவர்கள் உனக்குச் செய்ய வேண்டும் என்று நீ நினைப்பதை அவர்களுக்கு நீ செய்ய வேண்டும்" என்ற நீதி மொழியில் அவை அடங்கும். சமூக, அரசியல் வாழ்க்கையைப் பாதுகாத்துச் சீர்திருத்துவதும் ஒருவர்க்கொருவர் உதவி செய்வதும், இந்த விஞ்ஞான ஊழியில் சமூக ஐக்கியம் என்று சொல்லப் படுகிற சகோதரத்துவம் என்ற மனித உறவை வளர்ப்பதும் ஆகிய கடமைகள் குடிகளுக்கு உண்டு.

கு: சகோதரத்துவம், ஐக்கியம் ஆகிய சொற்கள் குறிப்பிடுகிற கடமைகளைத் தெளிவாக விளக்கி, வரையறுக்க முடியாதா?

ஆ: முடியும். ஒரு குடியின் கடமைகளை 4 முக்கிய பகுதிகளாகப் பிரிக்கலாம். அவையாவன : 1. தன் குடும்பத்துக்குச் செய்யும் கடமைகள், 2. சமூகத்துக்குச் செய்யும் கடமைகள், 3. உடன் வாழ் குடி

களுக்குச் செய்யும் கடமைகள், 4. நாட்டுக்குச் செய்யும் கடமைகள்.

கு: ஒரு குடி தன் குடும்பத்துக்குச் செய்யும் கடமைகள் யாவை ?

ஆ: தகப்பனாக இருக்கும் குடியின் கடமை, குடும்பம் வாழத் தேவையானதை ஈட்ட உழைப்பதும், குடும்பத்தின் நலனைக் கவனித்துக் கொள்வதும் ஆகும். தாயாராக இருக்கும் குடியின் கடமை, குடும்பம் வாழும் வீட்டில் மகிழ்ச்சியை நிலைபெறச் செய்வதும், குழந்தைகளை நல்ல முறையில் வளர்ப்பதும் ஆகும். பெற்றோர்களுக்குக் கீழ்ப்படிவதும், நல்லொழுக்கத்தினால் தங்களைக் கட்டுப்படுத்திக் கொண்டு நல்ல குடிகளாக வளரக் கற்றுக் கொள்வதும் சிறுவர்களின் கடமைகளாகும்.

கு: சமூகத்துக்குக் குடி செய்யும் கடமைகள் எவை ?

ஆ: சமூக வாழ்க்கை சிறப்பாகவும், பயனுள்ளதாகவும் ஆவதற்கு உகந்த எல்லாக்காரியங்களையும் செய்வது சமூகத்துக்கு ஒரு குடி செய்யும் கடமையாகும். ஏனைய மக்களுடைய உரிமைகளை மதித்து நடப்பதும், சட்டத்தையும் பொது அதிகாரிகளின் கட்டளைகளையும் மீறாமல் இருப்பதும், மனச்சாட்சி அல்லது நாகரீக வழக்கத்துக்கு விரோதமானதும் சமூகத்தைக் கெடுக்கக் கூடியதுமாகிய செயல்களில் ஈடுபடாமல் இருப்பதும் அவனுடைய கடமைகள்.

கு: தன் உடன் வாழ் குடிகளுக்கு ஒரு குடி செய்யும் கடமை எது ?

ஆ: ஒரு மனிதனுக்கு மற்றவர்கள் மனிதன் என்ற முறையில் செய்ய வேண்டியவைகளே அந்தக் கடமைகள். ஏழைகளுக்கும், இடர்படுபவர்களுக்கும், நற்பேறற்றவர்களுக்கும் உதவி செய்து, அவர்க

ளுக்கும் சமூகத்துக்கும் உள்ள உறவை வலிவு படுத்த வேண்டும்.

கு: தன் நாட்டுக்கு ஒரு குடி செய்யும் கடமை எது?

ஆ: சமூகம் ஒன்றுபட்டு இணைந்து இருப்பதற்காக வும், மக்களின் நலனை வளர்ப்பதற்காகவும், நல்ல சட்டங்கள் இயற்றப்படுவதால், நாட்டின் சட்டங்க ளுக்குக் கீழ்ப்படிவது முதல் கடமையாகும். அமை தியையும் ஒழுங்கையும் நிலைநாட்ட உதவ வேண் டும். சட்டத்தினுல் அல்லது வேறு ஆட்சியின ரால் வகுக்கப்படுகிற வரிகளைச் செலுத்த வேண் டும். பொதுவாக, நாட்டுக்காக வாழ வேண்டும். தேவைப்படும்போது, நாட்டின் பாதுகாப்புக்காக உயிரைக் கொடுக்கவும் முன்வர வேண்டும்.

கு: அவன் தன்கடமைகளைச் செய்யாவிட்டால் என்ன நேரும் ?

ஆ: சட்டத்துக்குக் கீழ்ப்படிவது, வரிகளைச் செலுத் துவது, மற்றவர்களுடைய உரிமைகளில் குறுக்கிடா மல் இருப்பது போன்ற கடமைகளைச் செய்ய அவன் மறுத்தால் தண்டனை அடைவான். மற்றக் கடமைகளைச் செய்யாவிடில். அவனுடைய மனச் சாட்சிக்குத்தான் அவன் அஞ்ச வேண்டும். தன் கடமைகளைச் செய்யாதவன், குடி என்ற சிறந்த பட்டத்தை வைத்துக் கொள்ளும் உரிமையையும் இழக்கிருன்.

கு: குடி என்பது எவ்வாறு பெருமையுள்ள பட்ட மாகும் ?

ஆ: குடி உரிமையுடன் சுதந்திரம் கிடைக்கிறது. அந்நிய ஆட்சியின் கீழ் உள்ள மக்களைவிட குடி கள் வேறுபட்டவர்கள், மேன்மையானவர்கள்.

"நான் ஒரு ரோமானியக் குடி" என்று ரோமானியப் பேரரசின் குடிகள் பெருமையாகச் சொல்லிக் கொண்டார்கள். அவர்களுக்கு உரிமைகளும் சலுகைகளும் கிடைத்தன. குடி உரிமையின் சிறப்பு, அதைப் பயன்படுத்துவதைப் பொறுத்துள்ளது.

கு: அது எப்படி ?

ஆ: குடிகளின் நடத்தையினுல் குடி உரிமை சீர்கெடக் கூடும். சமூக விரோதமான செயல்களில் குடிகள் ஈடுபட்டால், குடிஉரிமை இழிவடைகின்றது.

கு: அவ்வாறு எங்காவது நிகழ்ந்திருக்கிறதா ?

ஆ: ஆமாம், நிகழ்ந்துள்ளது. ரோமானியப் பேரரசின் இறுதி நாட்களில் குடி உரிமையை அரசாங்கம் ஒரு பெரிய சுமையாகச் செய்ததால், குடி உரிமை என்ற சாபத்திலிருந்து விடுபடுவதற்காக நகரத்திலிருந்து மக்கள் காட்டுக்கு ஓடினுர்கள். ஒரு ரோமானியப் பேரரசன் தன் குதிரையை ரோமானியப் பேரரசின் குடியாக்கும் அளவுக்கு குடி உரிமையை அவர் இழிவாக மதித்தார்.

கு: அத்தகைய நிகழ்ச்சிகள் இந்தியாவிலும் ஏற்படுமா ?

ஆ: ஆமாம். நமது உரிமைகளேயும், கடமைகளேயும் குடியுரிமையின் சிறப்பையும் நீங்களும் நானும் எப்பொழுதும் கவனத்தில் வைக்கத் தவறினுல் அவை ஏற்படக்கூடும்.

# 2. குடி, சமூகம், நாடு

கு: சமூகம், நாடு ஆகியவற்றைப் பற்றிப் பேசினீர்கள். அவை எப்படிப்பட்டவை? சமூகம் என்ருல் என்ன ?

ஆ: பொதுவான வாழ்க்கை முறை அல்லது இயற்கையான உறவுகளால் மக்கள் ஒன்றுபட்டு இருப்பது சமூகம்.

கு: குடும்பம் ஒரு சமூகமா?

ஆ: ஆமாம். குடும்பத்தை முதல் சமூகம் என்று சிசெரோ என்ற ரோமானிய தத்துவஞானி குறிப்பிட்டிருக்கிருர்.

கு: அப்படியானல், சமூகத்திலிருந்து குடும்பம் எவ்வாறு வேறுபட்டது ?

ஆ: சமூகம் என்பது பெரிய குழு. அதில் ஒரு பிரிவு அல்லது மாதிரி–அங்கம், குடும்பம்.

கு: சமூகத்திலுள்ள பிற பிரிவுகள் யாவை ?

ஆ: ஒருவருடைய வகுப்பு போன்ற பிரிவுகள் உண்டு. பழைய காலத்தில் இருந்ததைப் போன்ற வகுப்பினர் அல்லது இந்தியாவில் உள்ளதைப் போல சாதிகள், மதக் கூட்டங்கள், சமூகத் தொகுப்புகள், பல வகையான சங்கங்கள் ஆகிய பிரிவுகளும் உண்டு.

கு: இந்தக் கூட்டங்கள் எல்லாம் சேர்ந்து ஒரு சமூகமாக அமைகின்றனவா ?

ஆ: ஆம்.

கு: நாடு என்ருல் என்ன ?

ஆ: சமூகத்தை அரசியல் கண்ணேட்டத்தில் நோக்குவது நாடு.

கு: அதன் பொருள் என்ன ?

ஆ. அதன் பொருள் என்னவென்ருல், சட்டங்களுக்குக் கீழ்ப்படியும் போதும், வரிகளைக் கொடுக்கும் போதும், ஏனைய அரசியல் கடமைகளைச் செய்யும் போதும். அவைகளை யொட்டிய உரிமைகளைத் துய்க்கும் போதும், சமூக உறுப்பினர்கள் நாட்டின் உறுப்பினர்களாகிருர்கள்.

கு: இந்தச் சட்டங்களை இயற்றுவதும், வரிகளைத் திரட்டுவதும, கடமைகளை நிறைவேற்றச்செய்வதும், உரிமைகளைக் கொடுப்பதும் யார் ?

ஆ: இந்த அதிகாரங்களை உடையது, அரசாங்கம் என்று அழைக்கப்படுகிற நாட்டின் ஆட்சியினர்.

கு: சமூகத்தின் உறுப்பினர்களே, நாட்டின் உறுப்பினர்களா ?

ஆ: ஆம்.

கு: அப்படியானுல், சமூகத்துக்கும் நாட்டுக்கும் உள்ள வேறுபாடு என்ன ?

ஆ: சமூகம் என்பது மக்கள் ஒன்ருகவும், ஒருவருக்குப் பக்கத்தில் மற்ருெருவர் வாழும் இயற்கையான அமைப்பு. சமூகத்தின் இயற்கை உறவுகளால் அவர்கள் பிணைக்கப்பட்டு இருக்கிருர்கள். எடுத்துக் காட்டாக ஒரு குடும்பத்தில் அன்பு, பணிவு, அதிகாரம் ஆகியவை இயற்கையாகத் தோன்றுகின்றன. அவைகளை அரசனே அல்லது சட்ட அவையோ தோற்றுவிப்பதில்லை.

கு: ஆனால், நாடும் இயற்கையானது அல்லவா ?

ஆ. நாடும் ஒரு இயற்கையான அமைப்புதான். ஆனால், அதன் ஐக்கியம் ஒரு அரசனால் அல்லது சட்ட அவையால் இயற்றப்பட்ட சட்டங்களால் பாதுகாக்கப்படுகின்றது. மக்களைக் கீழ்ப்படியச் செய்வதும் அதன் சட்டங்களே. அது பலவந்தத்தாலும், தண்டனையாலும் தன்னைப் பாதுகாத்துக்கொள்கிறது.

கு: அது எப்படி?

ஆ: குடும்ப வாழ்க்கையின் அல்லது சமூகக் கூட்டின் விதிகளை ஒருவன் மீறினால் அதன் தனிப்பட்ட தண்டனையிலிருந்து அவன் தப்பித்துக்கொள்ள முடியும். எடுத்துக் காட்டாக, மகனைத் தண்டிக்கத் தகப்பனார் விரும்பினால், அந்தத் தண்டனையிலிருந்து தப்புவதற்காக மகன் வீட்டை விட்டு ஓடிவிடலாம். அவன் உடனே திரும்பாவிடில், அந்தத் தண்டனை நிறைவேறாது போய்விடும். அவன் திரும்பினால், தகப்பனாரின் மனம் இளகக்கூடும். அதைப்போல, தன் சங்கத்தின் விதிகளை ஒருவன் மீறினால், அவன் விலகிக் கொள்ளலாம். ஆனால், நாட்டிலிருந்து விலகிக்கொள்வது இயலாது. நாட்டை விட்டு ஒருவன் வெளியேறினால், அவன் வேறு நாட்டின் குடி ஆகிறான்.

கு: நாட்டிலிருந்து ஒருவன் தப்பித்துக்கொள்ள முடியுமா ?

ஆ: ஒரு நாட்டின் சட்டங்களை ஒருவன் மீறினால் அவனால் தப்ப முடியாது; அவனைக் காவல் துறையினன் பிடித்துக்கொள்கிறான், நீதிபதி அவனுக்குத் தண்டனை விதிக்கிறார். நாட்டை விட்டு ஓடினால்தான் தண்டனையிலிருந்து அவன் தப்ப முடியும். ஆனால், எப்பொழுதாவது அவன் பிடிபட்டால் தண்டனைக்கு உள்ளாவான்.

கு: சமூகத்துக்கும், நாட்டுக்கும் இடையே உள்ள வேறு பாட்டை எவ்வாறு தொகுத்துச் சொல்வீர்கள் ?

ஆ: சமூகம் என்பது இயற்கையான தன்னிச்சையான அமைப்பு. மனிதனுடைய சமூக நடவடிக்கைகள் எல்லாவற்றிற்கும் அது உதவுகிறது. ஆனல், நாடு என்பது அதே மக்களைக் கொண்ட செயற்கையான அமைப்பு. ஏனென்ருல், சில நாடுகள் வலிந்து கவர் வதிஞல் அல்லது குடியேற்றத்தால் (Colonization) ஏற்பட்டவை. அவை, வற்கட்டாய ஆட்சியிஞல் நிலைபெற்று இருப்பவை. அவை ஒரு சில குறிப் பிட்ட அரசியல் நோக்கங்களுக்காகப் பயன்படு பவை.

கு: அப்படியாஞல் நாட்டின் நோக்கங்களைவிட, சமூகத் தின் நோக்கங்கள் அதிகமானவையா?

ஆ: ஆம், அரசியல் நோக்கங்களை மட்டும் நாடு நிறை வேற்றுகிறது. பிற எல்லா நோக்கங்களையும் சமூகம் கவனித்துக்கொள்ளுகிறது.

கு: அரசியல் நோக்கங்கள் யாவை?

ஆ: அயலார் படையெடுப்பிலிருந்து நாட்டைப் பாது காப்பது, உள்நாட்டுக் குழப்பத்திலிருந்து பாதுகாப் பது, அமைதியையும் ஒழுங்கையும் நிலைநிறுத்துவது; குடியின் உரிமையைக் காப்பது; தன் உரிமைகளை அவன் பயன்படுத்தவும், அவன் தன் கடமைகளைச் செய்யவும் உதவுகிற சட்டங்களை இயற்றிச் செயல் படுத்துவது; மக்களுக்கு வளமையும், மகிழ்ச்சியும் கொடுக்கக்கூடிய எல்லாவற்றையும் செய்வது, ஆகிய வைகளே நாட்டின் அரசியல் நோக்கங்களாகும்.

கு: சமூகத்தின் நோக்கங்கள் யாவை?

ஆ: மனிதன் தனிப்பட்ட முறையிலும் சமூகத்தின் உறுப்பினன் என்ற முறையிலும் வாழ்வதற்கான மற்றெல்லா நோக்கங்கள்.

கு: தெளிவாக எடுத்துக்காட்டுடன் விளக்குவீர்களா?

ஆ: தன் குடும்பத்தில் வாழ்வது, தன் மதத்தில் ஈடுபடுவது, ஒழுக்கமான சமூக வாழ்க்கையில் வாழ்வது, வேலை செய்வது, மற்றவர்களுடன் சேர்ந்து சமூக, வர்த்தக, அரசியல் சங்கங்களை அமைப்பது—இவை எல்லாம் அவனுடைய சமூக வாழ்க்கை.

கு: மனித வாழ்க்கையின் இந்தப் பகுதிகள், நாட்டின் வரம்புக்கு அப்பாற்பட்டவைகளா?

ஆ: ஆம். ஆனல், சமூக வாழ்க்கையில் அவனுடைய செயல்கள் நாட்டு அதிகாரத்துக்குத் தீங்கிழைக்கக் கூடியனவாக இருக்கக்கூடாது. அவனுடைய அரசியல் நோக்கங்களைப் பேணி வளர்ப்பதாக இருக்க வேண்டும்.

கு: சமூகத்தின் நோக்கமும் எல்லையும் நாட்டினுடையதைக் காட்டிலும் பெரிதா?

ஆ: ஆம். நாட்டின் கருத்தும் நோக்கமும் குறுகியது வரையறுக்கப்பட்டது.

கு: ஆனல், சமூகத்திலும் நாட்டிலும் அதே மனிதர்கள் இருப்பதாலும் ஒன்றினுள் மற்ருென்று அடங்குவதாலும், இரண்டுக்கும் இடையே கருத்து வேறுபாடு மட்டும் இருப்பதாலும், சமூகத்துக்கும் நாட்டுக்கும் இடையே உள்ள வேற்றுமை முதன்மையற்றதாகத் தோன்றவில்லையா?

ஆ: அரசியல் கண்ணேட்டத்தில் அந்த வேறுபாடு அடிப்படையானது.

கு: அது எப்படி?

ஆ: ஏனென்ருல், சமூகத்தின் எல்லையிலிருந்து நாட்டின் வரம்பை வேறுபடுத்தாவிட்டால், அதாவது சமூகத்தையும் நாட்டையும் நீ ஒன்ருகக் கருதினுல் நாட்டை எங்கும் நிறைந்ததாகவும், முழு வல்லமை பொருந்தியதாகவும் செய்துவிடுவாய்.

கு: அதனுல் மக்களின் அரசியல் வாழ்க்கையில் என்ன மாறுபாடு தோன்றும்?

ஆ: எல்லா வேற்றுமைகளும் தோன்றும். மனித வாழ்க்கை முழுவதிலும் அவனுடைய குடும்ப வாழ்க்கை, மதம், சங்கம், வேலை, தொழில் ஆகியவற்றின் மீது—நாடு அதிகாரம் செலுத்த ஆரம்பித்தால் உரிமை அழிந்துவிடும், தனிப்பட்டவர் முயற்சிக்கு, ஊக்கத்துக்கு, செயலுக்கு முடிவு ஏற்பட்டு அதனுல் கிடைக்கும் வளமும் மறையும்.

கு: அது அச்சம் தரக்கூடியதாக இல்லையா? சமூகமும் நாடும் இணைக்கப்பட்டதால் அத்தகைய அஞ்சத்தக்க விளைவுகள் எப்பொழுதாவது ஏற்பட்டிருக்கின்றனவா?

ஆ: ஆம். பழைய காலத்தில் ஸ்பார்ட்டாவில், குழந்தை தாய்ப்பால் குடிப்பதை நிறுத்திய நாளிலிருந்து அதன் வாழ்க்கையை நாடு கட்டுப்படுத்தியது. அதனுல் அவன் நாட்டின் பாதுகாப்பில் வளர்ந்து, அதன் அடிமையானுன்,

கு: ஆனுல் அது பழைய காலம்—தற்போதைய நாகரீக காலத்தில் அது நிகழ்ந்திருக்கிறதா?

ஆ: 20 ஆண்டுகளுக்கு முன்புதான் பாசிஸ்டு இத்தாலியில் அது நடந்தது. அதை உருவாக்கிய முசோலினியின் கொள்கை, "எல்லாம் நாட்டுக்குச் சொந்தம்; நாட்டிற்கு அப்பாற்பட்டது ஒன்றுமில்லை" என்பதாகும். நாஜி ஜெர்மனியில், மதத்தையும் கல்வியை

யும் கலாச்சாரத்தையும் தேசத்தின் அதிகாரத்தின் கீழ் கொண்டுவர ஹிட்லர் விரும்பினான். இன்று, மனிதனின் தனிப்பட்ட சமூக, பொருளாதார வாழ்க்கை நாட்டின் ஆட்சி வரம்புக்கு உட்பட்டு இருக்கிற சோவியத் ரஷ்யாவில், லெனினும் அவருக்குப் பிறகு வந்துள்ள ஆட்சியாளர்களும் நாட்டையும் சமூகத்தையும் ஒன்றாகச் செய்ய முற்பட்டிருக்கிறார்கள்.

கு: அந்த இடர்ப்பாடு வேறு எங்காவது காணப்படுகிறதா?

ஆ: எங்கும் காணப்படுகின்றது. சில நாடுகளில் வறுமையும் கஷ்டமும், சமூகப் பொருளாதார பிற்பட்ட நிலையும் ஓங்கியிருப்பதால், கல்வி, கலாச்சாரம், தொழில், மக்களின் சமூகப் பொருளாதார வாழ்க்கை ஆகிய எல்லாவற்றுக்கும் நாடே பொறுப்பேற்க வேண்டும் என்ற நோக்கம் காணப்படுகிறது.

கு: அதனால் வறுமை ஒழிந்து, வளம் ஏற்பட்டால், அது நல்லது அல்லவா?

ஆ: உரிமையை இழந்து முன்னேற்றத்தை அடைய முடியாது. இல்லாவிடில் வயிறு நிறைய சாப்பிடும் அடிமையின் நிலைமையே, மனித இனத்தின் அரசியல் குறிக்கோள் ஆகிவிடும்.

# 3. அரசியல் சட்டம்

கு: அரசியல் சட்டம், அடிப்படை உரிமைகள் ஆகியவைகளைப் பற்றிக் குறிப்பிட்டீர்கள்—அரசியல் சட்டம் என்ருல் என்ன?

ஆ: அரசியல் சட்டம்தான் அடிப்படையான சட்டம். அது மக்களுடைய அரசாங்கத்தின் அடிப்படை.

கு: அதில் என்ன இருக்கிறது?

ஆ: ஆட்சியாளர்கள், ஆளப்படுபவர்கள் ஆகியவர்களின் உரிமைகளையும், கடமைகளையும் அது தெரிவிக்கிறது. ஒரு நாட்டின் அரசாங்கத்தை அமைக்கும் ஏற்பாடுகளை அது விவரித்து, அவைகளிடையே உள்ள உறவுகளை ஒழுங்குபடுத்தி, இந்த அமைப்புக்களின் அதிகாரங்களை விவரித்துக் கட்டுப்படுத்துகிறது.

கு: இந்தியாவில் அத்தகைய அரசியல் சட்டம் இருக்கிறதா?

ஆ: ஆம், இருக்கிறது. அதற்கு இந்திய அரசியல் சட்டம் என்று பெயர். அரசியல் நிர்ணய சபை என்ற சட்ட அடிப்படையில் ஏற்படுத்தப்பட்ட அமைப்பிஞல் அது உருவாக்கப்பட்டது. இந்திய மக்களின் பிரதிநிதியாக விளங்கிய அந்தச் சபை, அரசியல் சட்டத்தை ஆலோசித்து நிறைவேற்ற 2 ஆண்டுகள் ஆயின.

கு: அரசியல் சட்டத்தில் குடிகள் எவ்வாறு அக்கறை கொள்ள முடியும்?

ஆ: குடிகளுக்கு அது மிக முதன்மையானது. அந்த அரசியல் சட்டத்தின்படிதான் அவர்கள் ஆளப்படுகிருர்கள், அவர்களுடைய பொது விவகாரங்கள் நிர்வகிக்கப்படுகின்றன, அரசாங்கத்தை நடத்துவதற்காக அரசாங்கத்துக்குக் கொடுக்கப்படும் வரிகள் விதிக்கப்பட்டு வசூலிக்கப்படுகின்றன. பொதுவாழ்வையும் தனிப்பட்ட வாழ்வையும் கட்டுப்படுத்தும் சட்டங்கள் இயறப்பட்டு அமுலாக்கப்படுகின்றன.

கு: இத்தகைய அரசியல் சட்டத்தின் பயன் யாது?

ஆ: அது, இந்திய அரசாங்கத்தை சட்டத்திற்கு உட்பட்ட அரசாங்கமாக, மனிதர்களுக்கு உட்பட்ட அரசாங்கமாக, மனிதர்களுக்கு உட்பட்ட அரசாங்கமல்லாததாகச் செய்கிறது.

கு: இந்த இரு வகை அரசாங்கங்களுக்கும் உள்ள வேறுபாடு யாது?

ஆ: சட்டத்திற்கு உட்பட்ட அரசாங்கம் என்பது உரிமையுள்ள மனிதர்களின் அரசாங்கம் ஆகும், ஏனென்ருல் அது தெரிந்த, தெரியக்கூடிய, உறுதியான சட்டத்தின்படி நடக்கும் ஆட்சி. அதை அனைவரும் அறியும் வகையில் அது வெளியிடப்படுகிறது. அது (சட்டம்) மாருமல் நீடிக்கும்வரை, ஆள்பவர்கள் ஆளப்படுபவர்கள் ஆகிய இரு சாராரிடமும் அமுல் செய்யப்படக் கூடியது.

கு: வேறு வகை எப்படிப்பட்டது?

ஆ: வேறு வகை மனிதர்களுக்கு உட்பட்ட அரசாங்கம் என்று கூறுகிறேரும். ஏனென்ருல் எதேச்சாதிகாரிகள் என்றும் அரசர்கள் என்றும் அழைக்கப்படும் ஆட்சியாளரின் விருப்பத்துக்கும், மனப்போக்கிற்கும், தான்தோன்றித் தனத்துக்கும் ஏற்றவாறு அது நடைபெறுகிறது.

கு: ஆனல், தங்களுடைய குடிகளை ஆள்வதற்காக அரசர்களிடமும் எதேச்சாதிகாரிகளிடமும் சட்டங்கள் இல்லையா?

ஆ: ஆனல், அந்தச் சட்டங்கள் கணப்பொழுதில் மாறக் கூடும். மக்களையோ அல்லது மந்திரிகள் ஆலோசகர்கள் ஆகியோர்களையோ கூட கலந்தாலோசிக்காமல் எதேச்சாதிகாரி நடந்துகொள்ளக் கூடும்.

கு: ஆனல், உரிமை மக்களின் அரசியல் சட்டத்தையும் மாற்ற முடியாதா?

ஆ: அரசியல் சட்டத்தை மாற்ற முடியும் ஆனல் அதைச் செய்வதற்கு முன்பாக பொதுமக்களிடம் தெரிவிக்க வேண்டும், பொது இடங்களிலும் மக்களின் பிரதிநிதியாகிய சட்டசபையிலும் அது விவாதிக்கப்பட வேண்டும்.

கு: அப்படியானல் எல்லா அரசியல் சட்டங்களும் எழுதப்பட்டு வெளியிடப்பட்டுள்ளனவா?

ஆ: இல்லை. இங்கிலாந்து நாட்டு அரசியல் சட்டம் எழுதப்படவில்லை, வெளியிடப்படவுமில்லை.

கு: அப்படியானல் இங்கிலாந்து அரசாங்கம் மனிதர்களுக்கு உட்பட்டது, சட்டத்துக்கு உட்படாதது அல்லவா?

ஆ: இந்திய அரசாங்கத்தைப் போலவே இங்கிலாந்து அரசாங்கமும் சட்டத்திற்கு உட்பட்டு செயல்படுகிறது.

கு: ஆனல், இங்கிலாந்து அரசாங்கத்தை நிர்வகிக்கும் சட்டம் எங்கே இருக்கிறது?

ஆ: இங்கிலாந்தின் அரசியல் சட்டம் என்றழைக்கப்படும் ஒரு தனிப்பட்ட பத்திரமாக அது காணப்படவில்லை. ஆனல் அது, பாராளுமன்றத்தால் (இங்கிலாந்தின்

சட்டசபை) இயற்றப்பட்ட அநேக சட்டங்களிலும், அரசனும் மக்களும் செய்துகொண்ட உடன்பாடுகளிலும் காணப்படுகிறது—1215-ம் வருடத்திய மாக்ஞ கார்டா (மகா சாசனம்), 1629-ம் வருடத்திய உரிமைகள் மனு, 1679-ம் வருடத்திய ஹேபியஸ் கார்ப்பஸ் சட்டம், 1714-ம் வருடத்திய செட்டில்மெண்டு சட்டம் 1852-ம் ஆண்டின் சீர்திருத்தச் சட்டம், 1918-ம் ஆண்டின் ஜனப் பிரதிநிதித்துவ சட்டமும், அதன் திருத்தங்களும், 1914-ம் வருடத்திய பிரபுக்கள் சபையின் ரத்துரிமைச் சட்டம் முதலியவை, அத்தகைய சட்டங்களும், உடன்பாடுகளும் ஆகும்.

கு: இந்த பத்திரங்களில் இங்கிலாந்தின் அரசியல் சட்டடம் முழுவதும் அடங்கியிருக்கிறதா?

ஆ: இல்லை. இங்கிலாந்து அரசியல் சட்டத்தில், இந்த சட்ட அடிப்படையான பத்திரம் மட்டுமன்றி அநேக அரசியல் சட்ட பண்டை முறைகளும் அடங்கியுள்ளன.

கு: அரசியல் சட்டத் தொல்வழக்கு என்றால் என்ன?

ஆ: அரசியல் சட்டத்தொல்வழக்கு என்பது, இங்கிலாந்து அரசாங்கத்தின் பல அமைப்புக்களால் பின்பற்றப்படுகிற வழக்கம் அல்லது உடன்பாடு. அந்தத் தொல்வழக்குகள் நீண்டகாலமாக பழக்கத்திலிருந்து தொடர்ச்சியாகப் பின்பற்றப்பட்டு வருவதால் அவை சட்டத்தின் வலுவைப் பெற்றுள்ளன. அதாவது அவற்றைச் சம்பந்தப்பட்டவர்கள் எவரும் மீறமாட்டார்கள்.

கு: சட்டத்தின் வலுவைப் பெற்றுள்ள அரசியல் சட்டத் தொல்வழக்கு எதையாவது நீங்கள் கூறமுடியுமா?

ஆ: முடியும். எடுத்துக்காட்டாக இங்கிலாந்து அரசன் அல்லது அரசியின் நிலைமையையும், அதிகாரத்தை

யும் கவனிக்கவும். அவர் அல்லது அவள், இங்கிலாந்து சட்டசபையின் ஒரு பாகமாக இருப்பதால், பாராளுமன்றம் இயற்றும் சட்டத்திற்கு ஒப்புதல் கொடுக்க மறுக்க இயலுமானாலும், இந்த உரிமை, இந்த விலக்குரிமை கடந்த 100 ஆண்டுக் காலத்தில் பயன்படுத்தப்படவில்லை. அதைப் போலவே மந்திரிகளை நியமிக்கும் அல்லது வெளியேற்றும் உரிமையை இங்கிலாந்து அரசன் அல்லது அரசி பயனுறுத்துவதில்லை. இப்பொழுது அதைச் செய்வது, முதல் மந்திரி.

கு: இந்தியாவில் அத்தகைய அரசியல் தொல்வழக்குகள் இருக்கின்றனவா?

ஆ: ஆம், இருக்கின்றன. இங்கும் அரசியல் சட்டப்படி, சட்டசபையின் ஒரு பாகமாக விளங்கும் குடியரசுத் தலைவர், சட்டசபையால் நிறைவேற்றப்பட்ட எந்தச் சட்டத்துக்கும் அங்கீகாரமளிக்க மறுக்கலாம்; ஆனால் அவர் அப்படிச் செய்வதில்லை. அரசியல் சட்டப்படி மந்திரிகளை நியமிக்கும் உரிமை ஜனாதிபதியைச் சேர்ந்ததானாலும், உண்மையில் அந்த நியமனங்களைச் செய்வது பிரதம மந்திரி. யாரை வேண்டுமானாலும் பிரதம மந்திரியாக ஜனாதிபதி நியமிக்கலாம் என்றாலும், சட்டசபையில் பெரும்பான்மையினரின் ஆதரவைப் பெற்றவரையே பிரதம மந்திரியாக நியமிக்கிறார். ராஜ்யங்களிலுள்ள கவர்னர்களின் அந்தஸ்தும் அதிகாரமும் அப்படிப்பட்டவையே.

கு: எழுதப்பட்டதும், எழுதப்படாததுமாகிய அரசியல் சட்டங்களைத் தவிர, வேறு வகையான அரசியல் சட்டங்கள் உண்டா?

ஆ: உண்டு. கூட்டரசு சார்ந்த அரசியல் சட்டம், ஒருறுப்பு அரசியல் சட்டம் ஆகியவை உள்ளன.

கு: கூட்டரசு சார்ந்த அரசியல் சட்டம் என்ருல் என்ன?

ஆ: கூட்டரசு சார்ந்த அரசியல் சட்டம் என்பது, ஒரு கூட்டரசு நாட்டின் அரசியல் சட்டம். அதாவது கூட்டரசு நாடு என்பது, பல அரசுகளின் ஐக்கிய அமைப்பு அல்லது கூட்டு. அதற்கு இருவகையான அரசாங்கங்கள் உண்டு. கூட்டரசு சார்ந்த அரசாங்கம் மத்தியிலும், மாகாண அரசாங்கம் பல்வேறு மாகாணங்களிலும் இருக்கும். ஆனால் ஒருறுப்பு நாட்டில், அந்த நாடு முழுவதற்கும் ஒரே ஒரு அரசாங்கம்தான் இருக்கும்.

கு: கூட்டரசு சார்புள்ள நாடு, ஒருறுப்பு நாடு ஆகியவற்றிற்கு எடுத்துக்காட்டுகளைச் சொல்லுங்கள்?

ஆ: அமெரிக்காவின் ஐக்கிய அரசுகள், கானடா, ஆஸ்திரேலியா, மேற்கு ஜெர்மனி, ஆகியவை கூட்டரசு நாடுகள். இங்கிலாந்து, பிரான்ஸ், ஸ்பெயின், இத்தாலி ஆகியவை ஒருறுப்பு நாடுகள்.

கு: எல்லா நாடுகளும் ஏன் கூட்டரசு நாடுகளாகவோ, அல்லது ஒருறுப்பு நாடுகளாகவோ இருக்கக்கூடாது?

ஆ: உருவத்தில் பெரிதாக இருந்து, அதே சமயம் உரிமையுள்ள அரசாங்கங்களை விரும்புகிற நாடுகளுக்கு கூட்டரசு அமைப்பு தேவைப்படுகிறது. சிறிய அடக்கமான நாடுகளை நிர்வகிக்க ஒருறுப்பு நாடுகளில் ஒரு அரசாங்கம் இருக்கிறது.

கு: பெரிய நாடுகளுக்கும் ஏன் ஒருறுப்பு அரசாங்கங்கள் இருக்கக் கூடாது?

ஆ: ஏனென்ருல் திறமைக்கும் சுதந்திரத்திற்கும் மதிப்பளிக்கும் வகையில் ஓரிடத்திலிருந்து ஒரு பெரிய நாட்டை ஆள இயலாது.

கு: ஒரு கூட்டரசில் திறமையும் உரிமையும் எவ்வாறு கிடைக்கின்றன?

ஆ: ஆட்சிப் பொறுப்பை இரு வகை நிர்வாகிகளிடம் பகிர்ந்தளிப்பதால். ஒரு அரசின் ஆட்சி, ஒரு சிறு நிலப்பரப்பை நிர்வகிப்பதால், அதன் மீது அந்த இடத்து மக்கள் செல்வாக்குக் கொள்ளவும், அந்த அரசாங்கத்தில் பங்கு பெறவும் முடியும். ஆனால், அவர்கள் ஒரு மையம் உள்ள ஒரு பெரிய நாட்டின் அரசாங்கத்தில் அத்தகைய செல்வாக்கைப்பெற இயலாது. கூட்டரசு ஆட்சி நாடு முழுவதற்கும் பொது வான நாட்டுப் பாதுகாப்பு, அயல் நாட்டு விவகாரம், தொழில் வாணிகம், ரயில், தபால் தந்தி போன்ற நாட்டுத் தொடர்பு ஆகிய காரியங்களை நிர்வகிக்கும்.

கு: இந்தியா ஒரு கூட்டரசு நாடா? அல்லது ஒருறுப்பு நாடா?

ஆ: அது இரண்டுமன்று. அது கூட்டரசு அன்று. ஏனென்றால், ஒரு உண்மையான கூட்டரசில் அரசுகளின் நிர்வாகத்தில் விடப்படுகிற பொருள்களான கல்வி, நல்வழி, வேளாண்மை, கைத்தொழில் ஆகியவற்றின் மீதும் மத்திய அரசாங்கம் உரிமை கொண்டிருந்தது. அது ஒரு ஒருறுப்பு நாடுமன்று, ஏனென்றால், இந்தியாவில் பல அரசு உண்டு, அவை ஒவ்வொன்றிலும் பெருமளவுக்கு உரிமை கொண்ட ஆனால், மைய அரசாங்கத்தால் தலையிடக்கூடிய, ஒரு அரசாங்கம் இருக்கிறது.

கு: அப்படியானால், இந்தியாவின் அரசாங்கத்தையும், அதன் அரசியல் சட்டத்தையும் எவ்வாறு வர்ணிப்பீர்கள்?

ஆ: அதை அரை-குறைக் கூட்டரசு என்று நான் குறிப்பிடுவேன், ஏனென்றால், கூட்டரசு ஒருறுப்பு ஆகிய இரு அமைப்புகளின் பகுதிகளை அது பகிர்ந்து கொண்டிருக்கிறது.

# 4. அடிப்படை உரிமைகள்

கு: நீங்கள் அடிப்படை உரிமைகளைப் பற்றிக் குறிப்பிட்டீர்கள். இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட உரிமைகள் இருக்கின்றனவா?

ஆ: ஆம். பலவகையான உரிமைகள் இருக்கின்றன. ஒரு உரிமையுள்ள நாட்டின் உரிமைக்குடிகள் பெற்றிருக்க வேண்டிய உரிமைகள் இருக்கின்றன. எல்லாக் குடிகளும் பெறத் தேவையில்லாத சில உரிமைகளும் இருக்கின்றன.

கு: எல்லாக் குடிகளும் பெறத் தேவையற்ற உரிமைகள் உண்டா?

ஆ: ஆம். உரிமை நாடுகளில்கூட வாக்குரிமையும் சட்டசபைக்குத் தேர்ந்தெடுக்கப்படும் உரிமையும் எல்லாக் குடிகளுக்கும் கொடுக்கப்படுவதில்லை. சான்ருகச் சில உரிமை நாடுகளில், பிரான்சு, சுவிட்சர்லாந்து போன்ற குடியரசுகளிலும், பெண்களுக்கு வாக்குரிமை இல்லை. அந்த உரிமைகளை பயன்படுத்தத் திறமை உள்ளவர்களுக்கே அவை கொடுக்கப்படுகின்றன.

கு: எல்லாக் குடிகளும் பெறவேண்டிய உரிமைகள் இருக்கின்றனவா?

ஆ: ஆம். உரிமை நாடுகளில் உள்ள உரிமைக் குடிகள் அனைவரும் பெறவேண்டிய உரிமைகள் சில உண்டு, அவைகளுக்கு அடிப்படை உரிமைகள் என்று பெயர்,

கு: அவைகளை ஏன் அடிப்படை உரிமைகள் என்று கூறுகிறார்கள்?

ஆ: ஏனென்றால் உரிமைக் குடிகளின் வாழ்க்கைக்கு அவை அடிப்படையானவை. அவை, சுதந்திர மக்களின் வாழ்க்கையின் அடிப்படை.

கு: அத்தகைய உரிமைகளை இந்தியக்குடிகள் பெற்றிருக்கிறார்களா?

ஆ: ஆம். அந்த உரிமைகள் பல இருக்கின்றன, இந்திய அரசியல் சட்டத்தின் முதல் அத்தியாயங்களில் மிகப் பெரியதும் மிக முக்கியமானதுமான அத்தியாயமாக அவை அமைந்துள்ளன.

கு: இந்திய அரசியல் சட்டத்தில்தான் முதல் முதலாக அவை கொடுக்கப்பட்டனவா?

ஆ: இல்லை: அதற்கு முன்பே அவை இருந்தன. பிரிட்டிஷ் ஆட்சியில் அந்த உரிமைகளில் பல, பொதுச் சட்ட [காமன் லா) உரிமைகளாக இருந்தன.

கு: பொதுச் சட்ட உரிமைகள் என்பதன் பொருள் என்ன ?

ஆ: ஏனைய நாடுகளில் காணப்படும் இயற்கையான உரிமைகளின் ஆங்கிலப் பெயர், அது. பிரிட்டிஷ் ஆட்சியில் அவை இந்தியாவில் இருந்தன. அரசியல் சட்டத்தில் -அவைகளுக்குத் திட்டவட்டமான விளக்கமும், முழு வலிமையும் கொடுக்கப்பட்டுள்ளன. அந்த உரிமைகளை அரசியல் சட்டம் கொடுக்கவில்லை ஆனால் உத்திரவாதமளித்துள்ளது.

கு: அவற்றிற்கு அரசியல் சட்டம் எவ்வாறு உத்திரவாதமளித்துள்ளது ?

ஆ: இந்த உரிமைகள் மீறப்பட்டாலோ அல்லது இவற்றை யாராவது மறுத்தாலோ அவைகளைப் பெறப் பரிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

கு: இந்த அடிப்படை உரிமைகளின் நோக்கம் அல்லது பலன் யாது?

ஆ: அவற்றின் நோக்கம், இந்திய மக்களுக்கு உரிமையைக் கொடுப்பது.

கு: அது எவ்வாறு செய்யப்படுகிறது? அந்த உரிமைகள் அல்லது அவற்றில் முக்கியமானவை எவை?

ஆ: இந்திய அரசியல் சட்டத்தில் அடிப்படை உரிமைகள் 6 வகைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன.

கு: அவை எவை ?

ஆ: அவைகளாவன: (1) ஒத்த உரிமையை உத்தரவாதமளிக்கும் உரிமைகள் (2) தனிப்பட்ட உரிமையை உத்தரவாதமளிக்கும் உரிமைகள் (3) மத உரிமையை உத்தரவாதமளிக்கும் உரிமைகள் (4) கல்வி, கலாசார உரிமைகள், (5) சொத்துரிமை (6) சட்ட அடிப்படையான பரிகாரத்துக்கு உரிமை.

கு: ஒத்த உரிமை எதை உத்தரவாதமளிக்கிறது?

ஆ: சட்டத்தின் முன்னிலையில் எல்லாக் குடிகளும் ஒத்தவர்களே என்பதை உத்திரவாதமளிக்கிறது.

கு: சட்டத்தின் முன்னிலையில் ஒத்த உரிமை என்றால் என்ன ? அதில் என்ன அடங்கியிருக்கிறது?

ஆ: சாதி, மதம், இனம் அல்லது பிறப்பிடம் காரணமாக எந்தக் குடியிடமும் எந்தச் சட்டமும் பொது அமைப்பும் ஓரம் (பாரபட்சம்) காட்டக்கூடாது. பொதுவேலைகளில் ஒத்தவாய்ப்பு அளிக்கப்பட வேண்டும். தீண்டாமைக்குஇசைவுதரப்பட மாட்டாது, ஆகியவை.

கு: அடுத்தபடியாக முக்கியமான உரிமைகள் யாவை ?

ஆ: தனிப்பட்டவர் உரிமைக்கு உத்திரவாதம் அளிக்கும் உரிமைகள்.

கு: தனி உரிமையில் என்ன அடங்கியிருக்கிறது ?

ஆ: பேச்சுரிமை, எழுத்துரிமை, சட்ட அடிப்படையான காரியத்திற்காக அமைதியாக படைக்கலமில்லாமல், கூடி சங்கம் அமைக்கும் உரிமை, இந்தியாவில் உரிமையுடன் பயணம் செய்யும் உரிமை; நாட்டின் எந்தப் பாகத்தில் வேண்டுமானாலும் தங்கிக் குடியிருக்கும் உரிமை, சொத்து சேர்க்கவும், வைக்கவும், விற்கவும் உரிமை, எந்தத் தொழிலையோ அல்லது வாணிகத்தையோ நடத்தும் உரிமை. இந்த உரிமைகள், வாழ்க்கையையும் சொந்த உரிமையையும் பாதுகாக்கின்றன. குடிகளைக் கைது செய்து விசாரணையில்லாமலும் கோர்ட்டால் தண்டனை விதிக்கப்படாமலும் சிறையிலடைப்பதைத் தடுக்கின்றன.

கு: மத உரிமை, ஏன் சிறப்பாகக் குறிப்பிடப்பட்டு உத்திரவாதமளிக்கப்பட்டுள்ளது?

ஆ: இந்தியாவில் பெரும்பாலனவரின் மதம் ஒன்ருக இருந்தபோதிலும், இங்குப் பல மதங்கள் உண்டு. ஏனைய மதங்களைப் பின்பற்றுவதில் பெரும்பாலான மதத்தினர் முட்டுக்கட்டை போடாமல் தடுப்பதற்காக அந்த உரிமை அளிக்கப்பட்டுள்ளது. சரித்திரப்படி சமயப் பொறுமைத் தன்மைக்கு இந்தியா புகழ் பெற்றது. சமயப் பொறுமைத் தன்மை என்ற நற்குணத்தை நீடிப்பதற்காக அரசியல் சட்டத்தில் தனி ஏற்பாடு செய்வது சரியானதும் பொருத்தமானதும் ஆகும் என்று அரசியல் சட்ட அமைப்பாளர்கள் கருதினர்கள்.

கு: இந்திய அரசியல் சட்டப்படி, இந்த சமய உரிமையில் என்ன அடங்கி யிருக்கிறது?

ஆ: சமயம் மாறும் உரிமை. எந்தச் சமயத்தையும் தழுவி பின்பற்றிப் பரப்பும் உரிமை ஆகியவை அதில் அடங்கியிருக்கின்றன.

கு: உரிமைகளின் அடுத்த வகை எது?

ஆ: சிறுபான்மையினரின் நலன்களைப் பாதுகாத்து வளர்க்கும் உரிமைகள்.

கு: சிறுபான்மையினரின் உரிமைகளுக்குப் பாதுகாப்பு தேவைப்படுவது ஏன்? தனிப்பட்டவர்களின் உரிமைகளில் அவர்களுடைய உரிமைகள் அடங்கவில்லையா?

ஆ: சிறுபான்மையினருக்குப் பாதுகாப்புக் கட்டாயம் தேவை. ஏனென்றால், எண்ணிக்கைகளாலும் பெரும்பான்மையினராலும் உருவாகும் அரசாங்கமான குடியரசில் சிறுபான்மையினரின் நலனும் உரிமைகளும் மீறப்படக்கூடும் அல்லது புறக்கணிக்கப் படக்கூடும். மனிதன் சமூகப் பிராணியாக இருப்பதால் சமுதாயங்களையும் கூட்டரசுகளையும் அமைக்கிறான்; ஒன்றுபட்ட வாழ்க்கை நடத்தும்போது, அவன் தனிப்பட்டவனின் உரிமைகளைப் பெற்றிருக்கிறான்.

கு: சிறுபான்மையினரின் உரிமைகள் அனைத்திற்கும் அரசியல் சட்டம் உத்திரவாதமளிக்கிறதா?

ஆ: இல்லை. அவர்களுடைய கல்வி, கலாசார உரிமைகளுக்கு மட்டும் அளிக்கிறது.

கு: அவை எவை?

ஆ: தங்களுடைய மொழியை அல்லது தனிக் கலாச்சாரத்தை வளர்ப்பதற்காக கல்வி, கலாச்சார அமைப்புகளை ஏற்படுத்தி நடத்தும் உரிமை.

கு: உரிமைகளின் வேறு வகைகள் இன்னும் இருக்கின்றனவா?

ஆ: சொத்துத் தொடர்பான உரிமை ஒன்றிருக்கிறது. சொத்துரிமை உத்திரவாதமளிக்கப்பட்டிருப்ப

துடன், சட்டப்படிதான் அதை குடியிடமிருந்து பெறலாம்.

கு: சட்டத்தால் பறிக்கப்படக் கூடிய உரிமையால் என்ன பலன்?

ஆ: உரிமைகளுக்கு முழுமை உள்ள போதிலும், அவற்றை பயன்படுத்துவதில் முழுமை இல்லை என்பதை நீ நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும். தாங்கள் வசிக்கும் சமூகத்தின் தேவைக்கு உகந்த வகையில் குடிகளின் உரிமையைப் பயனுறுத்த வேண்டும். சமூகம் அல்லது நாட்டிற்கு அழிவும் பேரிடரும் தோன்றும்படியாக உரிமைகளைப் பயன்படுத்த முடியாது. சான்ருக மதத்தைப் பரப்பும் உரிமையை அது பரப்பப்படும் இடத்தில் குழப்பம் அல்லது கலவரம் ஏற்படும் வகையில் பயன்படுத்த கூடாது. அவ்வாறே சமூகத்தின் முன்னேற்றத்துக்கு அல்லது வளமைக்குத் தீங்கு விளைவிக்கும்படியாக சொத்துரிமையை ஒருவன் பயன்படுத்தக் கூடாது. எடுத்துக் காட்டாக ஒரு சாலையையோ அல்லது புகைவண்டிப் பாதையையோ அமைக்க ஒரு துண்டு நிலம் தேவைப்பட்டால், நிலச் சொந்தக்காரன் அதைக் கொடுக்க மறுத்து நாட்டின் வளர்ச்சியைத் தடுக்கக்கூடாது.

கு: ஆகவே யார் வேண்டுமானாலும் தன் விருப்பப்படி உரிமைகளை மறுக்கவோ மீறவோ முடியுமா?

ஆ: முடியாது. உரிமை நாடுகள் எல்லாவற்றிலுமுள்ள சட்டத்திற்குட்பட்ட ஆட்சியின்படி, உரிமைக்குப் பழுது ஏற்பட்டால் அதைத் தனிப்பட்டவரோ அல்லது அரசாங்கமோ, யார் செய்தாலும் நீதி மன்றத்தில் தன் செயல் முறையானதென்று மெய்ப்பிப்பது கட்டாயமாகும்.

கு: உரிமைகளை மீறியதற்காக அரசாங்கம் அல்லது அரசாங்க அதிகாரி மீது நடவடிக்கை எடுக்க முடியுமா?

ஆ: முடியும். உரிமைகள் மீறப்பட்டால் அவற்றிற்குப் பரிகாரமாக ஒரு முழுச் சட்டத் தொகுப்பு உள்ளது.

கு: அவை எவை?

ஆ: ஹேபியஸ் கார்ப்பஸ்ரிட், மாண்டமஸ் ரிட், செர்ஷியோரி ரிட், புரொஹிபிஷன் ரிட் என்று சொல்லப்படும் நீதிச் சட்டங்கள் உள்ளன. இந்தப் பரிகாரங்களை விரிவாக விளக்குவதற்கு ஒரு சட்டப் புத்தகம் தேவைப்படும். ஆனால், இந்த ரிட்களை (கட்டளைகளை) நீதிச் சபை பிறப்பிக்குமானால் மக்களின் உரிமைகளை அரசாங்கம் அல்லது அதிகாரி பறிப்பதை அவை தடுக்கும் என்பதை நீ அறிந்தால் போதும்.

# 5. நலவழி நாடும், தொழில் நாடும்

கு: நீங்கள் கூறும் கடமைகளைக் கொண்ட நாடு, மக்களின் நலத்தை வளர்க்க வேண்டும் என்று சொல்லும் தற்காலக் கொள்கைகளுக்கு முரண்பட்டதல்லவா?

ஆ. இல்லை. மக்களின் நலத்தையும், கல்வியையும், நலவழியையும், பொருளாதார வளத்தையும் வளர்க்க நாடும் (அரசாங்கம்) முழு முயற்சி செய்ய வேண்டும்

கு: அப்படியானல் மக்களின் கல்வி பொருளாதாரம், சமூகவாழ்க்கை முழுவதையும் உருவாக்கும் பொறுப்பை அது ஏன் ஏற்கக்கூடாது?

ஆ: முதலாவதாக அது மிகப் பெரிய பொறுப்பு. மக்களின் முழுக் கல்விக்கு உதவவும், அவர்களின் பொருளாதார, சமூக வாழ்க்கை முழுவதையும் உருவாக்கவும் நாடு பொறுப்பேற்ருல் ஏராளமான பணம் தேவைப்படும்.

கு: சோவியத் ரஷ்யாவில் அது செய்யப்படுவதில்லையா?

ஆ: இல்லை. ஆனல் சோவியத் அரசாங்கம் வெளியிட்டுள்ள அரிக்கைகளை நாம் நம்பினலும், அந்த அறிக்கைகள் வெளியிடத்து பாரபட்சமற்ற பார்வையாளர்களால் மேற்பார்வையிடப்படாதவை, அங்குள்ள கல்வி நிலையும் பொருளாதார வளமும், இங்கிலாந்தையும் அமெரிக்காவையும் (U. S. A.) விட உயர்ந்தவையன்று. அந்த இரு நாடுகளில் கல்வி முழுவதும், மக்

களின் சமூகப் பொருளாதார வாழ்க்கையும் தேசத்தின் பொறுப்பிலில்லை.

கு: சில நாடுகளில் முன்னேற்றம் அடைய அது ஒன்று தான் வழியாக இருக்குமானால், அதைப் பின்பற்றுவது அறிவுடைமையல்லவா?

ஆ: இல்லை. நான் ஏற்கனவே கூறியபடி மனித உரிமையை இழந்து, முன்னேற்றம் அடையக்கூடாது— அது தேவைப்பட்டதன்று.

கு: அது எவ்வாறு?

ஆ: தனிப்பட்டவர் முயற்சியுடன், நாடும் செயலாற்றுவதன் மூலம் முன்னேற்றம் பெறலாம்.

கு: அது எவ்வாறு இயலும்?

ஆ: சில நாடுகளில், சில மக்களிடம், சில சூழ்நிலைகளில், எடுத்துக்காட்டாக மக்கள் ஏழைகளாவும் பிற்பட்டவர்களாகவும் இருந்தால், மக்களுக்கு கல்வி புகட்டுவதில் தேசம் முயற்சி எடுக்க வேண்டியது அவசியம். ஆனால், மக்களின் கல்விச்செலவை ஏற்பதைத் தவிர தேசம் வேறொன்றும் செய்யக் கூடாது.

கு: ஏன்?

ஆ: ஏனென்றால் கல்வி, கலாச்சாரத்தைப் போல, வளர்ச்சியடைய சுதந்திரம் அவசியம். பரிசோதனைகளால் அது செழித்தோங்குகிறது. தனிப்பட்டவர்களின் பள்ளிக்கூடங்களை அமைக்கவும் தனிப்பட்டவர்கள் அல்லது ஸ்தாபனங்களின் பணத்தால் அவை செயல்படவும் அனுமதித்தால்தான் அது இயலும்.

கு: தேசம், தனிப்பட்டவர் ஸ்தாபனங்கள் ஆகிய இரண்டிடமும் விடக்கூடிய இதர நடவடிக்கைகள் இருக்கின்றனவா?

ஆ: சில சமயங்களில் பொருளாதார, சமூக வாழ்க்கையில் தேசம் தலையிட நேரலாம்.

கு: சிலவற்றைக் கூற முடியுமா?

ஆ: சில தொழில்கள் அரசியல் முதன்மை கொண்டிருப்பதால், அவற்றை நாடு (அரசாங்கம்) ஏற்று நடத்துவது கட்டாயமாகிறது.

கு: எடுத்துக் காட்டாக?

ஆ: துப்பாக்கிகள், பீரங்கிகள், வெடிமருந்துகள் தயாரிப்பு போன்ற நாட்டின் பாதுகாப்புத் தொடர்புற்ற தொழில்கள் இருக்கின்றன. மற்றவை ரெயில், தபால் தந்தி. ஏனென்ருல் அவற்றின் மூல முதன்மையைக் கருதி அரசாங்கப் பொறுப்பில் அவற்றை விடுவது தான் பாதுகாப்பானது. மற்றும் அந்தக் காலத்தில் அவற்றை ஏற்படுத்த தனிப்பட்டவரின் மூலப் பொருள் முன்வரவில்லே. காடுகள் இயற்கைச் செல்வமாக இருப்பதால், அவற்றை நாட்டு நலனுக்குப் பயனுறுத்த வேண்டும். அவற்றைத் தனிப்பட்டவரின் தலைமையில் விடுவது அறிவுடைமையாகாது.

கு: பஸ்கள், டிராம்கள் போன்ற இதர போக்குவரத்து சாதனங்களேயும் அரசாங்க நிர்வாகத்தின் கீழ்க் கொண்டுவரக் கூடாதா?

ஆ: கூடாது. ஏனென்ருல் அந்தத் துறையில் தனிப்பட்டவர்கள் ஏற்கனவே ஈடுபட்டிருக்கிருர்கள். அது நன்ருக நடைபெற்று வருகிறது. அரசாங்க பஸ் நிர்வாகத்தைவிட அது மக்களுக்கு நன்ருகச் சேவை செய்யும், ஏனென்ருல் போட்டியின் தூண்டுதல் காரணமாகத் தனிப்பட்டவர் தொழில் நடத்துவதில் காணப்படும் திறமை, அரசாங்க தனி உரிமையில் இருக்காது.

கு: அரசாங்கம் என்ன செய்யவேண்டும், என்ன செய்யக் கூடாது, தலையிடுவதில் அது எந்த அளவு

போகலாம், அது எங்கு நிற்க வேண்டும் என்பதை உறுதிப்படுத்துவது எது?

ஆ: நாடு தன்னைப் பாதுகாத்துக்கொள்ளவும், மக்களின் நலனைப் பேணிவளர்க்கவும், தேவையான எல்லா வற்றையும் அது செய்ய வேண்டும். நாட்டைப் பாது காப்பதற்குத் தேவையானது எது என்பதில் எல் லாருக்கும் கருத்தொற்றுமை இருந்த போதிலும், மக்களின் நலனை வளர்ப்பதில் அது என்ன செய்ய வேண்டும், எவ்வாறு செய்ய வேண்டும் என்பதில் கருத்து வேறுபாடு உள்ளது.

கு: மக்களின் நலனை வளர்ப்பதில் அது என்ன செய்ய வேண்டும் என்பதை உறுதி செய்யும் அளவுகோல் எது?

ஆ: தன் நலத்தையும், சமுதாய நலத்தையும் வளர்ப் பதில் தனிப்பட்டவருக்கு உள்ள உரிமையில் நாடு குறுக்கிடாமலிருக்க வேண்டும். இது விஷயத்தில் நாடு என்ன செய்தாலும், அது தனிப்பட்டவனின் முயற்சியையும் செயலையும் கெடுப்பதாக இருக்கக் கூடாது, ஏனென்றால் தனிப்பட்டவருக்காகத்தான் நாடு இருந்து, செயலாற்றுகிறது.

கு: அவற்றை எடுத்துக் காட்டுடன் தனித்தனியாகச் சுட்டிக்காட்டுவீர்களா?

ஆ: முதலாவதாக, பழைய காலத்தின் தவறுகள் காரண மாகத் தோன்றியுள்ள தனிப்பட்டவரின் முன்னேற் றத்துக்குத் தடையாக இருப்பவற்றை நாடு நீக்க வேண்டும். சான்றாக, நல்வாழ்க்கைக்கு முட்டுக் கட்டைகளாக உள்ள சேரிகள், சாக்கடையற்ற தெருக்கள், கழிவு நீர்க்குழிகள், தவறான முறையில் அமைந்துள்ள கிராமங்கள் அல்லது நகரங்கள், கெடு

தலான அல்லது வசதியற்ற வீடுகள், மதுபான ஆசை போன்றவற்றை அது அகற்ற வேண்டும்.

கு: அதற்குப் பிறகு?

ஆ: தனிப்பட்டவர்கள் செயலாற்ற வசதி செய்யும் சூழ்நிலையை உண்டாக்கிப்பேணுவது, கல்வி, கலாச்சாரம் நலவழி, சமூகப் பொருளாதார முன்னேற்றம் ஆகியவற்றிற்கு வசதிசெய்து கொடுப்பது, ஆகியவற்றைத் தனிப்பட்டவரின் உரிமைக்குப் பழுதில்லாதபடியும், நாட்டின் பொருள் நிலைக்கு ஏற்றவாறும் நாடு செய்ய வேண்டும்.

கு: அதாவது க்ஷேம நாட்டை நீங்கள் ஆதரிக்கிறீர்கள் அல்லவா?

ஆ: ஆம்.

கு: க்ஷேம நாட்டின் தகுதியை ஏற்றுக்கொண்டதால், நாம் ஏன் இன்னும் ஒரு அடி முன்னல் சென்று புதிய தொழிற்சாலைகளைக் கட்டி நடத்தி தனிப்பட்டவர்களின் பைகளுக்குள் லாபம் போகாமல், நாட்டின் கஜானக்களுக்குள் போகும் வண்ணம் நாட்டின் பொருளாதார முன்னேற்றத்தின் பொறுப்பை அரசாங்கம் ஏற்க ஏன் அனுமதிக்கக் கூடாது?

ஆ: அரசாங்கம் தொழில் செய்யக்கூடாது. ஏனென்ருல், அது அரசாங்கத்தின் தொழிலன்று.

கு: நீங்கள் கூறுவதன் பொருள் என்ன?

ஆ: நான் கூறுவது என்னவென்ருல், தொழில்களில் ஈடுபடுவது அரசாங்கத்தின் தொழிலன்று. தொழில்செய்வது தனிப்பட்டவரின் தொழில். இயற்கையாகவும், பலநூற்ருண்டுகளின் பழக்கத்தாலும் ஒருவன் தானகவோ அல்லது தன்னிச்சையாக மற்றவர்களுடன் இணைந்தோ நிலத்தில் பயிரிட்டான்; தறியில்

உழைத்தான்; நிலக்கரியையும் தங்கத்தையும் தோண்டியெடுத்தான்; பொருள்களை வாங்கினுன்; விற்ருன்; முதலில் குடிசைத் தொழில்களை ஏற்படுத்தினுன்; பிறகு தற்காலத்தில் காணப்படும் மாபெரும் தொழிற்சாலைகளைக் கட்டினுன். இவ்வாறு தனக்கும், தன் குடும்பத்துக்கும் தேவையான பொருட்களைப் பெற்ருன். பல நூற்ருண்டுகளாக இந்த முறை நன்ருக வேலை செய்துள்ளது. இப்பொழுது அதை மாற்றுவதற்கும், நாடு செய்யக்கூடாத வேலையைச் செய்யும் பொறுப்பை அதன் மீது சுமத்துவதற்கும் காரணமில்லை.

கு: ஆனுல், மக்களுக்காக நாடு இருப்பதால், மக்களுக்காக இந்த வேலையையும் அது ஏன் செய்யக்கூடாது?

ஆ: ஏனென்ருல் இந்த வேலை நாட்டைச் சேர்ந்ததன்று.

கு: ஆனுல், தேசிய தொழிற்சாலையின் லாபம் முழுவதும் தேசக் கஜானுவிற்குப் போய், அதனுல் மக்களுக்குப் பயன் ஏற்படாதா?

ஆ: ஆம். அது அவ்வாறு இருக்கலாம். ஆனுல். வேறு விஷயங்களையும் கவனிக்க வேண்டும்.

கு: அவை எவை?

ஆ: தேசியத் தொழிற்சாலை, ஏகபோக உரிமையாகிவிடும், போட்டியில்லாத நிலையில் குறைந்த கட்டணத்தில் மக்களுக்கு சேவை (அல்லது பொருள்) கிடைக்காது மற்றும் அதில் திறமையிருக்காது. நாட்டின் வருமானத்தை அதிகரிக்க வேண்டுமானுல், தனிப்பட்டவர் தொழிலின் லாபத்தின் மீதும், வருமானத்தின் மீதும் வரி விதித்துப் பணம் பெறலாம்.

கு: அப்படிப்பட்ட நாட்டுக்கு வேறு மறுப்புக்கள் உண்டா?

ஆ: ஆம். மக்களின் பொருளாதார வாழ்க்கையில் ஏக போக உரிமை பெறும் நாடு, ரஷ்யாவைப் போல முழு வல்லமை பொருந்தியதாகிவிடும். தனிப்பட்ட வர் உரிமை மறைந்துவிடும். தனிப்பட்டவன், நாட் டின் குடியாக இல்லாமல் சேவகனுவான்.

கு: க்ஷேம நாடு தொழில் நாடு ஆகியவற்றில் எது சிறந்தது?

ஆ: க்ஷேமநாடு-தொழில் நாடு அன்று - நாடு என்ற கருத்துக்கே தொழில் எதிரிடையானது—தொழிலின் அழிவு நிழலில் நாடு மறைந்து போகும் என்று தொழில் நாடு உண்டாக்கிய லெனின் தீர்க்கதரி சனமாகக் கூறியிருக்கிருர்.

# 6. மனிதர்கள், திட்டங்களன்று

கு: க்ஷேம நாட்டின் கொள்கைகளையும் திட்டங்களையும் எவ்வாறு நிறைவேற்றுவது?

ஆ: நம் நாட்டைப் போன்ற உரிமைக் குடியரசு நாட்டில், விவாதத்தின் மூலமும், நமது பிரதிநிதித்வ சபைகளிலும் சட்டசபைகளிலும் செய்யப்படும் முடிவுகள் மூலமும் அவை நிறைவேற்றப்படும்.

கு: அது ஏன்?

ஆ. ஏனென்றால், இந்திய அரசியல் சட்டத்தின்படி, மக்களின் வேலையிலும் வாழ்க்கையிலும் மாறுதல்களை உண்டாக்கும் எல்லா புதிய சட்டங்களையும் முடிவுகளையும், அந்தப் பிரதிநிதித்வ சபைகள், சட்டசபைகள் ஆகியவற்றினால் அல்லது அவற்றின் அனுமதியின் பேரில் செய்ய வேண்டும்.

கு: அது ஏன் அவ்வாறிருக்க வேண்டும்?

ஆ: ஏனென்றால் ஒரு உரிமைக் குடியரசு நாட்டில் சட்டசபைகள், மக்களின் பிரதிநிதித்வ சபைகள் ஆகும். ஜனநாயகத்தில் முடிவான ஆட்சியாளர்களாக விளங்கும் மக்கள், சட்டசபைகளிலுள்ள தங்களுடைய பிரதிநிதிகள் மூலமாகத் தங்களுடைய வாழ்க்கையில் மாறுதல்களை உண்டாக்கக் கூடிய அல்லது தங்களுடைய சமூகப் பொருளாதார முன்னேற்றத்துக்கு உதவக் கூடிய சட்டங்களையும் முடிவுகளையும் செய்கிறார்கள்.

கு: இந்தச்சட்டங்களையும் முடிவுகளையும் மக்களே நேரடியாகச் செய்ய முடியாதா?

ஆ: தற்கால நரடு பெரிதாக இருப்பதால் அவர்களால் முடியாது. ஏதன்ஸ் போன்ற பழங்கால நாடுகளில் மக்கள் குறைந்த பேர்களாக இருந்ததால், அவர்களால் நேரடியாகச் சட்டங்களையும் முடிவுகளையும் செய்ய இயன்ற போதிலும், 10 லட்சம் சதுர மைல் நிலப்பரப்பும், 30கோடி மக்கள் தொகையும் கொண்ட இந்தியா போன்ற தற்கால நாட்டில் அது இயலாது. ஆகையால் தற்கால நாடுகள் முதலாவதாக ஏற்பட்ட சமயத்தில், சட்டசபைகள் உண்டாக்கப்பட்டன.

கு: பிரதிநிதித்வ சபை, சட்டசபை என்ருல் என்ன?

ஆ: பிரதிநிதித்வ சபை, சட்டசபை என்பது, மக்களுடைய பிரதிநிதிகளால் அமைக்கப்படும் சபை. சட்டங்களையும், சில முடிவுகளையும் செய்யும் பொறுப்பு அதனிடம் விடப்பட்டுள்ளது.

கு: இந்த மக்களின் பிரதிநிதிகள் எவ்வாறு கிடைக்கிருர்கள்?

ஆ: அவர்களைக் காலாகாலத்தில் மக்கள் தெரிந்தெடுக்கிருர்கள்.

கு: அது எவ்வாறு செய்யப்படுகிறது?

ஆ: காலா காலத்தில், பொதுவாக ஐந்தாண்டுகளுக்கு ஒரு முறை, நாட்டின் பிரதிநிதித்வ சபைகளுக்கும், சட்டசபைக்கும் தங்களுடைய பிரதிநிதிகளைத் தெரிந்தெடுக்க மக்கள் அழைக்கப்படுகிருர்கள்.

கு: தெரிந்தெடுக்கப்படுபவர்கள் மக்களின் பிரதிநிதிகளாவதால், யாரை வேண்டுமாஞலும் தேர்ந்தெடுக்கக்கூடாதா?

ஆ: கூடாது — யாரை வேண்டுமானுலும் தேர்ந்தெடுக்கக்கூடாது.

கு: ஏன்? சரியான திட்டங்களேசட்டசபை நிறைவேற்றுவதுதான் முக்கிய விஷயமாகஇருக்குமாஞல்,யாரைத் தெரிந்தெடுத்தால் என்ன? "திட்டங்கள், மனிதர்களன்று" என்பது பொருத்தமான கோஷம் அல்லவா?

ஆ: நாட்டின் முன்னேற்றத்திற்கு திட்டங்கள் அவசியமான விஷயங்களாக இருந்த போதிலும், மக்களின் பிரதிநிதிகளாகத் தகுந்த மனிதர்களேத் தெரிந்தெடுப்பதும் முக்கியமானது- "திட்டங்கள், மனிதர்களன்று" என்பது உண்மையான கொள்கையன்று. 'பர்க்' என்ற சிறந்த அரசியல் எழுத்தாளர் அதை "திட்டங்கள் மனிதர்களன்று என்ற போலிக்கூற்று" என்று குறிப்பிட்டுள்ளார்.

கு: அது எவ்வாறு?

ஆ: திட்டங்கள் எவ்வளவு சிறந்தவையாக உள்ள போதிலும், சட்டசபைக்கு அங்குள்ளவர்களால் அவை கொண்டுவரப்படவேண்டும், அவர்களால் அவை விவாதிக்கப்பட வேண்டும், விவாதத்திற்குப் பிறகு அவர்களால் திருத்தப்படவேண்டும், இறுதியில் அவை நிறைவேற்றப்படவேண்டும் அல்லது வேறு முடிவுகள் செய்யப்படவேண்டும். சட்டசபையிலுள்ளவர்கள், தகுதியுள்ள மனிதர்களாக இல்லாவிடில், அவசியமற்ற சட்டங்களே அவர்கள் கொண்டுவரக்கூடும் அல்லது சட்டசபையில் நல்ல சட்டம் நிறைவேறும் போதும் அதை அவர்கள் கெடுக்கக்கூடும் அல்லது சட்டமாக அது நிறைவேருதபடி அவர்கள் தடுக்கக் கூடும்.

கு: அது எவ்வாறு ஏற்படமுடியும்?

ஆ: மக்களுக்காக அதிக சாலைகளை அமைப்பதற்காக அல்லது பள்ளிக்கூடங்களைக் கட்டுவதற்காக நாட்டு வருமானத்தை அதிகரிக்கும் நோக்கத்துடன் ரூபாய் ஒரு லட்சத்திற்கு மேற்பட்ட வருமானங்களுக்கு வரி விதிக்கும் சட்டமொன்று சட்டசபையில் கொண்டு வரப்பட்டதாக வைத்துக்கொள்ளுங்கள். அந்தச் சட்டத்தால் பாதிக்கப்படுபவர்கள், அரசாங்கத்தின் அந்த வரிச்சட்டத்தை ஆதரித்து வாக்களிக்க வேண்டாம் என்று சட்டசபை உறுப்பினர்களை வற்புறுத்தினால், அது நிறைவேருமல் தோற்றுவிடும்.

கு: அது வெறும் கற்பனை – அத்தகைய நிகழ்ச்சிகள் எங்காவது ஏற்பட்டிருக்கின்றனவா?

ஆ: ஆம். பிரதிநிதித்வ சபைகள் மூலம் அரசாங்கத்தை நடத்தும் முறை ஆரம்பமானதிலிருந்து அவை நிகழ்ந்து வருகின்றன.

கு: நல்ல திட்டங்கள் நிறைவேறுவதைத் தடுக்க, சட்ட சபையிலும், பிரதிநிதித்வ சபையிலும் உள்ள மனிதர்களை எந்த நோக்கங்கள் தூண்டிவிட்டுள்ளன?

ஆ: பண நோக்கம் எப்பொழுதுமிருக்க வில்லை. ஆனால், சட்டசபையிலுள்ள மனிதர்களைச் சுயநலமும், நாட்டுப்பற்றின்மையும், குறுகிய எண்ணமும், கட்சி நோக்கமும், நாட்டு நலனைப் பலியிடச் செய்து, தனிப்பட்டவர்கள் அல்லது தொகுதியினர் அல்லது கட்சிகளின் நலனை வளர்க்கச் செய்துள்ளன.

கு: சில எடுத்துக்காட்டுகளை நீங்கள் கூற முடியுமா?

ஆ: இங்கிலாந்தில் 18–ம் நூற்ருண்டில், அயர்லாந்துக்கு சமய உரிமை, இந்தியாவில் வாரன் ஹேஸ்டிங்ஸ் என்பவரால் நடத்தப்பட்ட தீய ஆட்சியைத் திருத்துவது, அமெரிக்க குடியேற்ற நாடுகளுக்கு சுயாட்சி, 19-ம் நூற்ருண்டில், இந்தியாவுக்குச் சுயாட்சி, அயர்

லாந்துக்கு சுயாட்சி, பிரபுக்கள் சபை சீரமைப்பு போன்ற நல்ல சட்டங்கள் மனிதர்களுடைய வாக்குகளால் (வோட்டுகளால்) தோற்கடிக்கப்பட்டன. அவர்கள் தேசநலம், சுதந்திரம், நேர்மை ஆகியவற்றைப் புறக்கணித்து தங்களுடைய நலன், தங்களுடைய சொத்துக்கள், தங்களுடைய உரிமைகள், தங்களுடைய கட்சியின் நலம், தங்களுடைய வகுப்பு ஆகியவற்றையே வளர்த்தார்கள்.

கு: இந்தியாவில் அத்தகைய நிகழ்ச்சிகள் ஏற்படக் கூடுமா?

ஆ: ஏற்படக்கூடும்.

கு: முடிவு என்ன?

ஆ: அரசாங்கம் அல்லது கட்சி அல்லது சட்டசபையின் திட்டங்களைப் போலவே மனிதர்களும் முக்கியமானவர்கள்.

கு: தகுதியுள்ள மனிதர்களை எப்படிப் பெறுவது?

ஆ: ஒவ்வொரு தேர்தலிலும் மனிதர்களைத் தேர்ந்தெடுக்கும் உரிமை பெற்றுள்ள மக்கள், தங்களுடைய உரிமையை அறிவுடனும் கவனமாகவும் பயன்படுத்தி நாட்டுப் பற்றுள்ள, தகுதியுள்ள, பாரபட்சமற்ற மனிதர்களைத் தங்களுடைய பிரதிநிதிகளாகத் தேர்ந்தெடுத்து, நாட்டின் பிரதிநிதித்வ சபைகளுக்கும் சட்டசபைகளுக்கும் அனுப்பவேண்டும்.

கு: அது எவ்வாறு செய்யப்படுகிறது?

ஆ: தேர்தல் சமயத்தில் வாக்குரிமையைத் தகுந்தவாறு பயன்படுத்துவதன் மூலம்.

# 7. வாக்காளரும், தேர்வு நாடுபவரும்

கு: வாக்கு (வோட்டு) என்றால் என்ன?

ஆ: வாக்கு என்பது, ஒரு சட்டசபைக்கு அல்லது பிரதிநிதித்வ சபைக்கு அல்லது பதவிக்கு மற்றொருவரைத் தேர்ந்தெடுப்பதற்கு ஒருவர் தன் விருப்பத்தைத் தெரிவிப்பதாகும்; அல்லது ஒரு பிரதிநிதித்வ சபையில் அல்லது வேறு சபையில் அல்லது கூட்டத்தில் அங்கு எடுத்துக்கொள்ளப்படும் விஷயத்தின் மீது அதன் உறுப்பினர் வெளியிடும் கருத்தாகும்.

கு: யாருக்கு இந்த உரிமை இருக்கிறது?

ஆ: அரசியல் சட்டத்தின் கீழ் அல்லது சம்பந்தப்பட்ட சட்டத்தின் கீழ் யாருக்கு அந்த உரிமை யளிக்கப்பட்டிருக்கிறதோ, அவருக்கு அது கிடைக்கிறது.

கு: ஒவ்வொரு குடியும், இயற்கையான உரிமையாக அதைப் பெறுவதில்லையா?

ஆ: இல்லை, அது, வாழும் உரிமை, சுதந்திர உரிமை அல்லது சொத்துரிமை போன்ற இயற்கை உரிமையன்று. அது அவ்வாறு இருக்குமாயின், அது எல்லா நாடுகளிலும், எல்லாக் காலங்களிலும் இருந்திருக்கும். அது ஒரு சலுகை, அரசியல் வளர்ச்சியில் ஒரு குறிப்பிட்ட கட்டத்தை அடைந்த மக்களுக்கு அளிக்கப்படுவது. இங்கிலாந்தில் அதற்கு 'பிரான்சைஸ்" என்று பெயர். அதன் பொருள். ஒரு மனிதனுக்கு

அல்லது ஒரு அமைப்பிற்கு அளிக்கப்பட்ட சலுகை அல்லது தனி உரிமை. பாராளுமன்றத் தேர்தலில் வாக்களிக்கும் உரிமையை எல்லாக் குடிகளும் பெற்றிருக்கவில்லை. 1834-ம் வருடத்திய சீர்திருத்தச் சட்டத்திற்கு முன்பாக, அது ஒரு சில நூறு ஆயிரம் பேர்களின் தனிச் சலுகையாக இருந்தது. 1834-ம் வருடச் சட்டத்தின்படி உயர்தர மத்திய வகுப்பினருக்கு வாக்குரிமை கிடைத்தது. 1867, 1885-ம்வருடங்களில் இயற்றப்பட்ட வாக்குரிமைச் சட்டங்களின்படி கீழ் மத்தியதர வகுப்பினருக்கு அந்த உரிமை கிடைத்தது. 1918-க்குப் பிறகுதான் வயது வந்தோருக்கெல்லாம் வாக்குரிமை கிடைத்தது. 1925-ல்தான் பெண்கள் அனைவருக்கும் வாக்குரிமை கிடைத்தது. கல்வியாலும் அரசியல் வளர்ச்சியாலும் வாக்களிக்கத் தகுந்தவர்கள் என்று கருதப்பட்டதும் மக்களுக்கு அந்த உரிமை அளிக்கப்பட்டது.

கு: இந்தியாவில் எப்படி இருக்கிறது?

ஆ: இந்தியாவில் ஒரேயடியாக வயது வந்தோர் எல்லார்க்கும் வாக்குரிமையை அரசியல் சட்டம் அளித்துள்ளது. அதன்படி நாட்டிலுள்ள எல்லா பிரதிநிதித்வ சபைகளுக்கும், சட்டசபைகளுக்கும் வயது வந்தோர் வாக்குரிமை அடிப்படையில் தேர்தல் நடக்கும். அதாவது இந்தியக் குடியாக உள்ள ஒவ்வொருவரும், 21 வயதுக்குக் குறையாமல் இருந்தால், 80 நாட்களுக்குக் குறையாமல் ஓரிடத்தில் வாழ்ந்திருந்தால், புத்தி சுவாதீனத்துட னிருந்தால், சில குற்றங்களுக்காக அல்லது ஊழல் அல்லது சட்ட விரோத நடவடிக்கைகளுக்காக தண்டிக்கப்படாம லிருந்தால், சட்டசபைத் தேர்தல்களில் வாக்களிக்க உரிமையுண்டு.

கு: நம் நாட்டில் எவ்வாறு இவ்வளவு சீக்கிரமாக வயது வந்தோர் வாக்குரிமை அளிக்கப்பட்டிருக்கிறது. அதை உபயோகிக்க மக்கள் தகுதியானவர்களாக இருக்கிருர்களா?

ஆ: இல்லே. ஏனென்ருல், மக்களில் 10 க்கு ஒருவர்தான் எழுதப் படிக்கத் தெரிந்தவர். ஆனுல், இந்தியாவை ஒரு ஜனநாயகக் குடியரசாக அமைக்க அரசியல் சட்டத்தின் துவக்கவுரையில் ஏற்றுக்கொள்ளப்பட்ட தால், மக்களுக்கு வாக்குரிமையை மறுக்கக்கூடாது என்று கருதப்பட்டது. காலப் போக்கில் வாக்கை மக்கள் சரியாகப் பயன்படுத்துவார்கள் என்று நம்பப் படுகிறது.

கு: வாக்கை சரியாகப் பயன்படுத்துவது எப்படி ?

ஆ: வாக்களிக்க உரிமையுள்ள ஒரு குடியும், அரசியல் சட்டம் தனக்களித்துள்ள உரிமைக்கிணங்க அரசாங்கம் தனக்கு வாக்குக் கொடுத்துள்ளதா என்பதைத் தெரிந்துகொண்டு, சிறந்தவர்களேத் தேர்ந்தெடுக்க வேண்டும்.

கு: சில தகுதிகளேப் பெற்றும், சில குறைபாடுகள் இல்லாமலும் உள்ளவனுக்கு அரசியல் சட்டம் வாக்குரிமை கொடுத்துள்ளதால், தனக்கு வாக்கிருக்கிறதா என்று ஏன் அவன் தேடவேண்டும்? அவன் நேராக வோட்டுச் சாவடிக்குப் போய், தன் உரிமையைப் பயன்படுத்தக்கூடாதா?

ஆ: கூடாது. வாக்காளர் பட்டியலில் தன் பெயர் இருக்கிறதா என்று அவன் பார்த்தறிய வேண்டும்.

கு: வாக்காளர் பட்டியல் ஏன் அவசியமாகிறது?

ஆ: ஏனென்ருல், அவனுக்கு வாக்களிக்கத் தகுதி இருக்கிறதா, எல்லாத் தகுதிகளும் பெற்றிருக்கிருனு, அரசியல் சட்டமும், தேர்தல் சட்டங்களும் விதித்

துள்ள எல்லா நிபந்தனைகளையும் பூர்த்தி செய்திருக்கிருஞ, என்பதை முதலில் உறுதிப்படுத்த வேண்டும். ஆகவே, வாக்காளர் பட்டியலைத் தயாரிக்கும் முன்பாக பதிவு செய்தல் நடைபெறுகிறது.

கு: பதிவு செய்தல் என்ருல் என்ன?

ஆ: பதிவு செய்தல் என்பது, வாக்காளர் பட்டியலில் வாக்காளரின் பெயர்களைச் சேர்ப்பது. அதை ஆரம்பத்தில் அரசாங்கம் செய்கிறது. பூர்வாங்கப் பட்டியல் ஒன்றைத் தயாரித்து அதை அருகிலுள்ள பொதுக்காரியாலயத்தில் அரசாங்கம் ஒட்டுவிக்கிறது. தன் பெயர் அதில் இருக்கிறதா என்று வாக்காளன் பார்த்தறிவான் என்று எதிர்பார்க்கப்படுகிறது. பட்டியலில் தன் பெயர் இல்லாவிடில் சம்பந்தப்பட்ட அதிகாரியிடம் கூறி, தன் பெயரைச் சேர்க்கச் செய்ய வேண்டும்.

கு: அதன் பிறகு?

ஆ: பட்டியலில் தன் பெயரைப் பார்த்தவுடன், தேர்ந்தெடுக்கப்பட விரும்பும் அபேட்சகர்களில் எவருக்கு வாக்களிப்பது என்பது குறித்து அவன் சிந்திக்க ஆரம்பிக்கவேண்டும்.

கு: அபேட்சகரென்ருல் (தேர்வு நாடுபவர்) என்ன?

ஆ: நாட்டின் பிரதிநிதித்வ சபைகள், சட்டசபைகள் ஆகியவற்றில் ஒன்றுக்கு தேர்ந்தெடுக்கப்பட விரும்புபவர், அபேட்சகர் ஆவார்.

கு: தேர்தல்களில் யார் வேண்டுமாஞலும் அபேட்சகராக நிற்க முடியுமா?

ஆ: முடியும். நிர்ணயிக்கப்பட்டுள்ள தகுதிகள் உள்ள எந்தக் குடியும் தேர்தலில் அபேட்சகராக நிற்க முடியும்.

கு: அந்த நிர்ணயிக்கப்பட்ட தகுதிகள் எவை?

ஆ: இந்திய அரசியல் சட்டப்படி, இந்தியக் குடியாக உள்ள ஆணும் பெண்ணும், ராஜ்ய சபைக்கும், ராஜ்யத்தின் மேல் சட்டசபைக்கும் (லெஜிஸ்லேடிவ் கவுன்சில்) நடக்கும் தேர்தலில் நிற்பதற்கு 30 வயதும்; லோக சபைக்கு, ராஜ்ய கீழ் சட்டசபைக்கும் (லெஜிஸ்லேடிவ் அசெம்பிளி) நடக்கும் தேர்தலில் நிற்பதற்கு 25 வயதும் அடைந்திருக்க வேண்டும். மற்றும் புத்தி சுவாதீனமற்றவன் என்று அறிவிக்கப்படாதவனுகவும், கடனையடைக்காது திவாலான வனுக இல்லாமலும், சில வகைக் குற்றங்களுக்கு அல்லது தேர்தல் குற்றங்களுக்குத் தண்டிக்கப்படாத வனுகவும், அரசாங்கத்தில் லாபம் பெறும் பதவியை வகிக்காதவனுகவும், அரசாங்க உத்தியோகத்திலிருந்து நீக்கப்படாதவனுகவும் இருக்க வேண்டும்.

கு: இந்தத் தகுதிகளைப் பெற்றும், குறைபாடுகள் இல்லாமலும் உள்ள எவரும் தேர்தலில் நிற்க முடியுமா?

ஆ: முடியும். ஆனுல், அவர் தேர்தலில் நிற்பாரா என்பது வேறு விஷயம்.

கு: நீங்கள் கூறுவதன் பொருள் என்ன?

ஆ: சட்ட பூர்வமாக அபேட்சகர்களாக நிற்கத் தகுதியுடையவர்கள் அனைவரும் நிற்பது அவசியமன்று.

கு: அது ஏன்?

ஆ: நாட்டுக்கு, தன் பிரதிநிதித்துவ சபைகளிலும், சட்ட சபைகளிலும் சிறந்த மனிதர்கள் தேவைப்படுகிருர்கள். தங்களுடைய கல்வி, குணம், அந்தஸ்து ஆகியவற்றினுல், இந்தப் பணியைச் செய்யவும், பிரதிநிதிகளாகவும், சட்டசபையினராகவும் செயலாற்றத் தகுதியுள்ளவர்களாகவும் இருக்க வேண்டும்.

கு: அது ஏன் அவ்வாறு இருக்க வேண்டும்?

ஆ: ஏனென்ருல் தெரிந் தெடுக்கப்படும் மனிதர்கள் மக்களின் பிரதிநிதிகளாக மட்டுமின்றி பிரதிநிதித்வ சபைகள் சட்டசபைகள் ஆகியவற்றின் தகுந்த உறுப்பினர்களாகவும் திகழ வேண்டும்-பிரதிநிதித்வசபை, சட்டசபை ஆகியவற்றின் உறுப்பினர்களாகத்தங்களுடைய கடமைகளேச்செய்யும் தகுதியை அவர்கள் றிருக்க வேண்டும். இந்த சபைகளில் விவாதிக்கப் பட்டு நிச்சயிக்கப்படுகிற பெரிய பிரச்சிஃனகள், சட்ட சபைத் தீர்மானங்கள் ஆகியவை குறித்துத் தங்களுடைய கருத்துக்களேயும் தகவல்களேயும் தெரிவிக்க உதவும் அளவுக்கு அவர்கள் கல்வி கற்றிருக்க வேண்டும்.

கு: கல்வி போதுமா?

ஆ: இல்லே. கல்வி மட்டும் போதாது. குணமும் தேவை.

கு: அபேட்சகரிடம் குணம் ஏன் தேவைப்படுகிறது?

ஆ: ஏனென்ருல், சட்டசபையின் உறுப்பினர், அதிகாரத்திலுள்ள மந்திரிசபை அளிக்கும் வசதிகளாகிய ஆசைக்கு பலியாகக் கூடாது. அல்லது நாட்டின் நலனேவிட தங்களுடைய குறுகிய நலனே வளர்ப்பதற்காக சொற்பொழிவுகளேயும் வாக்குகளேயும் பயன்படுத்த விரும்பும் சக்தி வாய்ந்த கோஷ்டிகளின் வற்புறுத்தலுக்குப் பலியாகாதவராக இருக்க வேண்டும்.

கு: ஒரு உறுப்பினரிடம் இந்த சுதந்திரத்தை ஏற்படுத்த குணம் போதுமா?

ஆ: வருவாய் கட்டாயமானது அல்லவென்ருலும், அது இருந்தால் மந்திரிகளின் சலுகைகளே விரும்பாதவனுகவும், கோஷ்டிகளின் வற்புறுத்தலுக்குப் பலி

யாகாதவனுகவும், சுதந்திரமாகச் செயலாற்ற முடிந்த வனுகவும் இருப்பான். சொத்துள்ளவர்களுக்கு ஓய்வு நேரம் உண்டு. வாழ்க்கைக்காக உழைக்கும் அவசியம் இல்லாததால், தங்களுடைய தொகுதியின் நலனுக்குப் பாடுபடுவதில் முழு நேரத்தையும் அவர்கள் செலவிட முடியும்?

கு: தொகுதி என்ருல் என்ன?

ஆ: ஒரு தொகுதி என்பது, கிராமங்களில் அல்லது நகரங்களில், அல்லது மாவட்டங்களில் அல்லது அவற்றின் பகுதிகளிலுள்ள வாக்காளர்கள் அல்லது தேர்ந்தெடுப்பவர்களின் தொகுப்பு.

கு: ஒவ்வொரு தொகுதியிலும் எவ்வளவு பேர்கள் நிற்கலாம்?

ஆ: எவ்வளவு பேர்கள் வேண்டுமானுலும் நிற்கலாம்.

கு: அப்படியானுல் வாக்காளன் எவ்வாறு தன்தொகுதியின், அதாவது தன்னுடைய பிரதிநிதியைத் தேர்ந்தெடுப்பது?

ஆ: ஒவ்வொரு அபேட்சகரின் தகுதிகளேயும், திறமைகளேயும், கல்வியையும், அரசியல் அனுபவத்தையும் நிதிநிலேமையையும், சமூக அந்தஸ்தையும் கவனித்துப் பார்க்க வேண்டும்.

கு: அதை அவன் எவ்வாறு செய்ய வேண்டும்?

ஆ: அபேட்சகர்களின் தேர்தல் அறிக்கைகளேயும் பத்திரிகைகளேயும் படித்தல், முடிந்த அளவுக்குபொதுக்கூட்டங்களுக்குப் போதல், நண்பர்களுடனும் அண்டை வீட்டுக்காரர்களுடனும் பேசுதல், அபேட்சகர்களேப் பற்றி அனேவரையும் கேட்பது போன்ற செயல்களால் எல்லாத் தகவல்களேயும் தெரிந்து கொள்ள வேண்டும்.

கு: கட்சி அடிப்படையில் வாக்களிப்பது சௌகரிய மானது அல்லவா—வாக்காளன் அங்கீகரிக்கும் திட் டங்களையும் கொள்கைகளையும் கொண்ட கட்சியைத் தெரிந்தெடுத்து—அந்தக் கட்சியின் அபேட்சகருக்கு வாக்களிப்பது சரியல்லவா?

ஆ: அது சரியன்று. ஏனென்றால், சட்டசபைகளுக்கு வாக் காளன் தன் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்க வேண்டும், கட்சியை யன்று—கட்சி வேண்டுகோள் களும், தேர்தல் அறிக்கைகளும் ஒரு வழிகாட்டி, கட்டளையன்று—எல்லா கட்சிகளும், ஒரு புதிய பூமி யில் ஒரு புதிய சுவர்க்கத்தை வாக்களிக்கின்றன. ஆனால், பழைய அனுபவம், மனிதர்கள்—திட்டங்க ளன்று—குறித்து வற்புறுத்துவதன் அவசியத்தைக் காட்டுகிறது. சிறந்த திட்டங்களும், நேர்மையற்ற மனிதர்களால் கெடுக்கப்பட்டு அழிக்கப்படக்கூடும்.

கு: அத்தகைய உயர்ந்த குணத்தை அபேட்சகர்களிடம் எதிர்பார்ப்பது மிக அதிகம் அல்லவா?

ஆ: தேர்தலுக்கு நிற்கும் அபேட்சகர்களில் சிறந்தவரை வாக்காளர்கள் தெரிந்தெடுக்க வேண்டும். நாட்டை யும், அரசியல் சட்டத்தையும் புரட்சி மூலம் நாசமாக் கும், வெளியிட கட்சிகளின் அபேட்சகர்களை அவர் கள் நிராகரிக்க வேண்டும். அபேட்சகர்களிடம் மிக உயர்ந்த பண்பாட்டை நாம் எதிர்பார்க்க முடியாது. ரோமாபுரியில் அபேட்சகர்கள் (காண்டிடேட்ஸ்) காண்டிடசில் தோன்றுவது வழக்கம்—லத்தீன் மொழியில் காண்டிடஸ் என்றால் வெண்ணுடை, அது களங்கமற்ற ஒழுக்கத்தைக் குறிக்கிறது.

கு: வாக்காளரிடமும் அதிகம் எதிர் பார்க்கப்படுவ தில்லையா?

ஆ: ஆம்; ஏனென்ருல், அவனுடைய வாக்கு, நமது பிரதிநிதித்வ சபைகள், சட்ட சபைகள் ஆகியவற்றின் அமைப்பை நிச்சயிக்கும். அந்தச் சபைமீது நாட்டின் முன்னேற்றமும், நல்ல புகழும் சார்ந்திருக்கின்றன. வாக்களிப்பது ஒரு அரிய உரிமை—வோட் என்பது வோட்டம் என்ற லத்தீன் மொழிச் சொல்லிலிருந்து தோன்றியது. வோட்டம் என்பதற்கு உறுதிமொழி என்று பொருள்—ஒரு புனிதமான, கடமையைச் செய்ய வாக்காளன் (வோட்டர்) உறுதிமொழி கொடுக்கிருன்.

# 8. பிரதிநிதி

கு: பிரதிநிதி என்ருல் என்ன?

ஆ: சட்டசபைகளிலும், பிரதிநிதித்வ சபைகளிலும் தமக்குப் பதிலாக செயலாற்றுகிற ஆண் அல்லது பெண்ணுக்கு பிரதிநிதி என்று பெயர்

கு: நமக்குப் பதிலாக செயலாற்றுபவர் என்று ஏன் கூறுகிறீர், அவரைத் தேர்ந்தெடுத்த மக்களுக்கு மட்டும் தானே அவர் பிரதிநிதி ?

ஆ: இல்லே. அவரைத் தேர்ந்தெடுத்த மக்களுக்கு மட்டும் அவர் பிரதிநிதி அல்லர்; அவரைத் தேர்ந்தெடுக்காதவர்களுக்கும் அவர் பிரதிநிதி. கிராமம் அல்லது நகரம் அல்லது கிராமங்கள், அல்லது நகரங்களின் தொகுப்பு கொண்ட தன்தொகுதி முழுவதற்கும்அவர் பிரதிநிதி. அது மட்டுமல்ல ராஜ்யம் அல்லது நாடு முழுவதற்கும் அவர் பிரதிநிதி.

கு: அது ஏன்?

ஆ: பிரதிநிதித்துவ சபைகளேப் பயன்படுத்தும் நாடுகள் அனேத்திலும் அதுதான் வழக்கமாக இருந்து வருகிறது. இங்கிலாந்து நாட்டில் மக்கள் (காமன்ஸ்)சபைக்குத் தேர்ந்தெடுக்கப்படுபவர், எம். பி.(பார்லிமெண்டு மெம்பர்) என்று அழைக்கப்படுவார், லண்டன் நகரத்தின்உறுப்பினர் என்ரோ அல்லது நார்பக் பிரதேசத்தின் உறுப்பினர் என்ரோ அவர் அழைக்கப்படுவதில்லே. அதுபோலவே இந்தியாவில் சட்டசபை

(லெஜிஸ்லேடிவ் அசெம்பிளி) உறுப்பினர் எம்.எல்.ஏ. எனப்படுகிறார் .கடலூர் அல்லது வட ஆர்க்காடின் உறுப்பினர் என்று அவர் அழைக்கப்படுவதில்லை.

கு: தங்களுடைய தனிப் பிரதிநிதியாக இருக்க முடியா விடில் அவரை ஏன் ஒருகுறிப்பிட்ட தொகுதி மக்கள் தெரிந்தெடுத்தார்கள்?

ஆ: அவர் நிச்சயமாக அவர்களுடைய பிரதிநிதி. சிறிது அதிக பொறுப்பும் அவருக்குண்டு. அவர் அந்தத் தொகுதிக்கும், நாட்டு மக்கள் அனைவருக்கும் கூட பிரதிநிதி ஆவார்.

கு: தன் தொகுதியின் பிரதிநிதி என்ற நிலைமைக்கும், நாடு அல்லது நாட்டு மக்கள் அனைவரின் பிரதிநிதி என்ற நிலைமைக்கும் இடையே வேறுபாடு உண்டா?

ஆ: ஆம். சில சமயங்களில் தன் தொகுதிக்கு அவர் செய்யும் கடமைகள், நாட்டுக்கு அவர் செய்ய வேண்டிய கடமைகளுடன் முரண்பட்டு இருக்கும்.

கு: அது எவ்வாறு ஏற்படும்?

ஆ: அது நடக்கக் கூடியதே. தன் தொகுதியின் நலன்கள் ஒரு வகைச் செயலைக் குறிக்கும். ஆனால் நாட்டின் விரிவான நலன்கள், அதற்கு எதிரிடையான செயலைக் குறிக்கும்.

கு. அதற்கு உதாரணம் கூற இயலுமா?

ஆ: ஆம்; உதாரணமாக ஒரு நகரம் அல்லது கிராமத்திற்கு வரும் வண்டிகள் அல்லது பொருட்கள் மீது சுங்க வரி விதிப்பது, அந்த நகரம் அல்லது கிராமத்தின் நன்மைக்கு ஏற்றதாக இருக்கலாம். ஆனால், நாடு முழுவதிலும் சுதந்திரமான வர்த்தகமும்போக்குவரத்தும் இருக்க வேண்டுமானால், அந்த வரிகளை வசூலிப்பது நல்லதல்ல. ஆகவே நாட்டின் பரந்தநல

ஊக் கருதி, தன் தொகுதிக்கு வருமானத்தை மறுத்த போதிலும், பிரதிநிதித்வ சட்ட சபையில் ஒரு பிரதிநிதி அந்த வரியை எதிர்த்துப் பேசி வாக்களிப்பது நியாயமே.

கு: அப்படியானுல் பிரதிநிதித்துவ சட்ட சபையில் ஒரு பிரதிநிதி தன் தொகுதிக்காக செயல்பட வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுவதில்லையா?

ஆ: ஆம். தன் தொகுதிக்காக செயல்பட வேண்டும் என்று அவன் எதிர்பார்க்கப்படுகிருன். ஆனுல், நாட்டின் நலன்களுக்கு உட்பட்டே அவன் செயல்பட வேண்டும்.

கு: தன் தொகுதியின் விருப்பங்கள் அனைத்தையும் நிறைவேற்ருமலும், அதன் முழு நலன்களுக்கு மட்டுமே சேவை செய்யாமலும் உள்ள பிரதிநிதி, தன் தொகுதிக்காக எவ்வாறு செயல்பட இயலும்?

ஆ: ஏனென்ருல், அவன் ஒரு பிரதிநிதி; தொகுதியின் காரியஸ்தன் (ஏஜண்டு) அல்லன்.

கு: பிரதிநிதிக்கும் காரியஸ்தனுக்கும் உள்ள வேறுபாடு யாது?

ஆ: ஒரு காரியஸ்தன் தன் தலைவரின் கட்டளைகளையும் ஏற்பாடுகளையும் நிறைவேற்றுகிருன். அவற்றை மீறி அல்லது அவற்றிற்குப் புறம்பாக அவன் செயல்பட இயலாது.

கு: ஒரு பிரதிநிதி அதைச் செய்வதில்லையா?

ஆ: இல்லை. அவன் காரியஸ்தனைவிட உயர்ந்தவன். ஏற்கெனவே குறிப்பிட்டுள்ளபடி, அவன் தன் தொகுதிக்கு மட்டுமன்றி நாடுமுழுவதற்கும் பிரதிநிதி.

கு: ஒரு தொகுதியால் தேர்ந்தெடுக்கப்பட்டு, அதற்காகப் பேசவும் செயல்படவும் சட்டசபைக்கு அனுப்பப்பட்ட அவன் அந்தத் தொகுதியின் தூதன் (டெலிகேட்) கூட அல்லவா?

ஆ: இல்லை. அவன் காரியஸ்தனுமல்லன்; டெலிகேட்டுமல்லன். ஏனென்றால், பர்க் என்ற அரசியலறிஞர் கூறியதுபோல, "பார்லிமெண்ட் என்பது, வேறுபட்ட எதிரிடையான நோக்கங்களை ஒவ்வொரு தூதனும் காரியஸ்தன் என்ற தன்மையில், மற்ற காரியஸ்தனை எதிர்த்து பாதுகாக்கும் தூதர்களின் சபையன்று. ஆனால், பார்லிமெண்டானது ஒரு நோக்கம், அதாவது முழுமைக்குமான நோக்கமுள்ள ஒரு தேசத்தின் விவாதசபை. அங்கு ஸ்தல நோக்கங்கள், ஸ்தல விருப்பு வெறுப்புகள் மேலோங்கக் கூடாது. ஆனால், முழுமையின் விளைவாக பொது நன்மையே வழிகாட்டியாக இருக்க வேண்டும்."

கு: அப்படியானால் அவன் ஒரு தொகுதியின் காரியஸ்தனாகவோ தூதனாகவோ இல்லாமல், நாட்டின் பிரதிநிதியாக இருப்பதால், தன் தொகுதியின் விருப்பத்தை மதிக்காமல், அதன் நன்மையைப் புறக்கணிக்கலாமா?

ஆ: இல்லை. ஒரு பிரதிநிதி தன்தொகுதியின் விருப்பத்தை மதிக்காமலும், அதன் நன்மையைப் புறக்கணித்தும் செயல்படக்கூடாது. பொதுவாகத் தன் தொகுதிக்குத் தன்னால் இயன்ற அளவுக்கு நன்மை செய்ய வேண்டும். 1774-ல் பிரிஸ்டல் நகரத்திலிருந்து உறுப்பினராக பர்க் தேர்ந்தெடுக்கப்பட்டபோது, அவர் தன் பிரசித்திபெற்ற பிரசங்கத்தில் ஒரு பிரதிநிதியின் நிலையையும் வேலையையும் விவரித்

துள்ளதுபோல, "தன் தொகுதியினருடன் இணைந்தும், நெருங்கிய தொடர்பு கொண்டும் இருப்பது ஒரு பிரதிநிதியின் மகிழ்ச்சியின் புகழுமாக இருக்க வேண்டும். அவர்களுடைய விருப்பங்களுக்கு அவன் பெரிதும் ஆதரவு கொடுக்க வேண்டும், அவர்களுடைய கருத்துக்கு அவன் பெரிதும் மதிப்புக் கொடுக்க வேண்டும், அவர்களுடைய வேலையில் அவன் தன் தயக்கமில்லாத கவனத்தைச் செலுத்த வேண்டும், அவர்களுக்காகத் தன் ஓய்வையும், இன்பத்தையும், திருப்தியையும் தியாகம் செய்வது அவனுடைய கடமை, எப்பொழுதும் எந்த விஷயத்திலும் தன் நலனைவிட அவர்களுடைய நலனைப் பெரிதாகக் கருதவேண்டும். ஆனால், தன் பாரபட்சமற்ற கருத்தையும், தன் முதிர்ந்த தீர்மானத்தையும், தன் தெளிவுபெற்ற மனச்சாட்சியையும் எவருக்கும் அல்லது வாழும் மனிதரின் கோஷ்டி எதற்கும் அவன் பலியிடக் கூடாது. இவற்றை உங்கள் விருப்பத்தால் அவன் பெறவில்லை, சட்டத்திலிருந்தோ அரசியல் சட்டத்திலிருந்தோ அவன்பெறவில்லை. இவைஆண்டவனிடமிருந்து அவன் பெற்ற பெரும் பொறுப்பு. இவற்றைஅவன் தவருகப்பயன்படுத்தினல், அதற்கு அவன் பதில் சொல்லும் அவசியம் ஏற்படும்."

கு: தன்னிடமுள்ள அனைத்தையும் தன் தொகுதிக்கு அவன் கொடுக்காவிடில், அவர்களுக்கு அவன் கொடுக்க வேண்டியதை அவன் மறுப்பது ஆகாதா ?

ஆ: இல்லை. பர்க் கூறியதுபோல, "தன் தொகுதிக்கு உழைப்பை மட்டும் தருவது ஒரு பிரதிநிதியின் கடமையல்ல. தன் கருத்தையும் தரவேண்டும், அவர்களுடைய கருத்துக்குத் தன் கருத்தை அவன் பலி

யிட்டால், அவர்களுக்கு அவன் சேவை செய்யாமல் துரோகம் செய்பவனுகிருன்."

கு: ஆனுல், தன் தொகுதியினரின் கருத்தும் விருப்பங்ளும் பிரதிநிதியிடம் மேலோங்க வேண்டும் அல்லவா?

ஆ: தன் தொகுதியினரின் கருத்துக்கும், விருப்பங்களுக்கும் உரிய கவனிப்பு அளிப்பது அவசியம். ஆனுல், பர்க் நினைவுபடுத்துவது போல, "அரசாங்கமும் சட்டமும், விவேகமும் ஆலோசனையும் கொண்ட விஷயங்கள், விருப்பத்திற்கு உட்பட்டவையன்று."

கு: தன் தொகுதியினரின் விருப்பங்களையும் எண்ணங்களையும் நிறைவேற்றினுல், விவேகமும் நல்ல யோசனையும் நிலைபெருது என்று ஏன் கூறுகிறீர்?

ஆ: ஏனென்றுல், சட்டசபையில் ஒரு விஷயம் விவாதிக்கப்படுவதற்கு முன்பாக, ஒரு பிரதிநிதி அந்த விஷயத்தில் தன் தொகுதியினரின் கருத்துக்குக் கட்டுப்பட்டு இருந்தால், விவேகத்துடன் செயலாற்றப்பட்டதாக நாம் கூறமுடியாது. பர்க் கேட்பதாவது, "விவாதத்திற்கு (சட்டசபையில்) முன்னுல் முடிவு (தொகுதியினரால்) செய்வது எத்தகைய விவேகம்? ஒரு சாரார் (சட்டசபையினர்) விவாதிப்பதும், மற்றொரு சாரார் (தொகுதியினர்) முடிவு செய்வதும்; விவாதத்தைக் கேட்பவர்களிடமிருந்து சுமார் 300 மைல் தூரத்திற்கு அப்பால் உள்ளவர்கள் முடிவு செய்வதும் எத்தகைய விவேகம்?"

கு: ஆனுல் நீங்கள் இந்த விஷயத்தில் மேற்கோள் காட்டும் பர்க், தற்போது உதவாக்கரையானவரும், பழமை விரும்பியும், பிற்போக்காளரும் அல்லவா?

ஆ: இல்லை. சுதந்திரத்தின் சிறந்த பாதுகாவலர் பர்க். அமெரிக்க குடியேற்ற நாடுகளைப் பற்றி அவருடைய

புகழ்பெற்ற சொற்பொழிவுகளில் அதைக் காணலாம். மிக நீடித்ததும் அரசியல் அனுபவங்களில் மிக்க பயனளிக்கக் கூடியதுமாகிய இங்கிலாந்து அரசியல் அனுபவம் என்ற பட்டறையில் உருவாக்கப்பட்டவை, அவருடைய அரசியல் கருத்துக்கள்.

கு: இந்த விஷயத்தில் பர்க்கின் அறிவுரைகளே, தற்கால குடியரசுக் கொள்கையும் வழக்கமும் ஆதரிக்கின்றனவா?

ஆ: ஆம். அமெரிக்க அரசியல் சட்டத்தை உருவாக்கியவர்களில் ஒருவரான மாடிசன் என்பவர், மக்களால் தெரிவிக்கப்படுவதை விட பிரதிநிதிகளின் குரல் பொது நன்மைக்கு உகந்தது என்று வாதித்துள்ளார். பிரெஞ்சுப் புரட்சியின் கொள்கைகளின் அடிப்படையில் உருவாக்கப்பட்டுள்ள ஐரோப்பிய அரசியல் சட்டங்களில் பல "மேண்டேட் இம்பரடிப்" கொள்கையை தடை செய்துள்ளன. அது, சட்ட சபைக்கு வருவதற்கு முன்னால் எந்த விஷயத்தையும் விவாதிப்பதும், தன் தொகுதியினரின் கருத்துக்களால் பிரதிநிதி கட்டுப்படுவதும், விவாதத்திற்கு முன்னால் வாக்கெடுப்பை அனுமதிப்பதும் ஆகும்.

கு: அது எவ்வாறு?

ஆ: எந்த சபையிலும், சபையின் முடிவு, விவாதத்தின் விளைவாகவும் கருத்துக்கள் மோதலின் விளைவாகவும் ஏற்படும்; அது பெரும்பாலும் நாட்டின் நன்மைக்கு உகந்த வகையில் முரண்பட்ட கருத்துக்களின் சமரச ஏற்பாடாகவும், சபையில் கூறப்பட்ட எல்லா வாதங்களின் பலனாகவும் இருக்கும். அத்தகைய பயனுள்ள விவாதத்தையும், பேச்சையும் "மேண்டேட் இம்பரடிப்" தடுக்கும். குய்சாட் என்ற சிறந்த பிரெஞ்சு சட்டசபை அறிஞர் கூறியதுபோல, விஷயங்களை

விவாதிக்காமலும், பரிசீலனை செய்யாமலும் இருப்ப வர்களிடம் (தொகுதியினரிடம்) திட்டமாக முடிவு செய்யும் முழு அதிகாரத்தை 'மேண்டேட் இம்பரடிப்' அளிக்கிறது"

கு: அதனால் அதிக பாதகம் உண்டா?

ஆ: ஆம். அதை அனுமதித்தால், நேரடியாக சட்டம் செய்யும் உரிமையை அது மக்களுக்குக் கொடுக்கும். அது சட்ட சபையை அவமதிப்பதாகும். அதனால் பிரதிநிதித்வ அரசாங்கத்திற்கு முடிவு கட்டப்படும்.

கு: அது உண்மையான மக்களின் அரசாங்கம் அல் லவா?

ஆ: இல்லை. தற்கால நாடுகள் போன்ற ஏராளமான மக்கள் தொகை உள்ள நாடுகளில் மக்களால் நேரடி யாக அரசாங்கம் நடத்துவது அசாத்தியம். அதனால் தான் பிரதிநிதித்வ அரசாங்கமும், பிரதிநிதித்வ சட்டசபைகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன "மேண் டேட் இம்பரடிப்" அல்லது தங்களுடைய பிரதிநிதி களுக்கு வாக்காளர்கள் கொடுக்கும் கட்டளைகள், பிரதிநிதித்துவ அரசாங்கத்துக்கு—இல்லை, குடியரசு ஆட்சிக்கே சாவுமணி அடித்துவிடும்.

கு: அது எவ்வாறு குடியரசு ஆட்சியைக் கொல்லும்?

ஆ: பிரதிநிதித்வ சபை மூலம் அரசாங்கம் நடப்பதற்குப் பதிலாக மக்களால் நேரடியாக அரசாங்கம் நடப்பதை 'மேண்டேட் இம்பரடிப்' ஏற்படுத்தும். பாமர மக்க ளின் நேரடி அரசாங்கம், மக்களின் உணர்ச்சிகளைத் தூண்டிவிடும் எதேச்சாதிகாரியின் ஆட்சிக்கு அடி கோலும். அதை, ஜெர்மனியில் ஹிட்லர் வெற்றி பெற்றதும், இத்தாலியில் முசோலினி வெற்றி பெற் றதும் நிரூபிக்கின்றன. எதேச்சாதிகாரம் தலை தூக் கினால் குடியரசு மாண்டு போகும்.

# 9. சட்டசபை

கு: சட்டசபைகள் எவ்வாறு முக்கியமானவை?

ஆ: ஏனென்ருல், சட்டசபையின் இரு சபைகள் மக்களின் பிரதிநிதித்வ சபைகள். நாட்டின் மக்கள் சார்பாக அவை சட்டங்களை இயற்றியும், நாட்டு விவகாரங்களை விவாதித்தும், தேச நிர்வாகத்தைக் கண்காணித்தும் வருகின்றன.

கு: அப்படியானுல், சட்டசபைதான் அரசாங்கத்தின் மிக முக்கியமான ஸ்தாபனமா?

ஆ: இல்லை. அரசாங்கத்தின் இதர ஸ்தாபனங்களான நிர்வாகமும், நீதி சபையும் ஒத்த முதன்மை வாய்ந்தவை.

கு: மக்களின் பிரதிநிதித்வ சபையே சட்டசபை என்ற கூற்றின் உட்கருத்து என்ன?

ஆ: சட்டசபை மூலம் மக்களின் எண்ணங்களும் விருப்பங்களும் அறிவிக்கப்படுகின்றன அல்லது வெளியிடப்படுகின்றன என்பதே அதன் உட்கருத்து.

கு: அது எவ்வாறு செய்யப்படுகிறது?

ஆ: மக்களுடைய குறைகளையும், தேவைகளையும், விருப்பங்களையும் உறுப்பினர்கள் வெளியிட்டு, அரசாங்கத்தால் இயன்றவரை அந்தக் குறைகளைத் தீர்க்கவும், தேவைகளையும் விருப்பங்களையும் நிறைவேற்றவும் அவர்கள் முயல்கிருர்கள். பர்க் கூறியபடி, விழிப்பும், செயல் திறமையும் சட்ட அடிப்படையானதுமான

நீதி சபை, பொதுத் தீங்கு, பொதுப் புகார் ஆகியவற்றில் அக்கறையுடன் கவனம் செலுத்துதல்—இவை ஒரு சட்டசபையின் உண்மையான குணங்கள்.

கு: சட்டசபையில் அரசாங்கத்திற்கு வேலை இல்லையா?

ஆ: ஆம், இருக்கிறது. நாட்டை நன்ருக ஆள்வதற்கு, அல்லது மக்களின் நலனையும் மகிழ்ச்சியையும் வளர்ப்பதற்கும்; நிர்வாகச் செலவிற்கும்; பள்ளிக்கூடங்கள் கல்லூரிகள் ஆஸ்பத்திரிகள் விவசாயப் பண்ணைகள் கூட்டுறவு சங்கங்கள் போன்ற அரசாங்கத்தால் மக்கள் நலனை வளர்க்கும் ஸ்தாபனங்களுக்கு உதவ அல்லது அவற்றைப் பராமரிக்கும் செலவிற்கும் அவசியமான சட்டங்களை சட்டசபை மூலம் அரசாங்கம் நிறைவேற்றுகிறது.

கு: நாட்டு விவகாரங்களையும்; மக்களின் நலனையும் மகிழ்ச்சியையும் வளர்க்கும் திட்டங்களையும் விவாதிப்பதற்கு அரங்கு சட்டசபை ஒன்றுதானு?

ஆ: பொதுப் பிரச்சினைகளை விவாதிப்பதற்கு உகந்த அரங்கு அதுமட்டுமன்று; ஏனென்ருல், பொது மேடை, பத்திரிகை, கட்சி ஆகியவை உள்ளன. ஆனுல், அதுதான் மிக உன்னதமானதும், பிரதிநிதிகளால் நிறுவப்பட்டதுமாகிய அரங்கு. சட்டங்களை இயற்றுவதற்கும், மக்களின் வளத்துக்கும் மகிழ்ச்சிக்குமாகிய திட்டங்களை உருவாக்குவதற்கும் அதுதான் அரசியல் சட்டத்தின் ஒரே சாதனம்.

கு: ஆனுல், சட்டசபை நடவடிக்கைகளைவிட கட்சிக் கூட்டமும், கட்சித் திட்டங்களும், கட்சி முடிவுகளும் அந்தக் கட்சியின் உறுப்பினர்களுக்கு முக்கியமானவை அல்லவா?

ஆ: இல்லை. சட்டசபையின் ஒரு கோஷ்டி உறுப்பினர்களின் நடவடிக்கைகளை உருவாக்கும் சாதனம்தான்

ஒரு கட்சி. சட்டசபையின் இடத்தை ஒரு கட்சி, தன் உறுப்பினர்களுக்கு மட்டிலும்கூட அடையஇயலாது, ஏனென்ருல், அவர்கள் கட்சி உறுப்பினர்கள் மட்டும் அல்லர். ஆனுல், மக்கள் அனைவரின் பிரதிநிதியாக வுள்ள மிக முக்கியமான ஸ்தாபனமாகிய சட்ட சபைக்கு அவர்கள் அதிகம் கடமைப்பட்டிருக்கிருர் கள். அரசியல் சட்டத்தில் கட்சி என்பது இல்லை. ஆனுல், ஒரு சட்டசபை, அரசாங்கத்தின் முக்கிய மான பாகம்.

கு: அப்படியானுல், சட்டசபையில் தங்களுடைய உறுப் பினர்களின் செயலை, அல்லது பேச்சை அல்லது கேள்விகளைச் சில அரசியல் கட்சிகள் கட்டுப்படுத் தும் வழக்கம் முறையற்றதா?

ஆ: மிகவும் தவருனது—சட்டசபையில் எழுப்பப்படும் விஷயங்கள் குறித்துப் பேசவும், தன் தொகுதியின் குறைகள் குறித்துக் கேள்விகள் கேட்கவும், பொது விவகாரங்களைக் குறித்துத் தீர்மானங்களைப் பிரேரே பிக்கவும் கட்சி உறுப்பினருக்கு உரிமையளிக்க வேண்டும். தன் வாக்கைப் (வோட்டைப்) பொறுத்த மட்டில் தன் கட்சி முடிவுக்கு அவன் கட்டுப்படலாம். ஆனுல், விவாதத்தின் போக்கை அனுசரித்து தன் கருத்தை மாற்றிக்கொள்ள அவன் அனுமதிக்கப்பட வேண்டும். அப்படிச்செய்யாமல், விவாதத்திற்குமுன் பாகவே உறுப்பினர்கள் முடிவு செய்துவிட்டால், சட்டசபையில் விவாதம் நடத்துவதில் அர்த்தமில்லை.

கு: இவ்வாறு சட்டசபைக்கு மரியாதையளிப்பது, மந்திரி களிடமிருந்தும் எதிர்பார்க்கப்படுகிறதா?

ஆ: சாதாரண உறுப்பினர்களைவிட மந்திரிகளிடம் அதி கம் எதிர்பார்க்கப்படுகிறது.

கு: அது ஏன்?

ஆ: 'அவர்கள் சட்டசபைக்குப் பணிவது பொருத்த மாகும்—வேறு நோக்கங்களுக்கு அது பொருத்தப் படும்வரை சட்டசபை மாற்றி யமைக்கப்பட வேண் டும் என்பது சரியல்ல,' என்று பர்க் கூறியுள்ளார்.

கு: பர்க் குறிப்பிட்டுள்ள வேறு நோக்கங்கள் எவை?

ஆ: எதேச்சாதிகார நோக்கங்கள்—பர்க் காலத்தில் மூன் ரும் ஜார்ஜ் மன்னரும் அவருடைய மந்திரிகளும், நம் காலத்தில் ஹிட்லரும் முசோலினியும் அடைய முயன்றது போன்றவை.

கு: சட்டசபைக்கு இவ்வாறு மந்திரிகள் மரியாதை காட் டுவது, நல்ல அரசாங்கத்திற்கு அவசியமா?

ஆ: ஆம். நல்ல அரசாங்கம் என்பதற்கு நல்ல சட்டசபை அரசாங்கம் என்று பொருள்கொண்டால் அது அவசி யம்; ஏனென்ருல், பர்க் கூறியதுபோல, 'மந்திரிகள் பயப்படக்கூடியதும், எல்லா விஷயங்களும் மறுக்க முடியாத கொள்கைகளுடன் பகிரங்கமாக விவாதிக் கப்படுவதுமாகிய சட்டசபை, மக்களிடம் நம்பிக் கையை ஊட்டுகிறது. அத்தகைய நம்பிக்கையை, தனிப்பட்டவரின் ஆலோசனையாலும் தனிப்பட்ட வரின் சலுகையாலும் மாறக்கூடிய அரசாங்கம் அளிக் காது.

கு: இந்த வாதங்களால் சட்டசபைக்குக் கொடுக்கப்படும் உயர்ந்த அந்தஸ்தை அது எவ்வாறு காத்துக்கொள் கிறது?

ஆ: தன் அலுவலைத் திறமையாகவும் பயனுள்ளதாகவும் செய்வதன் மூலம்.

கு: அது எவ்வாறு செய்யப்படுகிறது?

ஆ: ரோசி என்ற பிரெஞ்சு அரசியல் நிபுணர் கூறியது போல, நன்ருக அமைக்கப்பட்ட சட்டசபை ஆரம்பத்

தில் பலமற்று இருந்தாலும் நாளாவட்டத்தில் சிறப்பான நீடித்த பலத்தைப் பெறுகிறது; ஆனல், முழுப் பலம் பொருந்தியிருந்தும் சரியாக அமைக்கப்படாத சட்டசபை சிறுகச் சிறுகத் தன் பலத்தை இழக்கக் கூடும்.

கு: அதை சரித்திரத்திலிருந்து மெய்ப்பிக்க இயலுமா?

ஆ: இயலும். இங்கிலாந்து நாட்டின் காமன்ஸ் (மக்கள்) சபையுடன், பிரெஞ்சு நாட்டின் ஸ்டேட்ஸ் ஜெனரல் அல்லது ஸ்பெயின் நாட்டின் கோர்டீஸ் சபையுடன் ஒப்பிட்டுப் பாருங்கள்.

கு: ஒரு சட்டசபையைப் பயனுள்ளதாக அமைப்பதற்கு அவசியமானவை எவை?

ஆ: முதலில் அது, மக்கள் அனைவரின் பிரதிநிதியாக இருக்க வேண்டும்—காமன்ஸ் சபையில் அநேகமாக ஆரம்பமுதல் கிராமப் பகுதிகளின் பிரதிநிதிகள் (ஷயர், டவுன் பர்ஜஸ் ஆகியவற்றின் உரிமைகள்) இருந்தார்கள். அவர்கள் ஒன்ருகக் கூடி ஒரு சபையை அமைத்தார்கள். ஆனல், பிரான்ஸ் நாட்டின் ஸ்டேட்ஸ் ஜெனரல் அமைப்பில், ஆரம்பத்திலிருந்து கடைசிவரை பிரபுக்கள், மதகுருமார்கள், மத்தியதர வகுப்பினர் ஆகிய தரப்பினர் தனித்தனியாக மூன்று சபைகளில் அமர்ந்தார்கள். திறமையாகச் செயல்படுவதற்கு சட்டசபை மக்கள் அனைவரின் முழுப் பிரதிநிதியாக விளங்க வேண்டும். இரண்டாவதாக, அது ஒன்றுக்கு மேற்பட்டு, பொதுவாக இரண்டு சபைகளாக இருக்க வேண்டும், ஏனென்ருல் ஒரு சபை எவ்வளவு நன்ருக அமைக்கப்பட்ட போதிலும், மக்கள் அனைவருக்கும் பிரதிநிதியாக இருக்க முடியாது. மற்றும் முதல் சபையின் வேலையை இரண்டாவது சபை நிறைவுபடுத்துகிறது

விவாதம் பூரணமாகிறது. அரசியல் சுதந்திரத்தில் அவை ஒன்றுக்கொன்று கண்காணித்து, அபரிமிதமான பலமடையாமல் தடுத்துக்கொள்கின்றன.

கு: சட்டசபையின் வெற்றிக்கு உதவும் மற்ற அம்சங்கள் யாவை?

ஆ: நல்ல முறைகளும், அலுவல் விதிகளும்.

கு: அவற்றில் முக்கியமானவை எவை?

ஆ: முதலில், சட்டசபையால் தெரிந்தெடுக்கப்பட்ட நல்ல தலைமை அதிகாரி அவசியம். அவர் பாரபட்சமற்றும், சுதந்திரமாகவும், சட்டசபை நடைமுறைகளை அறிந்தும், சடுதியில் முடிவுகளைச் செய்பவராகவும், யஜமானராகவும், ஆனல், கொடுங்கோலராக இல்லாமலும். மரியாதையாகவும் ஆனல், உறுதியாகவும், இரக்கமாகவும், ஆனல், கண்யமாகவும் இருக்க வேண்டும்.

கு: அடுத்தது என்ன?

ஆ: நல்ல அலுவல் விதிகள். அதாவது சட்டசபை அலுவலை எளிதிலும் சடுதியிலும் நடத்த உதவும் விதிகள்.

கு: அவற்றில் முக்கியமானவை எவை?

ஆ: அவைகளாவன: 1. ஒவ்வொரு விவாதமும், ஒரு பிரேரணை அல்லது தீர்மானத்தில் உள்ள தெளிவான திட்டவட்டமான விஷயம் அல்லது விஷயங்கள் குறித்திருக்க வேண்டும். 2. ஒவ்வொரு விஷயத்தின்மீது நடக்கும் விவாதத்திற்கும் காலவரையறை இருக்க வேண்டும். 3. ஒவ்வொரு விவாதம் அல்லது பிரேரணை ஒரு முடிவு அல்லது வாக்கெடுப்புடன் பூர்த்தியாக வேண்டும். 4. எந்த விஷயத்தின் மீதும் கேட்கத் தகுந்த மக்களுக்கு வாய்ப்பளிக்க வேண்டும்; முட்டுக்கட்டை

போடும் தந்திரங்களால் விவாத சுதந்திரம் தவருகப் பயன்படுவதற்கு அனுமதிக்கக் கூடாது. 5. சிறுபான் மையினரின் பிரதிநிதிகள் பேசுவதற்குப் போதிய வாய்ப்பளிக்க வேண்டும். 6. தலைமை வகிக்கும் அதி காரியின் (சபாநாயகர்) முடிவு சரியோ தவருே, அதற் குக் கீழ்ப்படிய வேண்டும். 7. மசோதாக்கள் அல்லது தீர்மானங்களை பிரேரேபிப்பதற்குத் தனிப்பட்ட உறுப்பினர்களுக்குப் போதிய சந்தர்ப்பங்கள் அளிக்க வேண்டும். தற்காலப் போக்கைப் போல, சபையின் நேரம் முழுவதையும் மந்திரிசபை ஆக்கிரமித்துக் கொள்ளக் கூடாது. 8. நிர்வாகத்தைப் பற்றிக் கேள்வி கேட்கும் கேள்வி நேரத்தை, பயனுள்ள கேள்விகள் கேட்க உறுப்பினர்களும், முழுத் தகவல் களைக் கொடுக்க மந்திரிகளும் உபயோகப்படுத்த வேண்டும்.

கு: சட்டசபையின் திறமைக்கும் பலத்துக்கும் இவை போதுமா?

ஆ: பலத்தின் மற்ருெரு பகுதி இருக்கிறது. அது மிகப் பெரிது. அதுதான் மக்களின் பிரதிநிதி என்ற அதன் தன்மையும் செயலும். தன் அந்தஸ்திற்கும் அமைப்பிற்கும் மக்களிடம் அது கடமைப்பட்டுள்ளது என்பதையும், மக்களின் உரிமைகளையும், சுதந்திரங் களையும், நலன்களையும் அது பாதுகாத்து வளர்க்க வேண்டும், என்பதையும் அது எப்பொழுதும் நினை வில் வைத்திருக்க வேண்டும். "பாராளுமன்றச் சிறப் பும், சக்தியும், சாரமும், நாட்டின் எண்ணங்களின் பிரதிபலிப்பாக அது விளங்குவதில் அடங்கியுள்ளது" என்று பர்க் கூறியுள்ளார்.

கு: அதிலிருந்து, சட்டசபை மக்களைப் பின்பற்ற வேண்டும். மக்கள் தன்னைப் பின்பற்ற வே

என்று சட்டசபை கட்டாயப்படுத்தக் கூடாது என்று ஏற்படுகிறதா?

ஆ: நிச்சயமாக அதுதான் குடியாட்சியின் எல்லாவகை மக்கள் அரசாங்கத்தின் கொள்கை. 150 ஆண்டுகளுக்கு முன்னுல் பர்க் கூறியதுபோல, "மக்கள் விருப்பத்தைப் பின்பற்றுவது, கட்டாயப்படுத்துவதல்ல; நாட்டிலுள்ள பொதுவான கருத்துக்கு ஒரு உருவமும், வழியும் ஒழுங்கும் ஒரு திட்டமான அங்கீகாரமும் கொடுப்பதுதான் ஒரு சட்டசபையின் உண்மையான நோக்கமாகும்."

# 10. வரவு செலவுத் திட்டம்

கு: வரவு செலவுத் திட்டம் என்ருல் என்ன?

ஆ: வரவு செலவுத் திட்டம் என்பது ஒரு நாட்டின் வரவு செலவு அறிக்கை.

கு: அது ஏன் அவசியமாகிறது?

ஆ: நன்ருக நடத்தப்படும் குடும்பத்திற்கு ஒரு குடும்ப வரவு செலவுத் திட்டம் தேவைப்படுகிறது. அதாவது, குடும்பத்தின் ஆண்டு வருமானம் எவ்வளவு, எதிர்பார்க்கும் செலவு எவ்வளவு என்று கணக்கிட்டு, கடன் சுமை ஏற்படாமல் வருமானத்தைச் செலவிட்டு குடும்பத்தை நிர்வகிக்கிருர்கள். அதைப்போலவே நன்ருக நடத்தப்படும் நாட்டிலும் சிக்கனமாகவும் ஒழுங்காகவும், ஊதாரித்தனமில்லாமலும், வரவை விட செலவு அதிகமாவதால் ஏற்படும் கடன் இல்லாமலும், அரசாங்கம், நடைபெறுவதற்கு எதிர் பார்க்கும் வரவு, செலவு ஆகியவை பற்றிய ஆண்டு அறிக்கை தயாரிப்பது கட்டாயமாகும்.

கு: நாட்டின் வரவுசெலவுத் திட்டத்தைத் தயாரிப்பது யார்?

ஆ: நாட்டின் விவகாரங்களை நிர்வகிக்கும் பொறுப்புள்ள அரசாங்கம் நாட்டின் நிதிகளை நிர்வகிக்கும் பொறுப் புள்ள தன் நிதித் துறையில் தயாராகிறது.

கு: அது எப்பொழுது தயாரிக்கப்படுகிறது, ஒரு நிதி ஆண்டின் இறுதியில் அது வெளியிடப்படுகிறது,

அடுத்த ஆண்டின் வரவுசெலவு பற்றி அது விளக்கு கிறது. ஆனல், அதைத் தயாரிக்கும் வேலே, அதாவது செலவு மதிப்பீடு, அக்டோபர் அல்லது நவம்பர் மாதமே ஆரம்பமாகின்றது.

கு: நிதி ஆண்டு என்ருல் என்ன?

ஆ: ஜனவரி மாதம் ஆரம்பமாகி டிசம்பரில் முடியும் சாதாரண ஆண்டை போன்றதன்று. அது ஏப்ரல் மாதம் ஆரம்பமாகி மார்ச் மாதம் முடிவடைகிறது.

கு: நிதியாண்டு ஏன் மாறுபட்டிருக்கிறது?

ஆ; இங்கிலாந்தில் அதன் காரணம் சரித்திரபூர்வமானது. ஏனென்ருல் தொன்றுதொட்டு அது அவ்வாறு இருந்து வந்துள்ளது. இந்தியாவில் வேளாண்மை ஆண்டு மார்ச்சில் முடிவதாலும், அப்பொழுது அறுவடை முடிந்து அரசாங்கத்திற்கு விவசாயிகள் வரி செலுத்த இயலுவதாலும், அண்மைக் காலம்வரை நிலவரியே (கிஸ்தி) நாட்டின் மிகப் பெரிய வருமான பகுதியாக இருந்ததாலும் நிதியாண்டு மாறுபட்டுள்ளது.

கு: ஒவ்வொரு ஆண்டிலும் வரவுசெலவுத் திட்டத்தைத் தயாரித்து வெளியிடுவது ஏன்? அதைச் சில ஆண்டுகளுக்கு, எடுத்துக்காட்டாக 5 ஆண்டுகாலத்திற்குத் தாயாரிக்கக் கூடாது?

ஆ: திட்டங்களுக்கு அதிக வாய்ப்பளிப்பதாக அந்த யோசனே அவ்வப்போது கூறப்பட்டு வந்துள்ளது. ஆனல், அது ஏற்றுக்கொள்ளப்படவில்லே. ஒரு சமயத்தில் ஒரு ஆண்டுக்கு அதிகமான வரவு செலவுத் திட்டத்தை அங்கீகரிப்பது தீங்குள்ளதாகும்.

கு: என்ன தீங்கு?

ஆ: ஒரே சமயத்தில் ஒரு ஆண்டுக்கு அதிகமாக முன்னேக்க, அநேக அரசாங்க்ங்களே நம்ப இயலாது என்

பதே அந்தத் தீங்கு; ஊதாரித்தனமான செலவுத் திட்டங்களைத் தயாரிக்கும் ஆசை அவைகளுக்கு ஏற்படக் கூடும். வருமான மதிப்பீடுகளில் அவை தவறு செய்யலாம். இப்பொழுது ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில்கூட அதை அவை செய்கின்றன. மற்றும் குடியாட்சி முறை அரசாங்கத்தில் ஒவ்வொரு ஆண்டும் வரவு செலவுத் திட்டம் கொடுக்கப்பட்டால்தான் மக்களும் அவர்களுடைய பிரதிநிதிகளும் அதை நன்ருகக் கண்காணிக்கவும் சரிபார்க்கவும் இயலும். அரசாங்கத்தின் மீது அவர்கள் திறமையானகட்டுப்பாடு கொள்ள வேண்டுமானுல், ஒவ்வொரு ஆண்டிலும் வரவு செலவுத் திட்டத்தில் அவர்களுக்கு அதிகாரமிருக்க வேண்டும்.

கு: வரவு செலவுத் திட்டத்தின் மீது மக்களுக்கும் அவர்களுடைய பிரதிநிதிகளுக்கும் அதிகாரம் அல்லது கண்காணிப்பு அல்லது கட்டுப்பாடு ஏனிருக்க வேண்டும்?

ஆ: வரிகள் மூலம் தன் வருமானத்தை அரசாங்கம் பெறுவது மக்களுடைய பணமே. ஆகவே, அந்தப் பணத்தைச் சரியான வகையில் அரசாங்கம் செலவிடுகிறதா என்று கண்காணிப்பது மக்கள் வேலை. வரவு செலவுத் திட்டத்தைக் கவனமாகச் சரிபார்ப்பது, கட்டுப்படுத்துவது ஆகியவை மூலம்தான் மக்களுடைய விருப்பத்திற்கும் நன்மைக்கும் உகந்தவாறு அரசாங்கம் நடைபெறச் செய்ய இயலும். இங்கிலாந்தில் ஆரம்ப முதல் இந்த அரசியல் கொள்கையை வற்புறுத்திச் செயலாற்றியதால்தான் பாராளுமன்றம் வலுவடைந்தது. மானியங்களைப் பாராளு மன்றம் அங்கீகரிப்பதற்கு முன்பாகக் குறைகளை அரசாங்கம் தீர்க்க வேண்டும்.

கு: சட்ட சபையில் வரவு செலவுத் திட்டத்தின் மீது இந்தக் கட்டுப்பாட்டை மக்களும், அவர்களுடைய பிரதிநிதிகளும் எவ்வாறு பயன்படுத்துகிருர்கள்?

ஆ: ஒவ்வொரு ஆண்டிலும் மார்ச் மாதம், அடுத்த வருட வரவு, செலவு மதிப்பீடுகளின் அறிக்கையாக பட்ஜெட்டை அரசாங்கம் சமர்ப்பித்து, அதை அங்கீகரிக்கும்படி சட்ட சபையைக் கோருகிறது. அது அங்கீகரிக்கப்பட்டால்தான் அரசாங்கம் வரிகளேவசூலித்து, செல்வுகளேச் செய்ய இயலும்.

கு: 200–300 பக்கங்கள் போலியோ அளவுள்ள புத்தகமாகிய தற்கால வரவு செவு திட்டத்தில் உள்ள மலே போன்ற பொருள்களே எவ்வாறு சட்ட சபை உறுப்பினர்கள் படித்தறிய முடியும்?

ஆ: தற்கால வரவு செலவுத்திட்டம் பெரிதாக இருந்தபோதிலும், அதன் தயாரிப்பிலுள்ள சில கொள்கைகள் அதைச் சிறிது முயற்சியுடன் படித்து சமாளிக்க உதவுகின்றன.

கு: அந்தக் கொள்கைகள் யாவை?

ஆ: மிக முக்கியமான கொள்கைகளில் ஒன்று, செலவை மதிப்பிடுவது.

கு: நாட்டு வரவு செலவுத் திட்டத்தைத் தயாரிப்பதில் செலவை ஏன் முதலில் கவனிக்க வேண்டும்? குடும்ப வரவு செலவு மதிப்பீட்டில் வருமானத்தைத்தான் முதலில் கவனிக்கிருர்கள். "துணிக்குத் தகுந்த சட்டை" என்ற மூதுரைக்கு ஏற்ப வருமானத்துக்குத் தகுந்தபடி செலவு செய்யப்படுகிறது அல்லவா?

ஆ: செலவும், செலவு யோசனேகளும் முதலில் கவனிக்கப்படவேண்டும். ஏனென்ருல், சில வகைச் செலவுகள் நாடு வாழ கட்டாயமானவை. வெளியிடத்திலிருந்து தன் உரிமைக்கு இடர் ஏற்படாமல் நாட்டைப் பாது

காக்க படைச் செலவு, உள் நாட்டில் குழப்பம் ஏற்படுவதிலிருந்து பாதுகாக்க நாட்டுக் காவலர் செலவு ஆகியவை தவிர்க்க முடியாத செலவுகள். நாடு அழியாமல் வாழ்வதற்காக அந்தச் செலவுகளுக்கு நாடு வகை செய்ய வேண்டும். அதைப் போலவே, வரிகளை வசூலிக்கும் நிதித் துறை, நிலவரியை வசூலிக்கும் நில வருமானத் துறை. (ரெவினியூ) ஆகிய முக்கிய அரசாங்கத் துறைகளின் செலவுகளுக்கு வகை செய்வதும், மிக அவசியமாகும். ஒரு நாட்டின் வரவு செலவுத் திட்டத்தில் வருமானத்திற்கு முன்பாக செலவு கவனிக்கப்படுகிறது. ஏனென்றால், கடந்த நூற்றாண்டில்வாழ்ந்த பிரெஞ்சு நாட்டின் சிறந்த நிதி மந்திரிகளில் ஒருவரான பேரன் லூயி கூறியது போல, "ஒரு நாட்டில் நிலையான வருமானமில்லை. ஆனால், நிலையான செலவு இருக்கிறது."

கு: ஆனால்,செலவைமுதலில் கவனிக்கவேண்டும் என்ற இந்தத் தத்துவம் ஊதாரித்தனத்திற்கு வழிகோலாதா. ஏனென்றால், அரசாங்கத் துறைகள் குறிப்பாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட மந்திரிகளின் கீழுள்ளவை. இயன்ற அளவுக்குப் பணத்தைச் செலவிட விரும்பும்?

ஆ: அதனால்தான் இன்றியமையாத செலவு என்றும் அப்படியல்லாத செலவு என்றும் வேறு படுத்த வேண்டும். படை, நாட்டுக் காவல், மற்றும் நாட்டின் தவிர்க்க முடியாத துறைகளுக்கு அரசாங்கம் பணம் ஒதுக்க வேண்டும். பிறகு பணம் மிஞ்சினால் கல்வி, நல்வழி, வேளாண்மை, தொழில் முன்னேற்றம் ஆகியவற்றிற்குச் செலவிடலாம்.

கு: அரசாங்கம் கேட்டதற்கும் அதிகமான செலவைச் சட்டசபை அங்கீகரிக்க இயலுமா? தான் பெரும்பாலானவரின் ஆதரவைப் பெற முடிந்தால் எந்த விஷ

யத்திற்காவது செலவை அதிகரிக்க ஒரு உறுப்பினர் முற்பட இயலாதா ?

ஆ: இல்லை, தன்னிடமுள்ள தகவலின்படி நாடு எவ்வளவு செலவைத் தாங்கும் என்பது அரசாங்கத்திற்குத் தான் தெரியும். வேறு யாருக்கும் தெரியாது. செலவை அதிகரிக்க சட்ட சபை உறுப்பினர்களுக்கு ஒரு தடவை அனுமதி கொடுத்தால், அதற்கு முடிவே இருக்காது. நிதி நிர்வாகத்திற்கு பொறுப்பான அரசாங்கத்தால் பணத்தைத் தேட இயலாமல் போய் விடும். ஆகவே, இங்கிலாந்தின் பாராளுமன்ற வழக்கத்தை யொட்டி, இந்த அரசியல் சட்டத்தில் ஒரு வாசகம் சேர்க்கப்பட்டிருக்கிறது. அதன்படி, அரசாங்கத்தால் கொடுக்கப்படும் வரவு செலவு திட்டத்தில் அதிகச் செலவை எந்தத் தனிப்பட்ட உறுப்பினரும் சேர்க்க முடியாதபடி தடுக்கப்பட்டுள்ளது. செலவைச் சட்ட சபை குறைக்கலாம், ஆனால், அதிகரிக்க முடியாது.

கு: நல்ல வரவுசெலவுத் திட்டத்தைத் தயாரிப்பதற்கான இதர கொள்கைகள் யாவை?

ஆ: மிக முக்கியமானவை வருமாறு:— (1) அந்த ஆண்டின் வரவு செலவு ஆகியவற்றின் முழுக் கணக்கையும், அரசாங்கத்தின் எல்லாத் துறைகளிலும்,எல்லா நடவடிக்கைகளிலும் ஏற்படும் வரவு செலவுகளை, வரவு செலவுத் திட்டம் வெளியிட வேண்டும். (2) அது சௌகரியமான அத்யாயங்களாகவும் பகுதிகளாகவும் பிரிக்கப்பட்டு படை, நாட்டுக் காவல் போன்ற அநேக இனங்களின் செலவையும், பல இடங்களிலிருந்து கிடைக்கும் வருமான விவரத்தையும் அது காட்ட வேண்டும். 3. குறிப்பிட்ட தலைப்புகளில் செலவையும் வரு

மானத்தையும் அது விளக்கிக் காட்ட வேண்டும். அதனால் செலவைத் தெளிவாகக் கட்டுப்படுத்தவும் வருமானத்தைச் சரியாக மதிப்பிடவும் இயலவேண்டும். எடுத்துக்காட்டாக பாதுகாப்புத் துறைக்கு இவ்வளவு கோடி ரூபாய் என்று பட்ஜெட் கூறக்கூடாது. அதன் விவரங்களைத் தெரிவிக்க வேண்டும். கட்டிடங்களுக்கு, பீரங்கிகளுக்கு, வெடி மருந்துகளுக்கு, கப்பல்களுக்கு அதிகாரிகளுக்கு மற்ற சிப்பாய்களுக்கு தனித்தனியே எவ்வளவு என்பதை அது தெரிவிக்க வேண்டும். வருமானத்தில் சுங்க வருமானத்தில் நிலச் சுங்கத்தில் எவ்வளவு, கடல் சுங்கத்தில் எவ்வளவு என்பதையும், கடல் சுங்க வருமானத்தில் துணி மூலம் எவ்வளவு, கார்கள் மூலம் எவ்வளவு, இயந்திரங்கள் மூலம் எவ்வளவு என்பதையும் தெரிவிக்க வேண்டும். இதைப்போல விவரம் தெரிவிக்கப்பட வேண்டும். இந்த விவரங்கள் விதி அல்லது பட்ஜெட்டின் சிறப்புத் தன்மை என்று அழைக்கப்படுவது, வரவு செலவை சரியாக மதிப்பிடுவதற்கு மட்டுமின்றி, நாட்டின் நிதி நிர்வாகத்தின்மீது சட்டசபை பயனுள்ள கட்டுப்பாடு கொள்ள அவசியமாகிறது.

கு: நிதி நிர்வாகத்தின் மீது சட்டசபை ஏன் கட்டுப்பாடு கொள்ள வேண்டும்?

ஆ: சட்டசபையானது மக்களின் பிரதிநிதித்வ சபை. ஆகவே, நாட்டை ஆள்வதற்காக மக்களிடமிருந்து அரசாங்கம் வசூலித்த வரிகள் எவ்வாறு செலவிடப்பட்டன என்பதையும், மக்களிடமிருந்து வசூலிக்கப்பட்ட வரிகள் அனைத்தும் அரசாங்கத் தேவைகளுக்கு அவசியம்தானா என்பதையும் அது தெரிந்து கொள்ள வேண்டும்.

கு: நாட்டின் வருமானத்திற்கு வரிகள் மட்டுமே மூலாதாரமா?

ஆ: இல்லை—நீர்ப்பாசன வேலைகள் போன்ற பெரிய திட்டங்களை நிறைவேற்றவோ அல்லது ஒரு போரை நடத்தவோ வரிகள் போதாமல் இருக்கும்போது, பாமர மக்களின் வரிச்சுமையை அதிகரிக்காமலிருப்பதற்காகத் தற்கால அரசாங்கங்கள் கடன் வாங்குகின்றன—அத்தகைய கடனுக்கு நாட்டுக் கடன் என்று பெயர்.

கு: யாரிடமிருந்து அரசாங்கம் கடன் வாங்குகிறது?

ஆ: அரசாங்கத்திற்குக் கடன் கொடுக்கப் பண வாய்ப்பு உள்ளவர்களிடமிருந்து.

கு: அப்படியானல் அரசாங்கத்திற்குத் தேவையான பணம் முழுவதையும் வாய்ப்புள்ளவர்களிடமிருந்து ஏன் கடனகைப் பெறக்கூடாது?

ஆ: முதலாவதாகக் கடன் மூலம் அவர்களுக்குத் தேவைப்படும் பணம் முழுவதும் கிடைக்காது. அரசாங்கம் கடன் வாங்குவதும், பொதுமக்கள்மீது ஒரு சுமையே ஆகும்.

கு: தேசக் கடன்கள் எவ்வாறு பொது மக்கள்மீது சுமையாகின்றன?

ஆ: எப்பொழுதாவது கடன்களைத் திருப்பிக் கொடுத்தாக வேண்டும். கடனை அடைப்பதற்காக ஒவ்வொரு ஆண்டிலும் ஒருகுறிப்பிட்ட தொகையை அரசாங்கம் ஒதுக்க வேண்டும். அரசாங்கக் கடன்களைத் திருப்பிக் கொடுப்பதற்காக ஒதுக்கப்படும் இந்த நிதிக்கு இங்கிலாந்தில் கடன் தீர்நிதி (சிங்கிங் பண்ட்) என்று பெயர். இந்தப் பணம் வரிகளிலிருந்து ஒதுக்கப்படுகிறது.

கு: வரவுசெலவுத் திட்டத்தில் கடன் அல்லது நாட்டுக் கடன் கணக்கு காட்டப்படுகிறதா?

ஆ: ஆம். மக்களும், மக்களுடைய பிரதிநிதிகளும், அரசாங்கம் எவ்வளவு கடன்பட்டிருக்கிறது என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டும். இந்தக் கணக்கு, பட்ஜெட்டின் சாதாரண கணக்கிலிருந்து தனியாகக் காட்டப்பட வேண்டும்.

கு: தன் நிர்வாகத்திற்குப் பணம் செலவிடுவதற்காக அரசாங்கம் குறைந்த அளவிற்குத்தான் கடன் வாங்க இயலுமா?

ஆ: ஆமாம், நாட்டுக் கடன் சுமையை சுமப்பது மக்களே. மிதமிஞ்சிக் கடன் வாங்கும் அரசாங்கம் குறித்தகாலத்தில் வட்டியைக் கொடுக்க இயலாமலும் கடனை அடைக்க முடியாமலும் போய்விடும். அப்பொழுது அது தன்னை திவால் ஆனதாக அறிவிக்க நேரும். அது ஒரு புரட்சியைத் தோற்றுவிக்கும்.

கு: பட்ஜெட் மீது சட்டசபை எவ்வாறு கட்டுப்பாடு செலுத்துகிறது.

ஆ: ஒவ்வொரு ஆண்டிலும் பட்ஜெட்டை சட்டசபையில் நிதி மந்திரி சமர்ப்பித்ததும், அதை சட்டசபை உறுப்பினர்கள் பொதுவாகவும், விசேஷமாகவும் ஆராய்ந்து பார்க்கிறார்கள்.

கு: பட்ஜெட்மீது பொது ஆராய்ச்சி என்றால் என்ன?

ஆ: செலவு வரவின் முக்கிய பகுதிகளை உறுப்பினர்கள் ஆராய்ந்து பார்ப்பது என்று அதற்குப்பொருள். இந்தச் செலவு ஏன், எவ்வாறு அதிகமாக உள்ளது என்பதை ஒரு உறுப்பினர் சுட்டிக் காட்டுவார், ஒரு வரி ஏன் அதிகமாகவும் அவசியமற்றும் இருக்கிறது என்பதையும் அதைக் குறைக்க வேண்டும் என்பதை

யும் மற்ருெரு உறுப்பினர் எடுத்துரைப்பார்; தவறுகள் அல்லது குறைபாடுகள் காரணமாக ஒருஅரசாங்கத் துறைக்கு ஏன் எவ்வாறு பணம் செலவிடத் தகுதியற்றது என்பதையோ, அல்லது ஒரு துறை எவ்வாறு உதவாக்கரை திட்டங்களில் பணத்தை வீணுக்குகிறது என்பதையோ மூன்ருவது உறுப்பினர் விளக்குவார். உண்மையில், சட்டசபையில் பட்ஜெட் மீது எழும் பொது விவாதம், நிர்வாகத்தின் மீது வருடாந்திரப் பரிசீலனை நடத்த மக்களுடைய பிரதிநிதிகளுக்கு வாய்ப்பளிக்கிறது.

கு: பட்ஜெட் மீது விசேஷப் பரிசீலனை எவ்வாறு நடத்தப்படுகிறது?

ஆ: ஒரு துறையின் அல்லது மந்திரியாலயத்தின் ஒவ்வொரு செலவும் மான்யக் கோரிக்கை என்ற உருவில் அளிக்கப்படும் போது, சட்டசபை உறுப்பினர்கள் அத்தகைய ஒவ்வொரு செலவு வகையையும் நுணுக்கமாக ஆராய்ந்து, பிறகு அதை அனுமதிக்கிருர்கள், அல்லது நிராகரிக்கிருர்கள், அல்லது குறைக்கிருர்கள்.

கு: அப்படியாளுல் சட்டசபையில் பட்ஜெட் விவாதத்திற்கு நீண்ட நேரம் ஆகிறதா?

ஆ: ஆம், அவ்வாறுதான் ஆகவேண்டும், ஏனென்ருல் அரசாங்கத்தின் நிதி நிர்வாகம் முழுவதும் விவாதத்திற்கு வருகிறது. அதைப் பரிசீலனை செய்ய பிரதிநிதித்வ சபைக்கு முழுவாய்ப்பும், போதிய நேரமும் கிடைக்க வேண்டியது அவசியம்.

கு: பட்ஜெட் பரிசீலனைக்கு இந்திய சட்டசபைகளில் அனுமதிக்கப்படும் நேரம் போதுமா?

ஆ: போதாது. ஏனென்ருல் உயர்ந்தது 2 அல்லது 3 மாதங்களுக்குள் அது முடிக்கப்படுகிறது. ஆனுல், இங்கிலாந்தில் அதற்கு 6 மாதமாகிறது.

கு: சட்டசபையால் பட்ஜெட் பரிசீலனே செய்வதில் இந்திய முறையில் உள்ள இதர குறைகள் யாவை?

ஆ: முழுச் சபையைக் கொண்ட குழுக்கள், மதிப்பீட்டுக் குழு, வழிவகைகள் குழு மூலம் (ஒரு குழுவில் விவாதம் நடக்கும்போது ஒரு உறுப்பினர் பலமுறை பேசலாம்) பட்ஜெட் விவாதத்தை நடத்தும் ஆங்கில முறை இங்கு உபயோகப் படுத்தப்படுவ தில்லே. சட்டசபையின் சார்பில் கடந்த ஆண்டு கணக்குகளேப் பரிசீலிக்கும் பொதுக் கணக்குக் குழு மட்டும் இந்தியாவில் பயன்படுத்தப்படுகிறது.

கு: பட்ஜெட்டின் வருமானப் பகுதி எப்பொழுது விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது?

ஆ; அந்த ஆண்டின் நிதி மசோதா என்ற மசோதா சமர்ப்பிக்கப்படும் போது—பட்ஜெட் கூட்டத்தின் இறுதியில் அது அளிக்கப்படுகிறது.

கு: அப்படியானுல் பட்ஜெட்தான் சட்டசபையின் மிக முக்கியமான அலுவலா?

ஆ: ஆம்.—நல்ல ஆட்சிக்கு நிதிதான் திறவுகோலும் பிரதிபலிப்புமாகும். ஒரு நாட்டின் நல்ல நிலேயிலுள்ள நிதிகளும், பெரிய பற்ருக்குறைகள் இல்லாததும், வருமானத்தை யொட்டி செலவு நடைபெறுவதும், வரிவிதிப்பு அதிக பளுவில்லாததும், தேசியக் கடன் அதிகமில்லாமலும் உள்ள நாடு அமைதியையும் வளத்தையும் நிச்சயமாக அடைய இயலும். நிர்வாகம் முழுவதையும் அளவிட்டுச் சீரமைக்க பட்ஜெட் காலம் பிரதிநிதித்வ சபைக்கு வாய்ப்பளிக்கிறது.

கு: நல்ல நிதி நிர்வாகம் நடைபெறுவதற்கு சட்டசபை எவ்வாறு உதவ இயலும்?

ஆ: பட்ஜெட்டை உறுப்பினர்கள் ஊன்றிப் படிப்பதன் மூலம். தற்கால பட்ஜெட்டுகள் பெரிதாக இருந்த போதிலும், அவர்களுக்கு ஆர்வமுள்ள பகுதிகளை நுணுக்கமாகப் படித்து, எல்லாத் தகவல்களையும் சேகரித்து, பட்ஜெட்டின் பொது விவாதத்திலும் விசேஷ விவாதத்திலும் ஒவ்வொரு விஷயம் குறித்தும் தங்களுடைய விவேகத்தையும் அறிவையும் உறுப்பினர்கள் அளிக்க வேண்டும்.

கு: பட்ஜெட் விவாதங்களில் கலந்துகொள்ள ஒவ்வொரு உறுப்பினரும் கடமைப்பட்டிருக்கிருரா?

ஆ: ஆம். அவரிடம் பயனுள்ளது ஏதாவது கூறவிருக்குமாளுல் அதை வெளியிட அவர் தனக்கும், தன் தொகுதிக்கும், தன் நாட்டுக்கும் கடமைப்பட்டுள்ளார். சட்டசபையின் விழிப்பும், நிதி இலாகாவின் நேர்மையுமே ஒரு நல்ல பட்ஜெட்டை உருவாக்கும். பாரன் லூயி கூறியது போல, "பட்ஜெட்டில் உண்மை விளங்க வேண்டும், எந்தச் செலவையும் மறைக்காமல், நாட்டின் எல்லா வருமானத்தையும் சேர்க்க வேண்டும்" என்றிருக்குமாளுல் நிர்வாகம், சட்டசபை ஆகியவற்றின் ஒத்துழைப்பு அவசியம்.

# 11. சட்டங்களும், சட்ட திட்டங்களும்

கு: டெல்லியிலுள்ள சட்டசபையிடமிருந்தும், மற்ற சட்டசபைகளிடமிருந்தும் நாம் என்ன எதிர்பார்க்கலாம்?

ஆ: நாட்டின் உள் நாட்டு வெளிநாட்டு விவகாரங்களைக் கவனிப்பதுடன், சில சட்டசபைத் திட்டங்களை நிறைவேற்றும் முயற்சிகளையும் நாம் எதிர்பார்க்கலாம்.

கு: சட்டசபைத் திட்டம் என்றால் என்ன?

ஆ: சட்டசபைத் திட்டம் என்பது, சட்டசபை கவனிப்பதற்கும் நிறைவேற்றுவதற்கும் அரசாங்கம் கொண்டு வருகிற புதிய சட்டங்கள் அல்லது பழைய சட்டங்களின் திருத்தங்கள் கொண்ட பட்டியல்.

கு: ஒவ்வொரு சட்டசபைக் கூட்டத்திற்கும் சட்டசபைத் திட்டங்கள் அவசியமா?

ஆ: இல்லை. சட்டசபைத் திட்டங்கள் இன்றியமையாதனவன்று. சட்டசபை, ஒரு கூட்டத்தில் பல சட்டங்களைச் செய்யும் சட்டத் தொழிற்சாலையல்ல! நாட்டின் பொது விவகாரங்களையும் நாட்டின் தேவைகளையும் மக்களின் குறைகளையும் கவனித்துத் தீர்க்கும் பிரதிநிதித்வ சபையே ஒரு சட்டசபை. தவிர்க்க முடியாத போதுதான் சட்டங்கள் கொண்டு வரப்பட்டு, கவனிக்கப்பட்டு, நிறைவேற்றப்படுகின்றன.

கு: சட்டம் என்றால் என்ன?

ஆ: சட்டம் என்பதை, "பொது நன்மையை வளர்க்கும் நோக்கத்துடன் அதிகாரத்தில் உள்ளவரால் இயற்றப்படும் அறிவுடைய விதி" என்று தாமஸ் அக்வினஸ் விவரித்துள்ளார், மதச்சட்டம் அல்லது ஒழுக்கச் சட்டத்திலிருந்து மாறுபட்ட அரசாங்கச் சட்டம், விவேகத்திலிருந்து, எழுந்த விவேகம் கொண்டவிதி சமுதாயத்தின் நலத்தை வளர்ப்பது அதன் நோக்கம் அதிகாரம் உள்ள ஒருவரால் அல்லது பலர் அடங்கிய குழுவால் அது இயற்றப்படுகிறது.

கு: விவேக விதி என்பதன் பொருள் என்ன?

ஆ: சட்டம் என்பது விவேக விதி என்று நாம் கூறும் போது, அதன் பொருள், விவேகத்தால் சட்டம் உருவானது என்பதாகும். வழக்கம், பரம்பரை, ஆசாரம் அல்லது மதம் அல்லது ஒழுக்கம் ஆகியவை காரணமாக மட்டும் அது இயற்றப்படுவதில்லை, ஆனல், வழக்கங்கள் அல்லது பரம்பரை ஆசாரங்கள் அல்லது ஒழுக்கங்கள் ஆகியவற்றின் விதிகள் விவேகமாக இருந்தால் அவை சட்டங்களாக இயற்றப்படலாம்.

கு: பகுத்தறிவுள்ள அல்லது பகுத்தறிவின் சட்டம் என்பது எது ?

ஆ: பகுத்தறிவு சார்ந்த அல்லது பகுத்தறிவுச் சட்டம் என்பது சாதாரண அறிவுள்ள மனிதனின் அறிவுக்கெட்டியபடி சமுதாயத்திற்குப் பயனுள்ளதாக கருதப்படுவது— அதாவது சமுதாயத்தின் நன்மையை வளர்ப்பது.

கு: சட்டசபையால் நிறைவேற்றப்பட்ட சட்டங்கள், மதம் அல்லது ஒழுக்கச் சட்டங்களிலிருந்து வேறுபட்டவை என்று ஏன் நீங்கள் கூறினீர்கள்?

ஆ: மதம் அல்லது ஒழுக்கச் சட்டங்கள், மனிதனின் உட்புற ஆன்மீக நிலைமை, முன்னேற்றம் பற்றியவை.

சட்டசபையால் நிறைவேற்றப்படும் சட்டங்கள் மனிதனின் வெளிப்புறச் செயல்களைப் பற்றியவை. மதமும் ஒழுக்கமும் மனிதனின் தனிப்பட்ட செயல்களையும், கடமைகளையும், பற்றியவை. மனிதனின் செயல்கள், நடவடிக்கைகள் மூலம் காணப்படும் அவனுடைய பொது நடத்தையைப் பாதிப்பவை சட்டங்கள். பென்தம் என்ற சிறந்த நீதிமான் கூறியதுபோல, சட்டத்திற்கும் ஒழுக்கத்திற்கும் ஒரே மையம். ஆனால், அவற்றின் சுற்றளவுகள் வேறுபட்டவை. சட்டம், மனிதனின் வெளிப்புறச் செயல்களைக் கவனித்து அக்கறை கொள்கிறது. அவனுடைய உட்புற நோக்கத்தில்சட்டத்திற்கு அக்கறை இல்லை. ஆனால், ஒழுக்கமும் மதமும் மனிதனின் உட்புற நோக்கத்தில் அக்கறை கொள்கின்றன.

கு: எடுத்துக் காட்டின் மூலம் விவரிப்பீர்களா?

ஆ: பொது இடத்தில் குடிபோதையால் ஏற்படும் நிகழ்ச்சி குழப்பத்தை ஏற்படுத்தி, மற்றவர்களுக்கோ அல்லது சமுதாயத்திற்கோ அபாயத்தை உண்டாக்கினால் சட்ட சபையால் நிறைவேற்றப்பட்ட சட்டத்தால் அந்தச் செயல் தண்டனையைக் கொடுக்கும். ஆனால் மதம் அல்லது ஒழுக்க விதிகளின்படி வீட்டில் மது பானம் குடித்தாலும் அது கண்டிக்கப்படுகிறது. ஏனென்றால். அது அவனுடைய கண்யத்திற்கும்' தன்மதிப்பிற்கும் கேடானது, அது தன்-கட்டுப்பாட்டின்மையைக் காட்டுகிறது.

கு: அப்படியானால், இந்தியாவிலுள்ள பல சட்ட சபைகளால் இயற்றப்பட்டு, அரசாங்கத்தால் அமுல் செய்யப்படுகிற சட்டங்கள், அந்தச் சொல்லின் உண்மை

யான கண்டிப்பான பொருளுக்கு பொருத்தமற்றவையா?

ஆ: இல்லை. அவைகள் சட்டங்கள் என்ற சொல்லின் உண்மையான கண்டிப்பான பொருளுக்கு பொருத்தமற்றவை.

கு: அது ஏன்?

ஆ: மதுவிலக்குச் சட்டங்கள், ஒரு சட்டத்தின் ஒவ்வொரு விதியையும், தேவையையும் மீறுகின்றன. ஏனென்றால், (1) அவை விவேக விதிகளன்று. ஆனால், மன எழுச்சியாலும், உணர்ச்சிப் பெருக்காலும் எற்பட்டவை. சட்டசபையின் சட்டத்தால் குடிப்பழக்கத்திலிருந்து மனிதர்களை மீட்க முடியாது என்பதை சரித்திர அனுபவமும், தற்கால உலக அனுபவமும் நமக்குப் புகட்டுகின்றன. மனிதனின் ஆத்ம சக்தியால் தான் குடிப்பழக்கத்திலிருந்து அவன் விடுபட இயலும். மதுவிலக்குச் சட்டத்தால் மனிதனின் ஆத்ம சக்தி பாதிக்கப்படுவதில்லை. மது அருந்துவது தொன்று தொட்ட வழக்கமாக இருப்பதால், அந்தத் தாகத்தைத் தணிப்பதற்காக மனிதன் பலவகைகளில் ஈடுபடுகிறான். மதுவிலக்குச் சட்டங்களை மீறி அடிக்கடி நடக்கும் குற்றங்களும், இந்தியாவில் கள்ளச் சாராயம் காய்ச்சுவது ஒரு குடிசைத் தொழிலானதும் அதைக் காட்டுகின்றன. (2) ஒழுக்கக் கேட்டிற்கும் குற்றத்துக்கும் உள்ள அடிப்படை வேறுபாட்டை அவை புறக்கணிக்கின்றன. தன்மீது மனிதன் தானே இழைக்கும் தவறுகளான ஒழுக்கக் கேடுகள் மதம், ஒழுக்கம் ஆகியவற்றின் வரம்புக்குட்பட்டவை. மனிதன் மற்றவர்கள்மீது இழைக்கும் தவறுகளான குற்றங்கள் சட்டத்தின் வரம்புக்குட்பட்டவை. அதிகமாகக் குடிப்பதும், குடி மயக்கமும் ஒழுக்கக் கேடுகள்.

அவற்றை மதம் அல்லது ஒழுக்கம் குணப்படுத்த வேண்டும் அல்லது கட்டுப்படுத்த வேண்டும். புராதன காலத்தில் ஒழுக்கக் கேட்டிற்கும் குற்றத்திற்கும் உள்ள வேறுபாடு தெரியாத காலத்தில் சட்டம் அல்லது வழக்கம் அந்த இரண்டையும் கட்டுப்படுத்த முயன்றது. நாகரீகமும் கலாச்சாரமும் வளரும்போது நாகரீகத்தின் காரணமும் விளைவுமாகிய அலுவல் நுட்பம் தோன்றுகிறது. அத்தகைய நுட்பம் ஒழுக்கக் கேட்டை மதம், ஒழுக்கம் ஆகியவற்றின் கட்டுப்பாட்டிற்கும், குற்றத்தை சட்டத்தின் கட்டுப்பாட்டிற்கும் ஒதுக்குகிறது.

கு: நுட்ப தன்மையின் விளைவுகளைத் தவிர, ஒழுக்கக் கேடுகளுக்கு எதிராக சட்டங்கள் இயங்கி ஒழுக்கத்தை ஏன் ஏற்படுத்தக் கூடாது?

ஆ: ஒழுக்கங்கள் மனிதர்கள் தங்களுக்குச் செய்து கொள்ளும் தனிப்பட்ட கடமைகள் அல்லது வீடுகளில், குடும்பங்களில் அல்லது சமூகத்தில் தனிப்பட்டுச் செய்யும் கடமைகள். நாட்டை எதிர்த்துச் செய்வதன்று. இந்தக் கடமைகளைச் செய்யக்கட்டாயப்படுத்தினால் தண்டனைகள் ஏராளமாகவும் அடிக்கடியும், கடுமையாகவும் இருக்க வேண்டும். அதனால், அவற்றிலிருந்து எளிதில் தப்பிக்க முடியும். அவற்றை அமுல் செய்வதும் கடினமானது. குற்றத்தினால் ஏற்படும் தீங்கின் முக்கியத்துக்கு அவை அவசியமற்றவை. ஒவ்வொரு சட்டமும் சிக்கலாக இருக்கவேண்டும், ஆகவே, அதை மீறுவது எளிது. ஒழுக்கக்கேடுகளை ஒழிக்கும் சட்டங்களை அமுல் செய்வதற்கு ஏராளமான ஒற்றர்களும், காட்டிக் கொடுப்பவர்களும் தேவைப்படுவார்கள். சந்தேகமும், தொல்லைகளும் சமூக வாழ்க்கையை அபாயமாக்கிவிட்டாலும்,

வேதனையாகி விடும். சம்பந்தப்பட்ட ஒழுக்கக் கேட்டை ஒழிப்பதற்குப் பதிலாக வேறு வகையான புதிய அபாயகரமான ஒழுக்கக் கேடுகள், ஒழுக்க வேலையை சட்டங்கள் செய்ய முயற்சிப்பதன் விளைவாகத் தோன்றும்.

கு: ஒழுக்கம் குறித்தும், ஒழுக்கத்தை வளர்ப்பது குறித்தும் சட்டங்களுக்கும், சட்டதிட்டங்களுக்கும் சம்பந்தமில்லையா?

ஆ: இல்லை. சட்டங்கள் மறைமுகமாக ஒழுக்கத்தைவளர்க்கக் கூடும். (1) குறைந்த இடைவெளிகளில் மது பானக் கடைகள் இருப்பது, அல்லது பொது இடங்களில் வரம்பின்றி குடிப்பது போன்ற ஒழுக்கத்தின் முட்டுக்கட்டைகளை நீக்குவது, (2) குற்றங்களைத் தடுப்பது, தண்டிப்பது, (3) பொது இடத்தில் குழப்பம் ஏற்படும் அளவுக்கு ஒழுக்கக் கேடுகள் நடப்பதைத் தடுப்பது — உதாரணமாக குடிவெறியும், வெளிப்படையான விபசாரமும்.

கு: சட்டங்கள். சட்டதிட்டங்களின் பிற கட்டுப்பாடுகள் யாவை ?

ஆ: இரண்டாவது கட்டுப்பாடு நாட்டின் அரசியல் சட்டப்படி அதிகாரம் உள்ள குழுவிலிருந்து அவை தோன்றி நிறைவேற்றப் படவேண்டும்.

கு: ஒரு நாட்டில் அத்தகைய அதிகாரக் குழு ஒன்றுக்கு மேற்பட்டிருக்கலாமா?

ஆ: ஆம். உதாரணமாக இந்தியாவில் மத்திய சட்ட சபையும், ராஜ்ய சட்டசபைகளும், நகரசபை போன்ற சில ஸ்தல ஸ்தாபனங்களும், அரசியல் சட்டத்தில் விவரிக்கப்பட்டுள்ள வரம்புகளுக்கு உட்பட்டு சட்டங்களை இயற்றும் உரிமை பெற்றுள்ளன. அவை, நகர

சபைகளின் உப-சட்டங்களும் கூட சட்டத்தின் சக்தியைப் பெறுகின்றன.

கு: சட்டங்கள், சட்டதிட்டங்கள் குறித்து வேறு நிபந்தனை இருக்கிறதா?

ஆ: ஆம். மூன்ருவது ஒரு முக்கியமான வரையறை அது சமுதாயத்தின் நலனைச் சட்டங்கள் வளர்க்க வேண்டும் என்பதாகும்.

கு: அதன் கருத்து என்ன?

ஆ: ஒரு சட்டம், சமுதாயத்தின் ஒருபகுதிக்குமட்டுமின்றி, சமுதாயம் முழுவதற்கும், அமுலாக்கப்பட வேண்டும் என்பதே அதன் பொருள். ஒரு சமூகம் அல்லது வகுப்பு அல்லது ஜாதிக்கு மட்டுமின்றி, மக்கள் அனைவரின் வாழ்க்கையையும் செயலையும் பாதிக்கும் நோக்கத்துடன் சட்டம் இயற்றப்படவேண்டும்.

கு: ஒரு மனிதன் அல்லது ஒரு சமூகத்தின் நலனுக்காக இந்தச் சட்டங்களை ஒரு சட்டசபை நிறைவேற்றக் கூடாதா?

ஆ: கூடாது. சட்டம் என்ற சொல்லின் உண்மைப் பொருளின்படி அவ்வாறு செய்ய இயலாது.

கு: அப்படியானல், ஹிந்து சட்டம், முஸ்லிம் சட்டம் என்று எவ்வாறு இருக்கின்றன?

ஆ: ஹிந்து முஸ்லிம் சட்டங்கள், சட்டசபையால் நிறைவேற்றப்பட்ட சட்டங்களன்று—அவைகள் வழக்கச் சட்டங்கள் அல்லது மத நூல்களிலுள்ள சட்டங்கள். தங்களை அவை கட்டுப்படுத்துவதாக அந்த மதத்தினர் ஏற்றுக் கொள்கின்றனர்.

கு: இந்தியாவிலுள்ள சட்டசபைகள் ஹிந்து சட்டத்திலும், முஸ்லிம் சட்டத்திலும் மாறுதல்களைச் செய்ய இயலாதா?

ஆ: இயலாது. இந்திய மக்கள் அனைவரையும் அவை பாதிக்காததால், அந்த மாறுதல்களைச் செய்ய இயலாது. சட்டத்தில் ஒரு அடிப்படை விதியை அவை பாதிக்கும். அதாவது சமுதாயம் முழுவதின் நலனை நோக்கமாகக் கொண்டிருக்க வேண்டும் என்பது அந்த விதி. மற்றும் இந்தியா மதச்சார்பற்ற நாடு என்று பிரகடனப் படுத்தப்பட்டதால், இந்தியாவின் இருபெரும் மதங்களுடன் இணைந்த ஹிந்து, முஸ்லிம் சட்டங்களை சட்ட சபைகள் தொடமுடியாது.

கு: அப்படியானால் ஹிந்து அல்லது முஸ்லிம் சட்டத்தில் எவ்வாறு மாறுதல்களைச் செய்வது ?

ஆ: நீதி சபைகளில் நீதி விளக்கங்கள் மூலம் அவை செய்யப்படுகின்றன. நன்கு அங்கீகரிக்கப்பட்ட அதிகாரத்தால், நல்லொழுக்கம், பரம்பரை வழக்கம், சட்ட அறிவு, நாட்டில் வளரும் சமூகக் கருத்து ஆகியவற்றை யொட்டி நீதிபதிகள் சட்டங்களை விளக்குகிறார்கள். இரு பக்கங்களின் வழக்கறிஞர்களின் வாதங்களின் மோதலில், காலத்தின் தேவைக்கு ஏற்றபடி சட்டங்களை நீதிபதிகள் விளக்க முடிகிறது. இங்கிலாந்திலும், யு, எஸ். ஏ. யிலும், இந்தியாவிலும் நீதி விளக்கத்தால் சமூக முன்னேற்றம் பயனடைந்துள்ளது.

கு: ஆனால், பிரிட்டிஷ் ஆட்சி காலத்தில் ஹிந்து முஸ்லிம் சட்டங்கள் சட்டசபைகளால் மாற்றப்படவில்லையா ?

ஆ: ஆம். அவை மாற்றப்பட்டன. ஆனால், மாறுதல் வேண்டுமென்று நாடு முழுவதிலும் கிளர்ச்சி ஏற்பட்ட பிறகு, ஹிந்து அல்லது முஸ்லிம் பிரதிநிதிகளுடன் கலந்தாலோசித்த பிறகு மாறுதல் செய்யப்பட்டது.

கு: அத்தகைய ஆலோசனைகள் இப்பொழுதுநடைபெற இயலாதா?

ஆ: இயலும், மாறுதல் வேண்டும் என்று நாடு முழுவதிலும் கோரிக்கை தோன்றினால், எல்லா தரப்பினருடன் கலந்தாலோசித்து, கிட்டத்தட்ட ஒருமித்த உடன்பாட்டைப் பெற்ற பிறகு ஹிந்து அல்லது முஸ்லிம் சட்டத்தில் அந்த மாறுதலைச் செய்யலாம்.

கு: மக்கள் அனைவரையும் பாதிக்காமல் ஒரு குறிப்பிட்ட சமூகத்தை மட்டும் பாதிக்கும் சட்டத்தில் சட்ட சபையின் எல்லா உறுப்பினர்களும் பங்கு பெறலாமா?

ஆ: இல்லை. அத்தகைய சந்தர்ப்பங்களில் விசேஷ நடைமுறையைப் பின்பற்ற வேண்டும்— சட்ட சபையில் அத்தகைய சட்டம் சம்பந்தப்பட்ட சமூக உறுப்பினர்களால் முதலில் கவனிக்கப்பட வேண்டும். மாறுதல்களுக்கு அவர்களுடைய சம்மதத்தைப் பெற விசேஷ மெஜாரிட்டி $\frac{2}{3}$ அல்லது $\frac{3}{4}$ தேவைப்படும். பிறகு சட்டசபை முழுவதிலும் அது சமர்ப்பிக்கப்பட்டு, அரசியல் சட்ட நிபத்தனையைப் பூர்த்தி செய்வதற்காக சபை முழுவதும் அதை நிறைவேற்றும். அரசியல் சட்டப்படி ஒரு சட்டத்தை சட்டசபை முழுவதும் நிறைவேற்றினால்தான் அது அமுலாகும்.

கு: அத்தகைய பிரிவு-சட்டத்தைக் கையாள வேறு நடைமுறை இருக்கிறதா?

ஆ: இருக்கிறது. இங்கிலாந்தின் காமன்ஸ்சபையில் பயன்படுத்தப்படும் தனிப்பட்டவர் மசோதா நடைமுறை இருக்கிறது.

கு: அது என்ன?

ஆ: இங்கிலாந்து நாட்டின் காமன்ஸ் சபையில், மக்கள் அல்லது நாடு முழுவதையும் பாதிக்காமல் சில பிரிவு

களைப் பாதிக்கும் தீர்மானங்கள் வருகின்றன, எடுத்துக்காட்டாக ரெயில்வேக்கு நிலம் வாங்க விரும்பும் ரெயில்வே கம்பெனி அல்லது ஏற்கெனவே அங்கீகரிக்கப்படாத புதிய அலுவலை நடத்த விரும்பும் நகர சபை, அல்லது கிராம சபை காமன்ஸ் சபையிடம் மனு தாக்கல் செய்கிறது. இந்த மனுவை தனிப்பட்ட மசோதாக்களின் மனுக்களை பரிசீலனை செய்பவர்கள் பரிசீலிக்கிருர்கள். பரிசீலினை முடிந்ததும் மசோதாவின் பல வாசிப்புகள் நடைபெறுகின்றன. மசோதா எதிர்க்கப்பட்டால் அது தனிப்பட்ட மசோதாக் குழுவுக்கு அனுப்பப்படுகிறது. குழுவில் அது பாதி நீதிமன்ற வகையில் கவனிக்கப்படுகிறது. இரு தரப்பு வழக்கறிஞர்களின் வாதங்களும் கேட்கப்படுகின்றன. தன்னிடமுள்ள சாட்சியத்தைப் பார்த்து, அந்த மசோதா அவசியமா இல்லையா என்பதை குழு முடிவு செய்யவேண்டும். எந்தக் கட்டுப்பாட்டுடன் மசோதாவைத் தொடரலாம் என்று குழு தீர்ப்புக் கூறும். நீதிசபைபோல, புதிய மசோதாவின் வழக்கை குழு விசாரிக்கும். அந்தத் தனிப்பட்ட மசோதாவை ஆதரிக்கும் வழக்கறிஞரின் சொல்லே இறுதியானது, ஏனென்ருல் மாறுதலை உண்டாக்குபவர்தான் மாறுதலுக்கு ஆதாரத்தைக் காட்டும் பொறுப்புடையவர். மசோதாவை குழு அங்கீகரித்தால் அல்லது மாறுதல்களுடன் அல்லது திருத்தங்களுடன் அங்கீகரித்தால், குழுத் தலைவர் அதைமுழுச் சபையில் அளிப்பார். அப்பொழுது அது சாதாரண பொது மசோதாப் போல கருதப்படும். அதை முழுச் சபை நிராகரிக்கவும் கூடும். ஆனுல், அந்த மசோதா நீதி விசாரணையுடன் குழுவால் ஆராயப்பட்டதால், சாதார்ணமாக அது நிறைவேற்றப்படும்.

கு: அந்தத் தனி நடைமுறையின் பயன் என்ன?

ஆ: பயன் யாதெனில், நீதிவிசாரணையில், நீதி சபையிலோ அல்லது தனிப்பட்ட மசோதா நடைமுறையிலோ, சமுதாயத்தின் ஒரு பிரிவினரைப் பாதிக்கும் சட்டசபைத் திட்டங்கள், நீதி முறையில் அல்லது பாதி–நீதிமுறையில் ஆராயப்படுகின்றன. அப்பொழுது மாறுதலின் எல்லாப் பகுதிகளும் விளைவுகளும் கவனிக்கப்படுகின்றன. அதில் நேரடியாக தொடர்புள்ள மக்களின் ஒரு பிரிவினரின் அங்கீகாரம் கிடைக்கும் வரை, அவற்றில் அக்கறையில்லாத பெரும்பான்மையினர் கொண்ட சட்டசபை அதை கவனித்து நிறைவேற்றுவதில்லை. அதனால் சட்டமியற்றும் சிறந்த கொள்கை காக்கப்படுகிறது. அதாவது சட்டங்களும் சட்டதிட்டங்களும் மக்களின் நலனுக்காகவும், ஒரு பிரிவினருக்கில்லாமல் நாடு முழுவதற்காகவும் இயற்றப்படவேண்டும்.

# 12. அரசியல் கட்சிகள்

கு: கட்சி என்ருல் என்ன?

ஆ: "கட்சி என்பது, தேசிய நலனை வளர்ப்பதற்காக ஒப்புக்கொள்ளப்பட்ட ஒரு குறிப்பிட்ட கொள்கை யின் அடிப்படையில் ஒன்றுபட்டுப் பணிபுரியும் மனி தர்களின் அமைப்பு" என்பது பர்க்கின் புகழ்பெற்ற விளக்கம்.

கு: மனிதர்கள் ஏன் கட்சிகளை அமைக்கவேண்டும்?

ஆ: மீண்டும், பர்க் கூறியதுபோல, "கெட்டவர்கள் கூடும்போது, நல்லவர்கள் ஒன்றுபட வேண்டும், இல்லாவிடில் அவர்கள் ஒவ்வொருவராக வீழ்வார் கள், அது ஒரு கேவலமான போராட்டத்தில் இரக்க மற்ற தியாகம்"

கு: கட்சியின் நோக்கம் என்ன?

ஆ: சட்டத்திலும், நிர்வாகத்திலும் சில அரசியல் கொள் கைகளை அமுலாக்குவதற்காகக் கட்சி அமைக்கப்படு கிறது.

கு: அது எவ்வாறு இயலும்?

ஆ: நாட்டின் அரசியல் வாழ்க்கையில் பங்கெடுத்துக் கொள்ள விரும்பும் மனிதர்கள் புதிய கட்சியை அமைக்கிருர்கள் அல்லது இங்கிலாந்திலுள்ள கன் சர்வேடிவ் கட்சி, தொழிற்கட்சி, ஐரோப்பாவிலுள்ள சோஷலிஸ்டு கட்சி, பொதுஉடமைக் கட்சி, இந்தி யாவிலுள்ள காங்கிரஸ் கட்சி, பிரஜா-சோஷலிஸ்டு

கட்சி போன்ற ஏற்கனவே உள்ள கட்சிகளில் சேர்கிறார்கள்: தங்களுடைய கொள்கைகளையும் திட்டங்களையும் அவர்கள் பிரகடனப்படுத்துகிறார்கள், கட்சி உறுப்பினர்களை ஆயிரக் கணக்கில், லட்சக்கணக்கில் அதிகரித்து கட்சியை வளர்க்கிறார்கள், பத்திரிகைகளிலும் பொது மேடைகளிலும் தங்களுடைய கட்சிக்காக பிரசாரம் செய்கிறார்கள். தேர்தல் காலத்தில் தேர்தலில் போட்டியிட்டு முடிந்த அளவுக்கு சட்டசபை ஸ்தானங்களை வென்று, சட்டசபையில் தங்களுடைய திட்டங்களுக்கும் கொள்கைகளுக்கும் சட்டசபை, அரசாங்கம் ஆகியவற்றின் ஆதரவைப்பெற முயற்சிக்கிறார்கள்.

கு: ஆனால், பொதுத் தேர்தல் சமயத்தில் தங்களைக் கட்சிகள் என்று கூறிக்கொள்ளும் அமைப்புகள் அனைத்தும், கட்சிகள் என்று கூறப்படுவதற்குத் தகுதியுள்ளனவா?

ஆ: இல்லை. ஒரு உண்மையான கட்சிக்குச் சில குறிப்புகள் அல்லது அடையாளங்கள் உண்டு.

கு: அவை எவை?

ஆ: முதலாவதாக ஒரு உண்மையான கட்சிக்கு, நாடு முழுவதிலும் ஸ்தாபனம் பரவி இருக்கவேண்டும், இரண்டாவதாக அதிக எண்ணிக்கையுள்ள சமுதாயங்கள், மதங்கள் ஆகியவற்றைச் சேர்ந்தவர்களைக் கொண்டதாக இருக்க வேண்டும். அது, ஒரு குறிப்பிட்ட பிரிவு அல்லது சமூகத்தின் நலனை வளர்க்காமல், பொது நன்மையை வளர்க்க முயற்சிக்க வேண்டும்.

கு: இந்தச் சோதனைகளின்படி பொது உடமைக் கட்சியை ஒரு உண்மையான கட்சி என்று அழைக்க முடியுமா?

ஆ: பொது உடமைக்காரர்கள் ஒரு கட்சியின் எல்லா அடையாளங்களையும், ஒன்றைத்தவிர, பெற்றிருக்கிருர்கள்.

கு: அது என்ன?

ஆ: அரசாங்க முறையையும், சமூகத்தையும் அவை உள்ள தன்மையில் அவற்றை ஒரு அரசியல் கட்சி ஏற்கவேண்டும். ஏனென்ருல் அதன் வேலே, தேச நலனே வளர்ப்பதே, அரசியல் சட்டத்தையோ அல்லது அரசாங்க முறையையோ மாற்றுவதன்று.

கு: கடைசியாகச் சொன்னதைச் செய்ய பொதுஉடமைக் கட்சி விரும்பவில்லையா?

ஆ: ஆமாம். முடிந்தால் செய்யும் அரசியல் சட்ட முறைக்கு அப்பாற்பட்டதைச் செய்ய அதற்குச் சுதந்திரம் உண்டு என்றும் அவசியமான வசதியான சமயத்தில் அவசியமான வசதியான இடத்தில் பலாத்காரத்தைப் பிரயோகிக்கவும் முற்படும் என்றும் அறிவித்து அது ஆரம்பித்தது. அது அரசியல் கட்சியைவிட புரட்சிகரமான ஸ்தாபனமாகும்.

கு: இந்தியாவில் புரட்சி மூலம் மாறுதல்களைச் செய்வதை சமீபத்தில் அது நிராகரிக்கவில்லையா?

ஆ: ஆமாம். ஆனல், அது தற்காலிகத் தந்திரம், இயன்ற இடங்களில் புரட்சி செய்ய எல்லா இடங்களிலும் பொது உடமைக் கட்சி சபதமேற்றுள்ளது.

கு: ஒரு கட்சிக்கும் அதன் உறுப்பினர்களுக்கும் உள்ள உறவு என்ன? கட்சியின் உண்மையான கொள்கைகளின்படி கட்சி உறுப்பினர்களுக்குச் சுதந்திரம் அனுமதிக்கப்படுகிறதா?

ஆ: ஆம். எந்த உண்மையான கட்சியிலும் ஓரளவுக்குப் பேச்சுரிமையும் செயலுரிமையும் உறுப்பினர்களுக்கு அனுமதிக்கப்பட்டுள்ளன. கட்சி கட்டுப்பாட்டுக்கு

வரம்புகள் உண்டு. அதை பர்க் இவ்வாறு குறிப்பிடு கிருர்: "பொது விவகாரங்களில் எழும் நடவடிக்கைகளின் பெரும்பகுதி, அரசாங்கத்தின் ஒரு தலையாய பொதுக் கொள்கைகளுடன் சம்பந்தப்பட்டோ அல்லது உட்பட்டோ இருப்பதால், ஒருவன் தன் அரசியல் குழுவைத் தெரிந்தெடுப்பதில், அவர்களுடன் பத்துக்கு ஒன்பது தடவைகள் ஒத்துப் போகாவிடில், அவன் விசித்திரமான துரதிர்ஷ்டசாலியாக இருக்க வேண்டும்." அந்தப் பத்துக்கு ஒரு தடவையில்தான் ஒரு கட்சி உறுப்பினருக்கு சுதந்திரமளிக்க வேண்டும். சுதந்திரமாகச் சிந்திக்கும் மனிதர்கள், "சில விஷயங்களில் வேறு விதமாக நினைப்பார்கள்" என்று பர்க் கூறுகிருர். உன் கருத்துக்கு நேர் எதிரிடையாக கட்சியின் கருத்து இருந்த போதிலும் அந்தக் கருத்தை நீ கண்மூடித்தனமாகப் பின்பற்றுவது அவசியம் என்று அரசியல்வாதிகள் கருதினல் கட்சிமுறை மீது களங்கம்தான் ஏற்படும்—அந்த அடிமைத்தனத்திற்குப் பணிய எந்த நல்ல மனிதனும் எண்ணமாட்டான், என்று பர்க் கூறியுள்ளார். அத்தகைய கட்சி நடத்தைகள் விவேகமற்றதும், கொடுமையானதுமாகும் என்று அவர் தற்கால வளர்ச்சியை எதிர்பார்த்துச் சொன்ஞர்.

கு: ஆனல், ஒரு நாட்டின் அரசாங்கத்தின் முக்கிய பாகமாகிய கட்சிக்கு ஒழுங்கு அவசியமல்லவா?

ஆ: ஒழுங்கு அவசியமே; ஆனல், ராணுவ ஒழுங்கு அல்ல ஒரு நாட்டின் அரசாங்கத்தின் முக்கிய பாகமல்ல, கட்சி—அது ஒரு பயனுள்ள அரசியல் ஸ்தாபனம் —சட்ட சபையுடன் ஒப்பிடும்போது அது ஒரு தனிப்பட்ட ஸ்தாபனம்—அரசியல் சட்டத்தில் அது இல்லை:

நமது அரசியல் சட்டத்தில் அது எந்த இடத்திலும் குறிப்பிடப்படவில்லை.

கு: அப்படியானல் சட்டசபையை அழைக்கும்போதும், அரசாங்க அமைப்பைக் கவனிக்கும்போதும் கட்சி பற்றி மக்கள் பேசுவது ஏன்?

ஆ: ஏனென்றல், கட்சி முறை, சட்டசபைக்கு வெளியே இரண்டு அல்லது மூன்று கட்சிகளை அவர்களுடைய கொள்கைகள் திட்டங்கள் ஆகியவற்றுடன் மக்கள் முன்னிலையில் வைத்து, அவற்றின் பிரதிநிதிகளால் அரசியல் விவகாரங்களை விவாதிக்கச் செய்து, அரசியல் வாழ்க்கையை நிறுவ உதவுவதுடன், நாட்டின் அரசாங்கத்தை நடத்துவதற்கும் உதவுகிறது.

கு: அது எவ்வாறு?

ஆ: பொறுப்புள்ள அரசாங்க முறையின் கீழ் ஒரு அரசாங்கம் நிலையாக இருப்பதற்கும், திறமையாகச் செயலாற்றுவதற்கும் அது நல்லது. அதாவது, சட்டசபைக்குப் பொறுப்புள்ள மந்திரிசபையின் அரசாங்கம், சட்டசபையில் எப்பொழுதும் பெரும்பான்மை வாக்குகளைப் பெற கச்சிதமான மனிதர்களின் குழுவைப் பெற்றிருப்பது, சௌகரியமான காலத்திற்கு ஆட்சி பீடத்தில் அமர்ந்து ஆட்சியை நடத்த உதவும்.

கு: ஆனல், பெரும்பான்மை பலம்கொண்ட கச்சிதமான ஒரு கட்சி இல்லாதபோது என்ன செய்வது?

ஆ: ஒப்புக்கொள்ளப்பட்ட பொதுக் கொள்கைகளின் அடிப்படையில் கட்சிகள் அல்லது கோஷ்டிகள் கூட்டாக அரசாங்கத்தை நடத்த இணங்கலாம்.

கு: அத்தகைய கூட்டை, கூட்டுக் கட்சி என்று அழைக்கலாமா?

ஆ: இல்லை. கூட்டுக் கட்சி என்பது சொல்லில் முரண் பட்டது; ஏனென்றால், கூட்டு என்பது ஒன்று சேர் தல்—கட்சிகள் அல்லது கோஷ்டிகளின் கூட்டு ஏற் படலாம்—கூட்டுக் கட்சி இருக்க முடியாது.

கு: கட்சி இல்லாமல் சட்டசபை பொறுப்புள்ள அரசாங் கத்தை நடத்த இயலுமா?

ஆ: இயலும். சுவிட்சர்லாந்து நாட்டில் கட்சிகள் இருந்து, சட்டசபைக்கு வெளியே அரசியல் வாழ்க்கையை அவை நிறுவிய போதிலும், அரசாங்கம் அமைப்ப தில் அவை பயன்படுத்தப்படுவதில்லை.

கு: சுதந்திர அரசாங்கத்திற்குக் கட்சி அவசியமில்லையா?

ஆ: இல்லை. அது உபயோககரமானது; ஆனால், அத்யா வசியமன்று.

கு: அப்படியானால் சட்டசபைக்கும், நாட்டின் அரசாங் கத்திற்கும் அது எவ்வாறு சம்பந்தப்பட்டிருக்கிறது?

ஆ: அரசாங்கம் அமைப்பதற்கு அது, சட்டசபையின் நட வடிக்கைகளை நிறுவும் சாதனம். ஒரு லட்சியத்திற்கு அது ஒரு சாதனம்—அதுவும் அத்யாவசியமான சாதனமன்று.

கு: சட்டசபைக்கும் அரசாங்கத்திற்கும் கட்சியின் உண் மையான உறவு என்ன?

ஆ: சுதந்திரத்திற்கும் சகிப்புத் தன்மைக்கும் உட்பட்டு சட்டசபைக்கும் அரசாங்கத்திற்கும் அது சேவை செய்ய வேண்டும்—ஒரு சுதந்திர நாட்டில் சட்டசபை மீதும் அரசாங்கத்தின் மீதும் அது ஆதிக்கம் செலுத்த முடியாது—சுதந்திரமற்ற எதேச்சாதிகார நாடுகளில்தான் கட்சி ஆதிக்கம் செலுத்துகிறது.

# 13. நிர்வாகமும் மந்திரியும்

கு: மந்திரி என்ருல் என்ன?

ஆ: ஒரு நாட்டின் பொது விவகாரங்களில் சிலவற்றை, அதாவது அரசாங்கத்தை நிர்வகிக்கும் பொறுப்பு உடைய ஒரு ஆசாமி மந்திரி எனப்படுவார்.

கு: மந்திரிகளும், மந்திரிகள் சபையும் எக்காலத்திலும் எங்கும் இருந்திருக்கிருர்களா?

ஆ: ஆம். எல்லா நாகரீக நாடுகளிலும் மந்திரிகளும், மந்திரிகளின் சபைகளும் இருந்து பணியாற்றி வந்துள்ளன.

கு: அரசாங்கத்தில் மக்களே இறுதி அதிகாரங்களைக் கொண்டவர்கள் என்று கூறப்படும். குடியாட்சியிலும் அவர்கள் இருந்து பணியாற்றியுள்ளனரா?

ஆ: ஆம். குடியாட்சி நாடுகளிலும் மந்திரிகள் இருந்து பணியாற்றுகின்றனர்.

கு: குடியாட்சிகளில் மக்களிடமே இறுதி அதிகாரம் இருக்குமானுல், மக்களே ஏன் நிர்வகித்து ஆளக் கூடாது?

ஆ: அவர்களால் இயலாது; ஏனென்ருல், ஒரு தற்கால நாட்டில் மக்கள் ஏராளமாக இருப்பதால் அவர்களால்

நேரடியாகவும் உடனடியாகவும் நாட்டை ஆள முடியாது. அதனுல்தான் சட்டங்களை இயற்றவும், நாட்டின் ஆட்சிக்குத் தேவையான இதரப் பொது விதிகளைச் செய்யவும் மக்கள் சார்பில் செயலாற்ற பிரதிநிதித்வ சபைகள் என்ற சாதனம் உண்டாக்கப்பட்டு உள்ளது. அதனுல்தான் அரசாங்கப் பணியும், நாட்டின் பாதுகாப்பை நிறுவுவது அல்லது அமைதியையும் ஒழுங்கையும் நிலைநிறுத்துவது அல்லது கல்வி அல்லது சுகாதாரம் அல்லது நாட்டின் பொருளாதார நலன் போன்ற நாட்டின் பொது விவகாரங்களின் நிர்வாகமும், குடியாட்சி நாட்டின் மந்திரிகள் என்ற ஒரு சிலர் அடங்கிய சபையிடம் ஒப்படைக்கப் பட்டுள்ளன.

கு: மந்திரிகள் எனப்படும் ஒருசிலர் அடங்கிய சபை, நாட்டின் அரசாங்கத்தை நடத்திஞல் அதைக் குடியாட்சி அல்லது மக்கள் அரசாங்கம் என்று எவ்வாறு கூற இயலும்?

ஆ: மந்திரிகள் அல்லது மந்திரிசபையின் தலைவர் (முதன் மந்திரி) மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு, மக்களின் பிரதிநிதித்வ சபைக்குப் பொறுப்புள்ளவர்களாக இருப்பதன் மூலம் மக்களுக்கு நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ அவர்கள் கட்டுப்பட்டு இருக்கிருர்கள் என்ற உண்மையிலிருந்து, ஒரு குடியரசின் குணம் உருவாக்கப்பட்டு பாதுகாக்கப் படுவதை அறியலாம்.

கு: பிரதிநிதித்வ சபையில், மக்களிடம் மந்திரி சபையின் பொறுப்பு எவ்வாறு உத்திரவாத மளிக்கப் படுகிறது?

ஆ: பிரிட்டிஷ் முறையை யொட்டிய சில வகை ஆட்சியில மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டசபை உறுப் பினர்களிடமிருந்து மந்திரிகள் தெரிந்தெடுக்கப்படு கிருர்கள். சட்டசபையால் நிச்சயிக்கப்பட்ட அதிகாரி யால் அவர்கள் நியமிக்கப்பட்டதும், அவர்களுடைய பதவிக் காலம் நீடிப்பது சட்டசபையின் ஆதரவைச் சார்ந்துள்ளது. U. S. A. போன்ற முறைகளில் மந்திரி சபையின் தலைவர் மட்டும் நான்கு ஆண்டு களுக்கு ஒரு தடவை மக்களால் தேர்ந்தெடுக்கப்படு கிருர். அவருக்குக் கட்டுப்பட்ட மந்திரிகளை அவர் தெரிந்தெடுக்கிருர்.

கு: எது அதிக குடியாட்சித் தன்மை உடைய முறை?

ஆ: ஒவ்வொன்றும் சமமான குடியாட்சித் தன்மை உடை யது. இரண்டிலும் மந்திரிசபை மக்களால் தேர்ந் தெடுக்கப்பட்டு, மக்களுக்குப் பொறுப்பாக இருக் கிறது—அமெரிக்க முறை சிறிது அதிகக் குடியாட்சித் தன்மை உடையதாகக் கருதப்படலாம். ஏனென்ருல், மந்திரி சபையின் தலைவர் மக்களால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, மக்களுக்குப் பொறுப்பாக இருக்கிருர். ஆனுல், ஒரு தடவை தேர்ந்தெடுக்கப் பட்டதும் நான்கு ஆண்டுகளுக்கு அவரைப் பதவியி லிருந்து அகற்ற முடியாது. ஆனுல், இங்கிலாந் தில் சட்டசபையிலோ அல்லது வெளியிலோ மந்திரி சபைக்கு எதிராக கருத்து உருவானுல் அது பதவியி லிருந்து வெளியேற்றப்படும். ஒவ்வொன்றும் உப யோகங்களை உடைத்தாயிருக்கிறது. இந்தியாவி லுள்ள மந்திரி சபைகளின் அமைப்பைப் போன்ற பிரிட்டிஷ் முறையில், மந்திரிகள் சட்டசபையின்

அங்கமாக விளங்குவதால் சட்டசபையுடன் மந்திரி சபைக்கு நேரடியான தொடர்பு ஏற்படுகிறது. மந்திரி கள் சட்ட சபையில் அமர்ந்து பேசுகிருர்கள். நிர் வாகத்தைப் பற்றிய கேள்விகளுக்குப் பதில் கூறு கிருர்கள். தங்களுடைய கொள்கைகளையும் திட்டங் களையும் விளக்கிக் கூறிச் சட்டசபையின் ஒப்புதலைப் பெறுகிருர்கள். இந்த முறை, அரசாங்கம் சுமுகமா கச்செயலாற்ற உதவுகிறது.

கு: அது அதிகப் பயனுள்ள முறையா?

ஆ: அவ்வாறு கருதுவது அவசியமன்று. அமெரிக்க முறை, மந்திரி சபையின் தலைவரையும், அவரால் நியமிக்கப்பட்ட மந்திரிகளையும், சட்டசபையின் மனப்போக்கு மாறுதல்களுக்குப் பலியாகாமல் பாது காக்கிறது; நிர்வாகத்தின் சுயநிர்ணய உரிமை, சுதந்திரம், கண்யம் ஆகியவை பாதுகாக்கப்படுகின் றன; சட்டசபையின் ஓயாத தொல்லைகளும் தலையீடு களும் அதற்கு ஏற்படுவதில்லை; ஒரு குறிப்பிட்ட பதவிக் காலம் இருப்பதால் அதற் கேற்றபடி தன் செயல் திட்டத்தை அது வகுக்க இயலும்; ஆங்கில முறையைப் போல சட்டசபையிடம் அது பணிந்து கிடக்க வேண்டியதில்லை.

கு: ஆனல் பிரதிநிதித்வ சபையாகிய சட்டசபைக்கு நிர்வாகம் பொறுப்பாக இருப்பது சுதந்திர ஆட்சி யின் தலையாய கொள்கையல்லவா?

ஆ: ஆம். நிர்வாக மந்திரி சபை, சட்ட சபைக்குப் பொறுப்புள்ளது. ஆனல், கீழ்ப்பட்டதன்று. நிர்வா கம் தன் இயல்பான உரிமையுடன் இருந்து, சட்டங்

களின்படி பணியாற்றுகிறது. சட்டசபையைப் போல அது, ஆட்சியின் இயற்கையான அவசியமான உறுப்பு.

கு: அமெரிக்க முறையில் சட்ட சபைக்கு நிர்வாகத்தின் பொறுப்பு எவ்வாறு ஏற்படுகிறது?

ஆ: நாட்டை நன்ருக ஆள்வதற்கு அவசியம் என்று அது கருதுகிற சட்டங்களை நிறைவேற்றுவதற்கும், நிர்வாகத்தை நடத்துவதற்குத் தேவையான பணத்தை அனுமதிப்பதற்கும் சட்ட சபையை நிர்வாகம் அல்லது மந்திரிசபை நம்பியிருக்க வேண்டியதாக இருக்கிறது.

கு: நிர்வாகம் அல்லது மந்திரிசபை வாழ்வதற்கு சட்ட சபையை நம்பியிருக்கத் தேவையில்லாவிடில், தங்களுடைய தொகுதிகளுக்கு தங்களுடைய கடமையைச் செய்வதற்காகச் சட்ட சபை உறுப்பினர்கள் எவ்வாறு நிர்வாகம் அல்லது மந்திரி சபையின் உறுப்பினர்களின் செல்வாக்கைப் பெற இயலும்?

ஆ: தனிப்பட்ட தொகுதியினர் அல்லது தொகுதிகளுக்கு சலுகைகள் அளிப்பது மந்திரிகளின் வேலையோ அல்லது கடமையோ அல்ல. மந்திரிகள் பதவியிலிருப்பது, நாட்டின் மக்களுடைய நலனை வளர்ப்பதற்காகவே—குறிப்பிட்ட தொகுதிகளுக்கு சலுகைகள் அளிப்பதற்கன்று.

கு: தன் பகுதிக்கு அல்லது தொகுதிக்கு ஏதாவது நன்மை செய்வதற்காக ஒரு மந்திரியை சட்ட சபை உறுப்பினர் ஒருவர் அணுகக் கூடாதா?

ஆ: ஆம். ஒரு பகுதி அல்லது தொகுதிக்குக் காட்டும் சலுகை ஒரு தேசிய நோக்கத்திற்கு உதவுமானல், அவ்வாறு செய்யலாம். உதாரணமாக, கோரப்படும் சாலை, பொதுவான சாலைகள் அமைப்பின் ஒரு பகுதி யாக இருந்தால் சலுகை காட்டலாம்.

கு: எவ்வித விஷயங்களை மந்திரியிடம் சட்டசபை உறுப்பினர் கோரக் கூடாது?

ஆ: தன் தொகுதிக்குப் பிரத்தியேகமான ஏற்பாடுகளைக் கேட்கக் கூடாது, — உதாரணமாக ஒரு புதிய கிரா மச்சாலையை அமைத்தல் அல்லது ஒரு கிணறு வெட் டுதல், போன்றவற்றைக் கேட்கக் கூடாது. — அது மந்திரி சபையின் பொதுத் திட்டத்தின் ஒரு பகுதி யாக இருந்தால் கேட்கலாம்.

கு: நிர்வாகத்தின் ஒரு அதிகாரியைக் கண்டிப்பது அல்லது திருத்துவது, அல்லது அவருக்கு உத்தரவிடுவது பற்றி மந்திரியை அணுகக் கூடாதா?

ஆ: கூடாது. நாட்டின் அன்ருட நிர்வாகத்தில் சட்ட சபை உறுப்பினர் தலையிடக்கூடாது—சட்டசபையின் நிரந்தர விதிகள், நடைமுறைகள் அனுமதிக்கும் அளவுக்கு நிர்வாகக் குறைபாடுகள் அல்லது அதிகா ரிகளின் தவறுகள் ஆகியவை குறித்துச் சட்ட சபை யில் கேள்வி கேட்கலாம்.

கு: குறிப்பிட்ட அதிகாரிகளின் குறைபாடுகளையும் தவறு களையும் சட்டசபையில் அல்லது வெளியில் அவர் ஏன் விளம்பரப்படுத்தக் கூடாது?

ஆ: ஏனென்ருல் சட்டசபைக்கு அல்லது மக்களுக்குப் பொறுப்பாக இருப்பது மந்திரியே. நிரந்தர அதி

காரியல்லர்—ஒரு துறையில் ஏதாவது தவறு அல்லது குறைபாடு கூறப்பட்டால், அந்தத் துறையை ஏற்றுள்ள மந்திரி அதற்குப் பொறுப்பாளியாவார், பொறுப்பாளியாக்கப்பட வேண்டும்.

கு: தன் நிர்வாகக் கடமைகளைச் செய்யும்போது அதிகாரி இழைக்கும் குற்றங்களுக்கு அல்லது நஷ்டம் உண்டாக்கும் தவறுகளுக்கும் இந்த விதிவிலக்கு உண்டா?

ஆ: இல்லை. குற்றங்களுக்கும் நஷ்டம் உண்டாக்கும் தவறுகளுக்கும் அவர் நீதி சபைகளில் குற்றம் சாட்டப்படக் கூடும், அல்லது வழக்காடப்படக் கூடும்.

கு: தங்களுடைய கடமைகளைச் செய்யும் பொறுப்பு மந்திரிகளுக்கு எவ்வாறு உணர்த்தப்படுகிறது?

ஆ: சட்டசபையில் நிறைவேற்றப் படும் நம்பிக்கையில்லாத் தீர்மானங்களால் அல்லது சட்டசபையின் நம்பிக்கையை ஒரு மந்திரி இழந்தார் என்று முதன் மந்திரி கருதும்போது கவர்னரால் அவர் நீக்கப் படுகிறார்.

கு: ஒரு கொள்கைப் பிரச்னையில் ஒரு மந்திரி தோற்றதும் என்ன ஏற்படுகிறது?

ஆ: அப்பொழுது மந்திரிசபை முழுவதும் ராஜினமாச் செய்கிறது; கூட்டுப் பொறுப்பு என்ற கொள்கை அவர்கள் ஒன்ருக வாழவோ அல்லது வீழவோ செய்கிறது.

கு: மந்திரியின் திறமையின்மைக்குப் பதவி நீக்கம் ஒன்றுதான் தண்டனையா?

ஆ: ஆம். அது அவருடைய அரசியல் வாழ்வுக்கே முடிவுகட்டிவிடக் கூடும்,

கு: ஒரு திறமையான மந்திரியை ஆக்குவது எது?

ஆ: நூல்கள், பத்திரிகைகள், அரசாங்க வெளியீடுகள், சிறந்த மனிதர்களுடன் பேசுதல், ஆகியவை மூலம் பெறும் அறிவும், பொதுக் கூட்டங்களில் பேசும், குறிப்பாக விவாதம் செய்யும் திறமையும், சாமர்த்தியமும், பணிவும், குடும்பம் அல்லது ஜாதி அபிமானத்தைவிட மக்கள் நலனையும் நாட்டின் நலனையும் பெரிதாகக் கருதும் பொதுநல உணர்ச்சியும், உயர்வான (தனியேயும் பொதுவிலும்) நடத்தையும் ஆகும்.

# 14. நீதி சபை

கு: ஒரு நாட்டின் எல்லா ஸ்தாபனங்களையும் நாம் கவனித்தாயிற்ரு?

ஆ: இல்லை. நீதி சபை இருக்கிறது.

கு: நீதி சபை என்ருல் என்ன?

ஆ: நாட்டின் சட்டங்கள் அமுலாக்கப்படுவதை கண் காணித்தும், மக்களின் வழக்குகளைத் தீர்த்தும், தங்களுடைய உரிமைகள் குறித்து மக்களுக்கும் அரசாங்கத்துக்கும் எழும் தகராறுகளைத் தீர்த்தும் பணியாற்றும் ஆட்சியின் ஸ்தாபனம் நீதி சபை.

கு: அதை நீதி சபை எவ்வாறு செய்கிறது? மக்கள் சட்டங்களை மீறியவுடன் அல்லது தங்களுடைய உரிமைகள் குறித்துத் தகராறு செய்தவுடன் அவர்கள் மீது அது பாய்கிறதா?

ஆ: இல்லை. சட்டம் மீறல் அல்லது உரிமைகள் மறுத்தல் குறித்து, குற்றச்சாட்டுகளுடன் அதன் முன்னிலையில் மக்கள் வரும் வரை அது காத்திருக்கிறது.

கு: சட்டங்கள் மீறப்படுவதால் அல்லது உரிமைகள் மறுக்கப்படுவதால் நேரடியாக பாதிக்கப்பட்டவர்கள் மட்டுமே அத்தகைய வழக்குகளை நீதி சபையிடம் கொண்டு வருகிறார்களா?

ஆ: சில சட்டங்களைப் பொறுத்து, போலீஸ் என்று வழங்கும் நிர்வாகத்தின் ஒரு துறை ஒரு வகை வழக்குகளை நீதி சபையின் கவனத்திற்குக் கொண்டு வருகிறது.

கு: இந்த வகை வழக்குகள் எவை?

ஆ: நாட்டின் பாதுகாப்பு, அமைதி, ஒழுங்கு ஆகியவற்றிற்கு உத்தரவாதமளிக்கும் சட்டங்களை உடைக்கும் அல்லது மீறும் குற்றங்கள்தாம் அந்த வழக்குகள்.

கு: போலீஸ் மூலம் நடவடிக்கை எடுக்கும் அளவுக்கு இந்த வகைக் குற்றங்கள்மீது அரசாங்கம் விசேஷ அக்கறை காட்டுவது ஏன்?

ஆ: ஏனென்றால் கொலை, கலவரம், கொள்ளை, திருட்டு, தீவைப்பு, தேசத்துரோகம் போன்ற செயல்கள் நாட்டின் வாழ்வையே கெடுக்கக்கூடியவை--அத்தகைய செயல்களை அனுமதித்தால் மக்கள் அமைதியுடன் வாழ்வது இயலாது போய்விடும் கலவரமும் தேசத்துரோகமும் நாட்டு வாழ்வின் வேர்களையே அழித்து விடும்.

கு: சட்டங்களை உடைப்பது அல்லது மக்களின் உரிமைகளை எதிர்ப்பது ஆகிய செயல்களின் வகைகள் யாவை?

ஆ: அவைகள் சிவில் வழக்குகள் என்று அழைக்கப்படுகின்றன. குற்றங்கள் சம்பந்தப்பட்ட கிரிமினல்

(குற்ற) வழக்குகளிலிருந்து அவை மாறுபட்டவை.

கு: போலீஸ் மூலம் இந்த வழக்குகளை ஏன் நீதி சபையிடம் அரசாங்கம் கொண்டு செல்வதில்லை?

ஆ: ஏனென்றால் அவை வாழ்வையும் பாதுகாப்பையும், பொது அமைதியையும் பாதிப்பதில்லை—ஏனென்றால், அவை சொத்துரிமை. வாரிசுரிமையில் குடும்பங்களில் ஒருவருக்கொருவர் உறவையும், - கணவன் மனைவி, பெற்றோர்கள்-குழந்தைகள், வியாபாரிகள்–அவர்களுடைய வாடிக்கைக்காரர்கள், நிலச்சுவான்தார் - குத்தகைக்காரர், முதலாளி – தொழிலாளி போன்ற மக்களின் சொந்த உரிமைகளோடு சம்பந்தப்பட்டவை.

கு: அத்தகைய சிவில் உரிமைகளும், சிவில் சட்டங்களும் மீறப்படும் போது என்ன ஏற்படுகிறது?

ஆ சிவில் சட்டம் அல்லது உரிமை மீறப்பட்டதால் பாதிக்கப்பட்ட குடி நீதி மன்றம் சென்று தீர்ப்புக் கேட்கிறான்.

கு: அதை நீதி மன்றம் எவ்வாறு செய்கிறது?

ஆ: நீதி மன்ற உறுப்பினர்களாகிய நீதிபதிகள், நீதி மன்றங்களில் (கோர்ட்) பகிரங்கமாக அமர்ந்து இரு சாராரின் வாதங்களைக் கேட்கிறார்கள். குற்ற வழக்குகளில் குற்றம் சாட்டுபவர், குற்றம் சாட்டப்படுபவர் ஆகியோரின் வாதங்களையும், சிவில் வழக்குகளில் வாதி, பிரதிவாதி ஆகியோரின் வாதங்களையும் நேரடியாகவோ அல்லது அவர்களுடைய வழக்கறிஞர்கள் மூலமாகவோ கேட்டு சட்டப்படி முடிவு செய்து தீர்ப்புக் கூறுவார்கள்.

கு: நீதி சபையின் இந்த முடிவுகள் இறுதியானவையா அமுலாகக் கூடியவையா?

ஆ: இறுதி அப்பீல் நீதிமன்றத்தில் முடிவு செய்யப்பட்டால், அவை இறுதியானதாகும். ஏனென்ருல் பல தரப்பட்ட நீதிமன்றங்கள் உள்ளன—நம் நாட்டின் முன்சீப் நீதிமன்றமும், கீழ் நீதிமன்றமும், ஜில்லா நீதிமன்றமும், உயர்நீதிமன்றமும் (ஹைகோர்ட்), தலைமை நீதிமன்றமும் (சுப்ரீம் கோர்ட்) உள்ளன. சில வழக்குகளில் உயர்நீதிமன்றமும், சில வழக்குகளில் தலைமை நீதிமன்றமும் இறுதியான நீதிமன்றங்களாக விளங்குகின்றன.

கு: நீதிமன்றங்களின் தீர்ப்புகள் எவ்வாறு அமுல் செய்யப்படுகின்றன?

ஆ: சில தாக்கீதுகளால் அவை அமுலாக்கப்படுகின்றன.

கு: தாக்கீது என்ருல் என்ன?

ஆ: ஒரு உத்தரவு அல்லது கட்டளைக்கு ஒருவனைக் கீழ்ப்படியச் செய்வது தாக்கீது.

கு: நீதிமன்றங்கள் பயன்படுத்தும் தாக்கீது எது?

ஆ: தண்டனை.

கு: சட்டத்தின் அல்லது நீதிமன்றத்தின் தாக்கீதாகிய தண்டனையில் என்ன அடங்கியிருக்கிறது?

ஆ: பொதுவாக அது பண அபராதம் அல்லது சிறை வாசமாக இருக்கும்.

கு: நாட்டிலுள்ளவர்கள் அனைவரும் நீதிமன்றங்களின் அதிகார வரம்பிற்கு உட்பட்டவர்களா?

ஆ: ஆம். எல்லாரும்—குடிகளும், அந்நியர்களும் (எல்லா கிரிமினல் சட்டங்களிலும் அவர்களைப்பாதிக்கும் சில சிவில் சட்டங்களிலும்)

கு: அரசாங்க அதிகாரிகளும் சட்ட மன்றங்களின் வரம்பிற்கு உட்பட்டவர்களா?

ஆ: ஆம். ஒரு சுதந்திர நாட்டில் அரசாங்க அதிகாரிகள் கூட நீதி மன்றங்களுக்கும் நாட்டின் எல்லா சட்டங்களுக்கும் உட்பட்டவர்கள்—சட்ட ஆட்சியின்படி.

கு: சட்ட ஆட்சி என்ருல் என்ன?

ஆ: சட்டத்தின் முன்னிலையில் அனைவரும் சமம் என்பது அதன் பொருள்; தங்களுடைய பதவிக் கடமைகளைச் செய்யும்போது ஏற்படும் சட்ட விளைவுகளுக்கு அரசாங்க அதிகாரிகள் பொறுப்பாளிகள், சட்ட விரோதமான செயல்களுக்கு நீதிமன்றங்களால் அவர்கள் தண்டிக்கப்படலாம்.

கு: நிர்வாகத்தின் மீது நீதி சபைக்கு அதிகார வரம்பு உண்டா?

ஆ: ஆம். நிர்வாகம் அல்லது அதன் அதிகாரிகள் சட்டத்தை மீறும்போது, அது சட்டத்தின் மேன்மை, நீதி சபையின் சுதந்திரம் ஆகியவற்றின் பலன்களில் ஒன்று. ஒவ்வொரு சுதந்திர நாட்டிலும் அது இருக்கிறது. சட்ட ஆட்சியில் அது அடங்கி யிருக்கிறது.

கு: இந்த சட்ட ஆட்சி எல்லா நாடுகளிலும் காணப்படுகிறதா?

ஆ: இங்கிலாந்து அரசியல்சட்ட முறையைப் பின்பற்றும் எல்லா நாடுகளிலும் அது இருக்கிறது.

கு: வேறு முறைகள் உள்ள நாடுகள் இருக்கின்றனவா?

ஆ: ஆம். பிரான்ஸ் நாட்டிலும், பிரெஞ்சு அரசியல் சட்டத்தை யொட்டி உருவாக்கப்பட்ட அரசியல் சட்டங்களையுடைய நாடுகளிலும், நிர்வாக மன்றங்கள் உள்ளன. அதிகார அலுவலில் சட்டத்தை மீறும் அல்லது மக்களின் உரிமைகளைப் பறிக்கும் அதிகாரிகளின் வழக்குகளை அவை விசாரிக்கும். ஆனால், இந்த நிர்வாக மன்றங்களும் சுதந்திரமானவை. அவை பாரபட்சமற்ற தன்மைக்கும், சுதந்திரத்திற்கும், திறமைக்கும் புகழ் பெற்றுள்ளன.

கு: அப்படியானால் நீதிசபை ஒரு முக்கியமான ஸ்தாபனமா?

ஆ: குடியின் உரிமை என்ற கண்ணோட்டத்தில் பார்க்கும் போது அது மிக முக்கியமான அமைப்பு; உரிமையின் அரண் என்று அது அழைக்கப்படுகிறது.

## 15. படை (ராணுவம்)

கு: நிர்வாகம், சட்டசபை, நீதிசபை ஆகியவை நீங்கலாக நாட்டின் ஸ்தாபனம் வேறு இருக்கிறதா?

ஆ: ஆம். படை யிருக்கிறது.

கு: படையை ஒரு தனி ஸ்தாபனமாக ஏன் கருதுகிறீர்கள்? அது நிர்வாகத்தின் கருவியல்லவா?

ஆ: ஆம், அது நிர்வாகத்தின் கருவி. ஆனால், அதன் பிரத்தியேக நிறுவனம், விசேஷ அம்சம் ஆகியவை காரணமாக அதை ஒரு தனி ஸ்தாபனமாகவே கருத வேண்டும்.

கு: நாட்டில் விசேஷ இடத்தைப் பெறும் ராணுவத்தின் பிரத்தியேக அம்சங்கள் எவை?

ஆ: நாட்டின் பலத்தை ராணுவம் பிரதிபலிக்கிறது. அதனுடைய எண்ணிக்கையும், ஸ்தாபனமும், அதிகாரக் குவியலும், பயங்கர ஆயுதங்களும் நாட்டில் அதை ஒரு பலமுள்ள சக்தியாக்குகின்றன.

கு: ஆனால், ஒவ்வொரு சுதந்திர நாட்டிலும் ராணுவம், நிர்வாகத்திற்கும் சட்ட சபைக்கும் கீழிருந்து, அவற்றின் கட்டளைகளுக்குக் கீழ்ப்படிய அது கடமைப் பட்டுள்ளதல்லவா?

ஆ: ஆம். — ஆனால், நிர்வாகம் சட்டசபை ஆகியவற்றின் கட்டளைகளுக்குக் கீழ்ப்படிய அது மறுப்பதாகக் கற்பனை செய்து கொள்வோம்! அந்தச் செயல், அரசியல் சட்டத்தை மீறுவதாகும், அது ராணுவப் புரட்சியைத் தோற்றுவிக்கும். நாட்டில் புரட்சி ஏற்பட அது வழிகோலும்.

கு: அத்தகைய நிகழ்ச்சிகள் எங்காவது ஏற்பட்டுள்ளனவா?

ஆ: ஆம். அரசியல் சட்டம் உள்ள சுதந்திர நாடுகளில் கூட அது அடிக்கடி ஏற்பட்டுள்ளது. இராக்கிலும், பாகிஸ்தானிலும், சூடானிலும், ஸ்பெயினிலும், தென் அமெரிக்க நாடுகளிலும், சமீபத்தில் இந்தோனேஷியாவிலும்—இங்கிலாந்து நாட்டிலும்கூட அத்தகைய புரட்சி ஏற்பட்டுள்ளது.

கு: அத்தகைய ராணுவப் புரட்சிகளை எவ்வாறு தடுக்க இயலும்?

ஆ: அரசியல் சட்டத்தில் ஏற்பாடு செய்து, ராணுவத்தை மக்கள் நிர்வாகத்தின் கீழ் ( யு. எஸ். ஏ.யிலும், இந்தியாவிலும் அதன் பிரதிநிதியும், சேனாதிபதியுமாகிய ஜனாதிபதியின் கீழ் கொண்டு வந்தும்)ராணுவ நிர்வாகத்தை இந்திய அரசாங்க மந்திரி சபையின் சிவில் மந்திரியின் கீழ் கொண்டுவந்தும், ராணுவம் இருப்பதும் செயலாற்றுவதும் சிவில் நிர்வாகத்தைச் சார்ந்திருக்கும்படியான மற்ற ஏற்பாடுகளைச் செய்தும் புரட்சியைத் தடுக்கலாம்.

கு: மற்ற ஏற்பாடுகளில் முக்கியமானவை எவை ?

ஆ: ராணுவத் தலைமை நிலைய அலுவலைச் சட்டம் அல்லது சட்டசபை அவ்வப்போது ஒழுங்குபடுத்தவேண்டும். ராணுவச் செலவுக்கு ஒவ்வொரு ஆண்டிலும் சட்ட சபை பணம் ஒதுக்க வேண்டும்.

கு: ராணுவத்திற்கு எதிராகக் குடியின் உரிமையைப் பாதுகாக்க வேறு ஏதாவது ஏற்பாடுகள் இருக்கின்றனவா?

ஆ: இந்தியாவில் உள்ள சட்ட ஆட்சியின்படி சிப்பாய்கள் (தளபதி முதல் ஜவான்கள் வரை) குடிகளாவார்கள். சிவில் அல்லது கிரிமினல் குற்றம் சம்பந்தமாக அவர்கள் சாதாரண நீதிமன்றங்களின் விசாரணைக்கு உட்படுகிறவர்கள். ஒரு சிப்பாய்மீது குற்றம் சாட்டப்பட்டால் உயர்தர அதிகாரியின் உத்தரவுப்படி நடந்ததாக அவன் எதிர் வழக்காட இயலாது.

கு: எல்லா விஷயங்களிலும் சிவில் நீதிமன்றங்களின் அதிகார வரம்பிற்கு சிப்பாய்கள் உட்பட்டவர்களா?

ஆ: இல்லை. அவர்களுடைய ராணுவ வாழ்க்கை, ராணுவக் கடமைகள், ஆகிய விஷயங்களில் அவர்கள் ராணுவச் சட்டங்களுக்கும், ராணுவ நீதிமன்றங்களுக்கும் உட்படுவார்கள், (அந்தச் சட்டம் சிவில் சட்ட சபை அல்லது பாதுகாப்பு இலாகாவால் அங்கீகரிக்கப்படுகிறது.)

கு: ராணுவ நீதிமன்றங்களின் முடிவுகள் இறுதியானவையா?

ஆ: இல்லை. அவற்றைப் பாதுகாப்புத்துறை மாற்றலாம். அல்லது குடியின் உரிமைத் தொடர்பாக இருந்தால், ராணுவ நீதிமன்றத்தின் முடிவுகளைச் சாதாரண (சிவில்) நீதிமன்றங்கள் மாற்றலாம்.

கு: அப்படியானுல் நாட்டுக்கு ராணுவத்திடமிருந்து அபாயம் எங்கிருக்கிறது?

ஆ: அது வைத்துள்ள பயங்கர ஆயுதங்களிலும், கட்டுப்பாட்டிலும், ஒரு தலைவனின் கீழுள்ள மத்தியத் தலைமையிலும் அபாயம் ஏற்படலாம். நான் ஏற்கனவே

குறிப்பிட்ட நாடுகளில் ஏற்பட்டதுபோல சிவில் அதி காரத்தை ஒழிக்க அந்த ராணுவத்தலைவனுக்கு ஆசை தோன்றலாம்.

கு: அதை எவ்வாறு தடுப்பது?

ஆ: நிரந்தரக் குழப்பத்தாலும், கலவரத்தாலும், அண்டை நாட்டின் படையெடுப்புக்கு வசதி எற்பட்டு, நாட்டின் வாழ்வுக்கே ஆபத்து ஏற்படும்போது, அந்தத் தீவிர நடவடிக்கைகளை ஒரு சுதந்திர நாட்டின் ராணுவம் மேற்கொள்ளுகிறது. திறமையற்ற அரசாங்கத்தை நாட்டின் பரந்தநலனை உத்தேசித்து ராணுவம் அகற் றக்கூடும். ராணுவத்தின் அரசியல் சட்டத்திற்குப் புறம்பான செயலை நல்லஅரசாங்கத்தால்தான் தடுக்க முடியும்.

கு: ஆகவே, ராணுவத்தை, நல்ல அரசாங்கத்துக்கான சக்தி என்று கருத முடியுமா?

ஆ: ராணுவத்தின் மறைந்துள்ள சக்தி, நல்ல ஆட்சிக் குத் தூண்டுகோலாக விளங்கக்கூடும்.

# 16. ஸ்தல ஸ்தாபன ஆட்சி

கு: நகராண்மை, நாட்டாண்மைக் கழகங்களின் தேர்தல்கள் குறித்து பரபரப்பு ஏன்?

ஆ: நகராண்மைக்கும், நாட்டாண்மைக்கும் நடைபெறும் தேர்தல்கள் குறித்து மக்கள் பொருத்தமாகவே பரபரப்படைகிருர்கள், ஏனென்ருல், அவை ஸ்தல நிர்வாகத்தின் உறுப்புகளும் ஸ்தல ஸ்தாபன ஆட்சி நிலேயங்களும் ஆகும்.

கு: அத்தகைய ஸ்தல நிர்வாக உறுப்புகள் இருப்பது ஏன் ?

ஆ: 60,000 சதுர மைல் பரப்பும் 3 கோடி ஜனத்தொகையும் கொண்ட சென்னே ராஜ்யத்தைப் போன்ற ஒரு பெரியராஜ்யத்தை சென்னே போன்ற ஓரிடத்திலிருந்தும், சென்னே அரசாங்கம் போன்ற அரசாங்கத்தின் அடிப்படையில் நிர்வகிப்பது இயலாத காரியம். திறமையாக நிர்வாகம் நடப்பதற்காக ஒருபெரிய ராஜ்யத்தின் அரசாங்கத்தையும் நிர்வாகத்தையும் பங்கிடுவது அவசியம். குடிநீர் வினியோகம், நகர அல்லது கிராமத்திட்டம், சுகாதாரம் அல்லது சாக்கடைபோன்றவை ஒரு ஸ்தலத்திற்கு மிக நெருங்கிய விஷயங்கள்

அவற்றைத் தொலைவிலுள்ள தலைநகரங்களிலிருந்து நிர்வகிப்பதைவிட ஸ்தலத்தில் நிர்வகிப்பது சிறந்தது.

கு: ஸ்தலஸ்தாபன ஆட்சி நிலையங்கள் ஏன் இருக்க வேண்டும்?

ஆ: அதைப் போன்ற காரணத்திற்காக; ஒரு நாட்டில் சுய ஆட்சியை உண்மையானதாகவும் பயனுள்ளதாகவும் செய்வதற்கு, அதைக் கூடுமானவரை நகரங்களிலும், மாவட்டங்களிலும் கிராமங்களிலும் பகிர்ந்து கொடுப்பது நல்லது. குடியாட்சி வெளிப்படையாக இருக்க வேண்டுமானால், அதைச் சிறிய அமைப்புகள் கையாள்வது அவசியம். சில விவகாரங்கள் பற்றிய நிர்வாகத்தில் மக்களுக்கு உடனடியான, நேரடியான பங்கு இருந்தால் ஆட்சியில் மக்களுக்கு ஆர்வம் ஏற்படுகிறது.

கு: தேர்ந்தெடுக்கப்பட்ட மந்திரிகளாலும், தேர்ந்தெடுக்கப்பட்ட சட்ட சபைகளாலும் ஒரு நாட்டில் ஓரிடத்திலிருந்து ஏன் குடியாட்சியை அனுசரிக்கக் கூடாது?

ஆ: அது இயலாது, ஒரு பிரதிநிதித்துவ சபையில் மக்களைப் பாதிக்கும் எல்லா விஷயங்களையும் கொண்டு வந்து விவாதிக்க முடியாது. ஒரு ராஜ்ய சட்ட சபையில் ராஜ்யத்தையும் மக்கள் அனைவரையும் பாதிக்கக் கூடிய நிலக் குத்தகை முறை, அல்லது விற்பனை வரி அல்லது கைத்தறித் தொழில், அல்லது பொதுக் கல்வி முறை போன்ற ஒரு சில முக்கியமான விஷயங்களைத் தாம் கவனித்து முடிவு செய்ய இயலும். கிராமச்சாலைகள், கிராமக் கிணறுகள், ஆரம்பப்பள்ளிகள் அல்லது சுகாதாரம், சாக்கடை போன்ற சிறு விஷயங்களைக் கவனிக்க நேரமிருக்காது.

கு: ஆனால், தேவையான பணமும் மனிதர்களும் பெற வசதியுள்ள ஒரு மத்திய அரசாங்கத்தின் மூலம் கிராமச் சாலைகள் அல்லது பள்ளிக்கூடங்கள், அல்லது குடிநீர் வினியோகம் ஆகியவற்றை மேற்கொள்வது அதிக பயனுள்ளதாக இருக்காதா? இவற்றை,பணத்தையோ, கிராமச் சாலைகள் பள்ளிக்கூடங்களை அமைக்கும் தகுதியுள்ளவர்களையோ பெற இயலாத சிறிய அற்பமான ஆட்சிகளை விட ஒரு மத்திய நிலையத்திலிருந்து செய்வது பணத்திலும் முயற்சியிலும் அதிக சிக்கனத்தை உண்டாக்காதா?

ஆ: அது அவ்வாறு இருந்த போதிலும், கிராமங்களுக்கு இந்தச் சேவைகளைச் செய்ய ஒரு மத்திய ஆட்சிக்கு குறைந்த செலவும், நல்ல குறைந்த ஆட்களும் போதுமானதாக இருந்த போதிலும், கிராமங்களுக்கும் நகரங்களுக்கும் ஜில்லாக்களுக்கும் தனியாக ஆட்சி ஸ்தாபனங்கள் ஏன் இருக்க வேண்டும் என்பதற்கு ஒரு அவசியமான காரணம் உண்டு.

கு: அந்த அவசியமான காரணம் எது?

ஆ: கிராமங்கள், நகரங்கள், மாவட்டங்கள் போன்ற ஸ்தல உறுப்புகளுக்கு ஆட்சி அதிகாரங்கள் சிலவற்றைக் கொடுக்கும் காரணம் என்னவென்றால், அந்த உறுப்புகளுக்கு ஆட்சி அதிகாரங்களைப் பகிர்ந்தளிப்பதால் ஆட்சி அலுவல்களில் அந்த ஊர் மக்களுக்கு ஆர்வத்தையும் ஆட்சியில் பங்கையும் கொடுப்பதாகும். குடியாட்சி, அதாவது மக்களுக்காக மக்களுடைய மக்களாலான அரசாங்கம், இவ்வாறு நாடு முழுவதிலும் பரவலாக விளங்குகிறது. மத்தியில் குவிந்திருப்பதில்லை. இவ்வாறு குடியாட்சி

உண்மையானதாகவும் பயனுள்ளதாகவும் செய்யப் படுகிறது.

கு: ஆனால், ஸ்தல ஸ்தாபன ஆட்சி அரசாங்க விவகாரங் கள் அனைத்தையும் கவனிக்காததால், ஸ்தல ஸ்தா பன ஆட்சி, அரசாங்கத்தில் மக்களுக்கு ஆர்வத்தை யும் தங்களை ஆண்டு கொள்ளும் வாய்ப்பையும் கொடுப்பதாக எவ்வாறு கூறமுடியும்?

ஆ: ஸ்தல சுயாட்சிகளை இந்த உறுப்புகள், ஆட்சி அலு வல்கள் அனைத்தையும கவனிக்க இயலாது என்பது வெளிப்படை. வெளிநாட்டு விவகாரம், பாதுகாப்பு, பல்கலைக் கழகப் படிப்பு, நிலவரி நிர்வாகம், விவ சாயம், தொழிலபிவிருத்தி போன்ற தேசிய விஷயங் களை அவை கவனிக்க இயலாது. அவற்றின் சக்திக் கும் அதிகாரத்திற்கும் உட்பட்ட விஷயங்களைத்தாம் அவை நிர்வகிக்க இயலும்.

கு: அத்தகைய கட்டுப்பட்ட சுயாட்சி எவ்வாறு குடி யாட்சிக்கு உதவும்?

ஆ: மனிதன் தன் செயல்களில், எளியதிலிருந்து சிக்க லானதற்கும், சுலபமானதிலிருந்து கடினமானதற் கும், அருகிலிருப்பதிலிருந்து தொலைவிலிருப்பதற் கும் முன்னேறுகிறான். ஆகவே, ஆட்சி விஷயத்தி லும் ஸ்தல விவகாரத்திலிருந்து தேசிய விவகாரத் திற்கும், கிராம அல்லது நகர ஆட்சியிலிருந்து மாவட்ட ஆட்சிக்கும், மாவட்ட ஆட்சியிலிருந்து மாநில ஆட்சிக்கும், மாகாண ஆட்சியிலிருந்து நாட்டு ஆட்சிக்கும் செல்வது நல்லது. மற்றும் ஸ்தல ஆட்சி யில், கிராம அல்லது நகர விவகாரங்களை நிர்வகிப்ப வர்களுடன் மக்கள் உடனடியான நேரடியான தொடர்பு கொண்டிருக்கிறார்கள்; அவர்களுடைய

ஆட்சியாளர்கள் ஆட்சி புரிவதை அவர்கள் நேரடியாகப் பார்க்கிறார்கள். ஸ்தல சுயாட்சி, நேரடியான குடியாட்சி முறை. ஆகவே ராஜ்ய ஆட்சியிலும், பிறகு நாட்டு ஆட்சியிலும் பங்கு பெறுவதற்கு, ஸ்தல சுயாட்சியில் பயிற்சி பெறுவது பூர்வாங்கமும் அவசியமும் ஆகும்.

கு: இந்தக் கோட்பாட்டுக்கு ஆதாரங்கள் உண்டா?

ஆ: ஆம். அரசாங்க சரித்திரத்தில் இருக்கிறது. எங்கெல்லாம் ஸ்தல சுயாட்சி வலுவாகவும் தொடர்ந்தும் இருந்து வந்திருக்கிறதோ அங்கு தேசிய சுயாட்சி அல்லது ஜனநாயகம் செழித்தோங்கி வலுவாகவும் நீடித்தும் இருந்துள்ளது என்பது கண்டுபிடிக்கப் பட்டுள்ளது.

கு: இது நிகழ்ந்த நாடுகள் எவை?

ஆ: இங்கிலாந்திலும், யு.எஸ். ஏ. வி.லும், சுவிட்சர்லாந்திலும் சரித்திர ஆரம்பத்திலிருந்து ஸ்தலசுயாட்சி வலுவாகவும் சுறுசுறுப்பாகவும் இருந்ததால், அந்த நாடுகளில் சுயாட்சியும் ஜனநாயகமும் மிகவும் தழைத்தோங்கியுள்ளன. இங்கிலாந்தில் பாரிஷ்களும் பரோக்கள் அல்லது நகரங்களும், கண்ட்ரிகளும் யு. எஸ். ஏ. யில் நகரங்களும் கவுண்டிகளும்; சுவிட்சர்லாந்தில் "லேண்ட்ஸ் – ஜெமிண்ட்"களும் வலுவான சட்டபூர்வமான அரசாங்கத்தின் அஸ்திவாரமாக விளங்கியுள்ளன. நூற்றாண்டுக்கு நூற்றாண்டு இங்கிலாந்தில் பார்லிமெண்டுக்கும், அமெரிக்காவில் காங்கிரசுக்கும் (சட்டசபை) மக்களுடைய பிரதிநிதிகளாகச் சென்றுள்ளவர்களில் அநேகம் பேர்கள், அந்த நாடுகளின் பரோ அல்லது நகர அல்லது கவுண்டி சபைகளில் மக்கள் ஆட்சிக்கலையில் பயிற்சி

பெற்றவர்கள். சமீப உதாரணம் ஒன்றுகூறவேண்டு மாஞல், இங்கிலாந்தின் தொழிற்கட்சியின் முன்ஞள் உப-தலைவர் திரு. மாரிசன், லண்டன் கவுண்டி சபை யில்தான் தன் அரசியல் புகழைப்பெற்ருர். லண்டன் நகர ஆட்சித்தலைவரான மேயர் பிரபு, அந்த நாட்டின் சிறந்த அரசியல் தலைவர்களில் ஒருவராவார்; அவர் மன்னர்களையும், மந்திரிகளையும் வரவேற்று உபசரிப் பவர்.

கு: அதற்கு எதிரிடையானது நிகழ்ந்த நாடுகள் உண்டா?

ஆ: ஆம். பலவீனமான சக்தியற்ற ஸ்தல ஆட்சி, நாட் டின் சீர்கேட்டுக்கும் அழிவுக்கும் வழிகோலிய நாடு கள் உண்டு. பிரான்ஸ் நாட்டில், சரித்திர ஆரம்பத் தில் இங்கிலாந்தைப் போல ஸ்தல சுயாட்சி வலுவுட னிருந்தது; ஆஞல் பிரான்ஸின் நகரங்கள், கம்யூன் கள், மாகாணங்கள் ஆகியவற்றின் அதிகாரங்களைப் படிப்படியாக எதேச்சாதிகார மன்னர்கள் பறித்துக் கொண்டார்கள். ஸ்தல சுயாட்சி அழிந்ததும் தேசிய சுயாட்சியும் சீர்கெட்டு அழிந்தது. அதற்கு ஒருபுரட்சி-பிரசித்திபெற்ற பிரெஞ்சுப் புரட்சி, புத்துயிரளிக்க வேண்டியதாயிற்று. ரஷ்யா, சுல்தான்களின் கீழுள்ள துருக்கி போன்ற நாடுகளில், ஸ்தல சுயாட்சியின் நாசத்திலிருந்து எதேச்சாதிகாரம் தலையெடுத்தது. உண்மையில் எல்லா எதேச்சாதிகாரங்களின் சரித் திரமும் இந்தக் கோட்பாட்டை நிரூபிக்கிறது. எதேச் சாதிகாரங்களும் புரட்சியால் அல்லது திடீர் பல வீனத்தால் சாகின்றன. (நாடுகளின் இரத்தமாகிய அதிகாரம், மையத்திற்கு இழுக்கப்படுகிறது) அவ் வாறுதான் ரோமானிய சாம்ராஜ்யம் அழிந்தது. ஸ்தல சுயாட்சியை நாஜிஜெர்மனி அல்லது பாசிஸ்டு

இத்தாலி அல்லது சோவியத் ரஷ்யா போன்ற எல்லா எதேச்சாதிகார நாடுகளும் எதிர்த்துள் ளன.

கு: ஆனல், ஸ்தல சுயாட்சி ஸ்தாபனங்கள் அவசியமாக வும் பயனுள்ளதாகவும் இருக்குமானல், பல நாடு களில் அவை ஏன் கலைக்கப்படுகின்றன?

ஆ: நாம் பார்த்துள்ள அதிகார மோகமும், அந்த ஸ்தா பனங்களின் தோல்வியும் காரணமாகும்.

கு: அது எவ்வாறு ஏற்படுகிறது?

ஆ: மனிதர்களைப் போல ஸ்தாபனங்களும் தவறு செய் கின்றன.

கு: ஸ்தல சுயாட்சி ஸ்தாபனங்கள் எவ்வாறு தவறு செய்ய இயலும்?

ஆ: தங்களுடைய கடமைகளைச் செய்வதில் திறமையற்று இருப்பதாலும், அந்த ஸ்தாபனங்களின் ஆட்சிக் குழுக்களின் உறுப்பினர்களிடையே கட்சியும் பூச லும் (கிராமப் பஞ்சாயத்திலும், நகரசபையிலும், ஜில்லா போர்டிலும்) ஏற்படுவதாலும் தவறு ஏற்படு கிறது.

கு: ஸ்தல சுயாட்சி ஸ்தாபனங்களில் கட்சிகளும் இருக் கக்கூடாதா?

ஆ: இருக்கக்கூடாது. ஏனென்ருல், இந்த ஸ்தாபனங் களில் கட்சி வேறுபாடுகளுக்கு இடமில்லை. கிராமத் தில் அல்லது நகரத்தில் குடிநீர் வினியோகத்தை அல்லது சுகாரத்தை அல்லது சாக்கடையை அல்லது ஆரம்பக் கல்வியை அபிவிருத்தி செய்வதில் கருத்து வேறுபாடு இருக்க முடியாது. காங்கிரஸ்காரர்கள் அல்லது சோசலிஸ்டுகள் அல்லது பொது உடமை

யினர் அனைவரும் நல்ல நீரையும், சுத்தமான கிராமத்தையும் நகரத்தையும் விரும்புவார்கள். கட்சி அல்லது கட்சி மனப்பான்மை புகுத்தப்பட்டால், கிராமம் அல்லது நகரம் அல்லது ஜில்லாவின் பொது நலனை மறந்து கட்சி நலனைக் கவனிக்க ஆரம்பித்துவிடுவார்கள். அதாவது கிராமப் பஞ்சாயத்து அல்லது நகரசபை அல்லது ஜில்லா போர்டு ஆகியவற்றின் அலுவலகப் பதவிகளுக்கு அந்த சபைகளின் பெரும்பான்மைக் கட்சி, திறமையைக் கவனிக்காமல் தன் கட்சியின் உறுப்பினர்களை நியமிக்கும்.

கு: இந்தத் தவறுகளுக்குப் பரிகாரம் என்ன?

ஆ: இந்தச் சபைக்கு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கும் மக்கள் தங்களுடைய வாக்குகளை சரியாகப் பயன்படுத்துவதுதான் ஒரே பரிகாரம். சரியான, திறமையான, குடும்ப அல்லது ஜாதி நோக்கத்திற்கு கட்டுப்படாத பொது நலத்தில் ஆர்வமுள்ள மனிதர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும். தேர்தலுக்குப் பிறகு தூங்கக்கூடாது. ஆனல், கடிதங்கள் எழுதியும், நேரில் சந்தித்தும் மக்கள் அவர்களைத் தங்களுடைய கடமைகளைச் செய்ய வற்புறுத்த வேண்டும் — தங்களுடைய கிராமம் அல்லது நகரம் அல்லது ஜில்லாவின் நிர்வாகம் சீரழிந்தால் அதற்கு மக்கள் தாம் காரணம். ஏனென்றல் தவருன மனிதர்களை தேர்ந்தெடுத்தது அல்லது அவர்கள் மீதும் அவர்களுடைய செயல்கள் மீதும் விழிப்புடன் கவனம் செலுத்தாததும் மக்களே.

கு: கிராம பஞ்சாயத்துகளும், நகரசபைகளும், ஜில்லா போர்டுகளும் தங்களுடைய கடமைகளைச் செய்து வைப்பதற்கு வேறு வழி இல்லையா?

ஆ: ஆம், இருக்கிறது. அதுதான் ராஜ்ய அரசாங்கத்தின் மேற்பார்வையிடும், கட்டுப்படுத்தும் அதிகாரம். இந்த ஸ்தல சுயாட்சி ஸ்தாபனங்களுக்கு சுயாட்சி இருந்த போதிலும், அவற்றிற்கு முழு சுதந்திரமில்லை. அவற்றைத் தோற்றுவித்த சட்டங்களுக்கு உட்பட்டுத்தான் அவை செயலாற்ற இயலும். மற்றும் தொழில் வரி, சொத்து வரி, யாத்ரீகர் வரி போன்ற வரிகளாலும் கட்டணங்களாலும் கிடைக்கும் வருமானத்தை மட்டும் கொண்டு அவை செயலாற்ற இயலாததால், ராஜ்ய அரசாங்கத்திடமிருந்து அவை மான்யம் பெறுகின்றன. இந்த மான்யங்கள் அல்லது நன்கொடைகள் அவை அளிக்கப்பட்ட காரியங்களுக்காகப் பயன்படுத்தப்படுகின்றனவா இல்லையா என்று ராஜ்ய அரசாங்கம் கண்காணிக்க வேண்டும்.

கு: இந்த மேற்பார்வையிடும் அல்லது கட்டுப்படுத்தும் அதிகாரத்தை ராஜ்ய அரசாங்கம் எவ்வாறு உபயோகிக்கிறது?

ஆ: தலைமை, உதவி ஸ்தலஸ்தாபன அதிகாரிகளை (இன்ஸ்பெக்டர்களை) நியமிக்கிறது. அவர்கள் அடிக்கடி அந்த ஸ்தாபனங்களுக்கு விஜயம் செய்து ஸ்தலத்தில் அதன்வேலையைக் கண்காணிக்கிறார்கள். ராஜ்ய அரசாங்கத்தின் தணிக்கை அதிகாரிகள் மூலமாகவும் அரசாங்கம் மேற்பார்வையிடுகிறது.

கு: இங்கிலாந்து, யு. எஸ். ஏ. போன்ற ஜனநாயக நாடுகளில் இதுதான் வழக்கமா?

ஆ: ஆம்.

கு: அது ஏன்?

ஆ: ஸ்தல சுயாட்சியும் திறமையாக இருக்க வேண்டும்— இல்லாவிடில் அது கண்டிக்கப்பட்டு கலைக்கப்படும். ஆகவே, அது வாழவேண்டுமானல் அது சரிவர செயலாற்ற வேண்டும். எல்லா அரசாங்கங்களைப் போல ஸ்தல சுய ஆட்சியிலும் நிரந்தர விழிப்புதான் சுதந்திரத்துக்கு நாம் கொடுக்கும் விலை.

# 17. குடியரசு

கு: குடியரசு என்ருல் என்ன?

ஆ: குடியரசு என்பது ஒரு நாடு, அதன் தலைவர் தன் வாழ்நாள் முழுவதும் அந்தப் பதவியிலிருக்கும் பரம் பரை அரசரல்லர். அவர் மக்களால் அல்லது மக்கள் சார்பில் தேர்ந்தெடுக்கப்பட்டு ஒரு குறிப்பிட்ட காலத் திற்கு, ஐந்து ஆண்டுகள்வரை அவர் தமது பதவியி லிருப்பார்.

கு: இந்தியாவில் குடியரசு ஏன் அமைக்கப்பட்டது?

ஆ: இந்தியா சுதந்திரமடைந்த போது அதுதான் அரசி யல் லட்சியமாக இருந்தது. ஆகவே, அரசியல் நிர்ணய சபை இந்தியாவில் ஒரு குடியரசு நாட்டை அமைத்தது.

கு: மன்னர் ஆட்சியைவிட குடியரசு உயர்ந்ததா?

ஆ: இல்லை. பழையகால கிரீசின் அநேக குடியரசுகள், மத்தியகால இத்தாலி, தற்கால தென் அமெரிக்க குடியரசுகள் போன்ற நன்ருக ஆளப்படாத, சகிப் புத்தன்மை இல்லாத, பிற்போக்கான குடியரசுகள் உண்டு. இங்கிலாந்து, பெல்ஜியம், ஹாலந்து போன்ற நன்கு நிர்வகிக்கப்படும் முடியரசுகளும் உண்டு.

கு: அப்படியானுல் குடியரசு முறை ஆட்சியை மக்கள் ஏன் தெரிந்தெடுத்துள்ளனர்? முடியரசை ஏன் குடி யரசு ஆட்சியாக மாற்றியுள்ளனர்?

ஆ: வழக்கமாக அது, சரித்திர பூர்வமான, புரட்சியின் விளைவான நிகழ்ச்சி. அப்பொழுது மன்னர் ஆட்சி யின் தவறுகள் காரணமாக அது கவிழ்க்கப்பட்டு, குடியரசு ஏற்படுத்தப்பட்டது.

கு: தற்காலத்தில் குடியரசு முறை ஆட்சிக்கு ஆதரவு ஏற்பட்டிருப்பதன் காரணம் என்ன; தற்போது முடி யரசுகளைவிட குடியரசுகள் அதிகமாக இல்லையா?

ஆ: அப்படித்தான் இருக்கிறது—சரித்திர நிகழ்ச்சிகளைத் தவிர, குடியரசுகளின் நன்மதிப்பிற்குக் காரணம் அவற்றின் நல்ல தோற்றமாகும்.

கு: நீங்கள் கூறுவதன் பொருள் என்ன?

ஆ: ஒரு குடியரசு அதிக ஜனபிமானமுள்ள ஆட்சி முறை யாகத் தோன்றுகிறது. ஏனென்றால், நாட்டின் தலை வர்கூட மக்களால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படு கிறார். அல்லது தற்போதுள்ள அரசியல் சட்டப்படி இந்தியாவில் தேர்ந்தெடுக்கப்படுவதைப் போல மறைமுகமாகத் தேர்ந்தெடுக்கப்படுகிறார்.

கு: ஆகவே முடியரசைவிட குடியரசு அதிக ஜனநாயக முள்ளதா ?

ஆ: அது அவசிய மன்று—இங்கிலாந்தில், யு. எஸ். ஏ. யில் உள்ள அளவிற்கு ஜனநாயகம் இருக்கிறது. அனைவருக்கும் வாக்குரிமை, பெரும்பான்மையின ரால் ஆட்சி, சட்டத்தின் முன்னிலையில் அனைவரும் சமம், திறமைசாலிகளுக்குப் பதவிகள் கிடைப்பது ஆகிய விஷயங்கள் அமெரிக்காவைப் போலவே இங்கிலாந்திலும் பாதுகாக்கப்படுகின்றன—சோவி யத் ரஷ்யா, நாஜி ஜெர்மனி போன்ற எதேச்சாதிகார குடியரசுகளும், வெனிஸ் போன்ற கொடுமையான குடியரசும் உண்டு.

கு: அப்படியானால் குடியரசுக்கு ஆதரவான தற்காலப் போக்கிற்கு விளக்கம் என்ன?

ஆ: நான் ஏற்கெனவே கூறியது போல, குடியரசு நன்ருகத் தோற்றமளிக்கிறது—மக்களின் அரசியல் விருப்பங்களுக்கு அது ஒரு நல்ல சாதனமாகத் தோன்றுகிறது; ஒரு குடியரசின் கீழ் மக்களின் பக்தியும் விஸ்வாசமும் நாட்டின் மீது செல்கிறது; குடியரசு தன் தோற்றத்தாலே தனிப்பட்ட அல்லது பகுதி அல்லது வகுப்பு நலனைவிடப் பொது நலத்திற்கு ஆதரவை அளிக்கிறது; சமத்துவம், சுதந்திரம், சகிப்புத் தன்மை ஆகியவற்றைப் பெரும் அளவில் கடைப்பிடிக்க அது அழைக்கிறது.

கு: குடியரசு அவ்வளவு வசீகரமாக இருந்தால், வெய்மர் அரசியல் சட்டத்தின் கீழ் ஜெர்மனியும், பிராங்கோ முன்னால் ஸ்பெயின் குடியரசும், பல தென் அமெரிக்க நாடுகளும் போன்ற நாடுகளில் அது ஏன் தோற்று விட்டது ?

ஆ: ஏனென்ருல், மன்னர் ஆட்சியைவிட குடியரசு மிகக் கடினமான ஆட்சி முறை.

கு: அது எவ்வாறு ?

ஆ: அந்தக் கேள்விக்கு ஏற்கெனவே பதிலளிக்கப்பட்டிருக்கிறது—மன்னர் ஆட்சியைவிட, குடியரசு ஆட்சியில் பொதுமக்களிடம் உயர்தரமான அரசியல் விவேகமும், ஒழுக்கமும் தேவைப்படுகின்றன. மன்னர் ஆட்சியில், மன்னர் நிரந்தரத் தலைவராக இருப்பதாலும், ஓய்வுள்ள பிரபுக்கள் அல்லது நன்ருகத் தெரிந்தெடுக்கப்பட்ட ஆலோசனைக் குழுவும் அதிகாரிகளும் அவரைச் சூழ்ந்து இருப்பதாலும், நாட்டையும் மக்களையும் அவர்களுடைய நலனுக்கு உகந்த வகையில் ஆளக்கூடும். ஆனல், ஒரு குடியரசில் தங்

களுடைய தலைவரையும், மந்திரிகளையும், பிரதிநிதிகளையும் மக்களே தேர்ந்தெடுக்க வேண்டும்; ஆட்சியின் சுமையும் பொறுப்பும் மக்கள் மீது முழுவதும் நேரடியாக விழுகிறது.

கு: முடியரசில் இருப்பதைவிட குடியரசில் மக்கள் அதிக அரசியல் தரமுள்ளவர்களாக இருக்க வேண்டுமா?

ஆ: ஆம்; ஏனென்றால், அரசாங்கம் மக்களின் தோள்கள் மீது சுமத்தப்பட்டுள்ளது; நல்ல ஆட்சிக்குத் தேவையான அரசியல் தகுதிகளை மக்கள் பெற்றிருக்க வேண்டும். அதனால்தான் மான்டஸ்கியூ என்ற சிறந்த பிரெஞ்சு அரசியல் எழுத்தாளர், முடியாட்சியின் கொள்கை கௌரவமாகவும், பிரபுத்வத்தின் கொள்கை நிதானமாகவும் இருக்கும்போது, குடியரசின் கொள்கை நேர்மை என்று கூறியிருக்கிறார்.

கு: அதை அவர் எவ்வாறு மதிப்பிடுகிறார்?

ஆ: மான்டஸ்கியூவின் கருத்துப்படி, முடியாட்சியில் யாராவது தவறு செய்தால் பலாத்காரத்தால் அல்லது ஆலோசனை சபையை மாற்றி அமைப்பதால் அதை மன்னர் திருத்த இயலும்; பிரபுத்துவம் நிதானமாக நடந்துகொண்டால் தன் ஆட்சியை நீண்ட காலம் அது செலுத்த இயலும்; ஒரு குடியரசில் சட்டங்கள் அனுசரிக்கப்படாவிட்டால்; சரியாக அமுல் செய்யப்படாவிட்டால், மக்கள் அல்லது அவர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் அசட்டையாகவோ அல்லது நேர்மையற்றோ இருந்தால் நாடு அழியும். ஏனென்றால் ஆட்சியாளர்களே அசட்டையாகிவிட்டார்கள் அல்லது நேர்மையிழந்துவிட்டார்கள்.

கு: அது குறித்து மக்கள் என்ன செய்ய வேண்டும்?

ஆ: அதே சிறந்த எழுத்தாளர் மான்டஸ்கியூ கூறியது போல, உலகிலுள்ள மற்றப் பொருள்களைப் போன்

றதே அரசாங்கம், "அதைப் பாதுகாப்பதற்கு அதை நாம் நேசிக்க வேண்டும்" குடியரசைப் பாதுகாக்க மக்கள் குடியரசுவாதிகளாக வேண்டும்.

கு: குடியரசுவாதியாவதற்கு அவர்கள் என்ன செய்ய வேண்டும்? குடியரசின் அரசியல் சட்டத்தை ஏற்று அவன் கீழ் வாழ அவர்கள் இணங்கியிருப்பது போதாதா?

ஆ: இல்லை, அது போதாது—அவர்கள் ஏதாவது உறுதியானதை சுறுசுறுப்பானதைச் செய்ய வேண்டும். முதலாவதாக அரசாங்க விவகாரங்கள் அனைத்திலும் அவர்கள் சுறுசுறுப்பான, நீடித்த ஆர்வம் கொள்ள வேண்டும்.

கு: இதை அவர்கள் எவ்வாறு செய்ய வேண்டும்?

ஆ. சட்டமும், அரசியல் சட்டமும் விதித்துள்ள எல்லாக் கடமைகளையும் செய்ய வேண்டும். எல்லா உரிமைகளையும் அனுபவிக்க வேண்டும். ஆட்சி வேலையில் பங்கு பெறும் எல்லா வாய்ப்புகளையும் அவர்கள் பயன்படுத்த வேண்டும். எல்லா பிரதிநிதித்வ சபைகளுக்கும், கிரர்மப் பஞ்சாயத்துகளுக்கும், ஜில்லா போர்டுகளுக்கும், நகரசபைகளுக்கும். ராஜ்ய சட்டசபைகளுக்கும், மத்ய சட்டசபைக்கும் நடக்கும் தேர்தல்களில் தங்களுடைய உரிமையைப் பயன்படுத்த வேண்டும். நாட்டின் எல்லாச் சட்டங்களையும் அவர்கள் அனுசரிக்க வேண்டும். அவற்றை மீறக்கூடாது. எல்லா வரிகளையும் அவர்கள் செலுத்த வேண்டும். சட்டத்தை உடைப்பவர்களையும் தவறு செய்பவர்களையும் கண்டு பிடித்து விசாரணைக்குக் கொண்டு வந்து தண்டிப்பதில் எல்லா அதிகாரிகளுக்கும் குறிப்பாக போலீசாருக்கும் அவர்கள் உதவ வேண்டும். தங்களுடைய கண்களுக்கு முன்னால் ஒரு

குற்றம் நடக்கும்போது வேறு திசையில் பார்த்து அசட்டையாக இருக்கக்கூடாது—சுருங்கக் கூறின், அரசாங்கத்தைத் தங்களுடைய சொந்த உடைமை யாகக் கருதி நடந்துகொள்ள வேண்டும்.

கு: அவர்கள் இதை எவ்வாறு செய்வது? இவற்றைச் செய்ய எல்லாருக்கும் தகுதியில்லையே!

ஆ: இந்தக் கடமைகளைச் செய்ய அனைவரும் தங்களைத் தகுதியுள்ளவர்களாக்கிக் கொள்ள வேண்டும். தங்களுடைய கடமையைச் செய்யும் உறுதியை பாமர மக்களிடம் உண்டாக்க வேண்டும். அடுத்தபடியாக, தேவையான அறிவைப் பெற புத்தகங்களையும் பத்திரிகைகளையும் படிக்க வேண்டும். அல்லது விஷயமறிந்தவர்களிடம் இந்த விஷயங்களைப் பேசவேண்டும். இறுதியாக, எல்லாவற்றிலும் முக்கியமாக, பிரஜையின் கடமைகளைச் செய்யும்போது உயர்தரமான ஒழுக்கத்தைக் கடைப்பிடிக்க வேண்டும்.

கு: ஒரு குடியரசில் பிரஜா உரிமைக்கும் ஒழுக்கத்திற்கும் என்ன சம்பந்தம்?

ஆ: எல்லாம் உண்டு. ஒழுக்க விதிகளை பிரஜை அநுசரிக்காவிடில், சட்டசபையிலுள்ள அவனுடைய பிரதிநிதியும் அரசாங்கத்திலுள்ள அவனுடைய மந்திரியும் அநுசரிக்க மாட்டார்கள். உதாரணமாக ஒரு அபேட்சகரிடம் பணத்தைப் பெற்றுக்கொண்டு தன் வாக்கை ஒரு சாதாரண பிரஜை கொடுத்தால், அந்த அபேட்சகர் தேர்ந்தெடுக்கப்பட்டதும் அவர் பணம் கொடுத்து மற்ற பிரதிநிதிகளின் ஆதரவைப் பெறுவார்; அவர்கள் பர்மிட்டுகள், லைசென்சுகள், சலுகைகள் ஆகியவற்றிற்காக மந்திரியிடம் சென்று லஞ்சம் கொடுப்பார்கள்; மந்திரி நேர்மையற்று இருந்தால் நாட்டின் நலனுக்காக அரசாங்கம் நடத்தப்படும்

என்று எதிர்பார்க்க இயலாது. நேர்மையற்ற மந்திரி சபை—பணத்திற்காகக் கொள்கைகளையும் திட்டங்களையும் நாட்டிலுள்ள சுயநலக் கும்பல்களுக்கு அல்லது நாட்டுக்கு வெளியிலுள்ள கொள்ளையர்களுக்கு விற்கக்கூடும்.

கு: அத்தகைய செயலின் விளைவுகள் குடியரசைக் காட்டிக்கொடுப்பதாகாதா?

ஆ: ஆம். அது குடியரசைக் காட்டிக் கொடுப்பதுபோலாகும்—அது நாட்டுக்குத் துரோகம் செய்வதாகும். குடியரசை அரசாங்கம் காட்டிக் கொடுப்பது மட்டுமின்றி, தன்னுடைய வாக்கு அல்லது வேறு உரிமையைப் பணத்திற்கு விற்கும் ஒவ்வொரு குடியும், சட்டசபையில் பணத்துக்கு ஏற்றபடி தன் வாக்கை உபயோகிக்கும் ஒவ்வொரு சட்டசபையினரும், சட்டத்திற்குப் புறம்பான வகையில் பணம் சேர்க்கும் ஒவ்வொரு மந்திரியும் குடியரசுக்குத் துரோகம் செய்கிறார்.

கு: அவ்வாறு குடியரசுக்குத் துரோகம் நடப்பதைக் கண்டு பிடித்துத் தண்டிக்க முடியாதா ?

ஆ: அந்தோ, அது எளிதல்ல. ஏனென்றால், துரோகம் ரகசியமாக, கண்டுபிடிக்க முடியாதபடி நடக்கிறது.

கு: அப்படியானல் அதற்குப் பரிகாரம் என்ன?

ஆ: பொதுக் கருத்தும், பொதுமக்களின் பொது உணர்ச்சியுமே ஒரே பரிகாரம். நாட்டுப் பற்றும், குடும்பம் அல்லது வகுப்பு அல்லது ஜாதி நலனைக் கருதாமல் பொதுநலனைப் பேணுதல் ஆகியவை மக்களை உயர்தர ஒழுக்கத்தைக் கடைப் பிடிக்கச் செய்ய வேண்டும். மக்கள் உறுதியாக நேர்மையுடன் இருந்தால், அவர்களுக்கு நேர்மையான அரசாங்கம் கிடைக்கும். அப்பொழுது நேர்மையற்ற, நேர்மை யிழக்கக்கூடிய மந்

திரிகளும் அதிகாரிகளும் நன்கு புலப்படுவார்கள். தங்களுடைய பிரதிநிதிகளின் வாக்குகள் மூலம் அவர்களை அரசாங்கப் பதவியிலிருந்து நீக்கவோ அல்லது அடுத்த தேர்தலில் அவர்களுக்குத் தங்களுடைய ஆதரவை மறுக்கவோ மக்களுக்கு அதிகாரமுள்ளது.

கு: அப்படியானால் குடியரசின் வாழ்வு பொதுமக்களைச் சார்ந்துள்ளதா?

ஆ: ஆம். சுதந்திரம் மட்டுமின்றி குடியரசின் வாழ்விற்கும் மக்கள் அளிக்கும் விலை, நிரந்தரமாக விழிப்புடன் இருப்பதே யாகும்.

# 18. சுதந்திரம்

கு: சுதந்திரம் என்பது எது ?

ஆ: மற்ற நாடுகளிடமிருந்து சுதந்திரமாகவும், தனக்குத் தானே யஜமானாகவும் உள்ள ஒரு நாட்டின் நிலைமை தான் சுதந்திரம்.

கு: இதற்கு முன்பு இந்தியா சுதந்திரமாக இருந்ததில்லையா?

ஆ: இந்தியா ஒரு ஐக்கிய நாடாக இதற்கு முன்பு சுதந்திரமாக இருந்ததில்லை. அதன் பாகங்கள் அங்கொரு நாடும், இங்கொரு நாடுமாக சுதந்திரமாக இருந்துள்ளன. 1947, ஆகஸ்டு 15 வரை இந்தியா முழுவதும் அந்நிய ஆட்சியின், பிரிட்டிஷ் ஆட்சியின் கீழ் இருந்தது.

கு: சுதந்திரத்தை நாம் ஏன் கொண்டாட வேண்டும் ? அது விரும்பத்தக்க, பெருமை கொள்ளத்தக்க நிலையா?

ஆ: ஆம், அது அப்படிப்பட்டது.

கு: அது எவ்வாறு ?

ஆ: ஏனென்றால். சுதந்திரமாக இருப்பதால் ஏற்படும் சிறந்த அந்தஸ்தும், திருப்தியும் இந்தியாவுக்கு சுதந்திரம் அளிக்கிறது. சுதந்திரமாகவும் மற்றவர்க

ளுக்கு அடிபணியாமலும் இருக்கும் மனிதனைத்தான் மனிதன் என்று கூறுவது போல, ஒரு நாடு சுதந்திர மடைந்து சுதந்திரமாக இருக்கும் வரை அது ஒரு முழு நாடு அல்ல,— அதன் வாழ்வுக்கும் வளர்ச்சிக்கும் சுதந்திரம் அவசியம்.

கு: சுதந்திரத்தில் திட்டமாக இருப்பது என்ன ?

ஆ: இந்தியாவுக்கு சுதந்திரம் கொடுப்பதாவது:—(1) தன் விருப்பங்களுக்கு ஏற்றபடி தன்னுடைய உள் நாட்டு வெளிநாட்டு விவகாரங்களை நடத்தும் உரிமை. (2) மற்ற நாடுகளுடன், சம அந்தஸ்தில் இருக்கும் உரிமை, அவற்றிற்குச் சமமாக, ஊழியனுகவோ அல்லது அடிமையாகவோ இல்லாமல், நடத்தப்படும் உரிமை—சுதந்திர நாடுகள் பெரிது அல்லது சிறிது சமமாக நடத்தப்படுவது சர்வதேச சட்டத்தின் ஒரு கொள்கையாக, அந்த சட்டத்தின் அமைப்பாளர்களில் ஒருவரான குரோடியஸ் என்பவரின் காலத்திலிருந்து இருந்து வருகிறது.

கு: சுதந்திரம் என்ருல் மற்ற நாடுகளுடன் இந்தியாவுக்கு உறவில்லாமல் அது தனித்து நிற்பது என்று பொருளா?

ஆ: இல்லை, சுதந்திரம் என்ருல் தனித்து நிற்பது என்று பொருளல்ல. பல நாடுகள் அடங்கிய உலகத்தில், நாடுகளின் சமுதாயத்தில் இந்தியா வாழ்கிறது. தற்காலத்தில் எந்த நாடும் தனியாக அல்லது தனக்காகவே வாழ இயலாது, நல்ல வாழ்க்கைக்கு அவசியமான உணவு, உடை முதலியவற்றில் ஒரு நாடு மற்ருெரு நாட்டின் உதவியையும் கூட்டுறவையும் எதிர்பார்க்கிறது.

கு: மற்ற நாடுகளுடன் நட்புடன் இருக்க வேண்டும் என்று சுதந்திரம் வேண்டுகிறதா?

ஆ: எல்லா சிநேகமான நாடுகளுடைய நட்பையும், தங்களுடைய சுதந்திரத்தையும், உலக சமாதானத்தையும் பாதுகாப்பதற்கு நம்பத் தகுந்த நாடுகளுடைய நட்பையும் சுதந்திர நாடுகள் விரும்புகின்றன.

கு: இந்தச் சுதந்திரத்தை ஒருவர் எவ்வாறு தெரிந்து கொள்வது அல்லது அடையாளம் கண்டு கொள்வது? அதற்கு வெளியில் தெரியும் அடையாளங்கள் உண்டா?

ஆ: ஆம், இருக்கின்றன. (1) நம்மிடம் வெளி விவகாரத் துறையும், மந்திரியும் இருக்கிறார்கள். முன்பு பிரிட்டிஷ் ஆட்சியில் வெளிநாட்டு அலுவலகம் அல்லது வெளிவிவகாரத் துறை இருந்தபோதிலும் லண்டனிலுள்ள பிரிட்டிஷ் வெளிநாட்டு அலுவலகத்திற்கு அது உட்பட்டதாக இருந்தது, லண்டனிலுள்ள பிரிட்டிஷ் அரசாங்கம் நமது வெளிநாட்டு உறவுகளை நிச்சயித்தது. ஆனால், இப்பொழுது மற்ற நாடுகளுடன் இந்தியா உறவு கொள்ளும் விஷயத்தில் நமது வெளிவிவகார மந்திரி இந்தியாவுக்கு வெளியில் யாருடைய உத்தரவையும் எதிர்பார்ப்பதில்லை. (2) இந்தியாவின் அந்நிய அல்லது வெளிவிவகாரக் கொள்கையை அமுலாக்குவதற்காக வெளிநாடுகளில் நமது பிரதிநிதிகள் (ஸ்தானிகர்கள் அல்லது தூதர்கள்) இந்தியாவுக்கு பிரதிநிதித்வம் வகிக்கவும், இந்தியாவின் நலன்களைப் பாதுகாக்கவும் வளர்க்கவும் இருக்கிறார்கள். ஆனால், முன்பு அவை பிரிட்டிஷ் பிரதிநிதிகளிடம் இருந்தன. (3) நமக்குச் சொந்தமான கொடி, இந்திய சுதந்திரத்தின் சின்

னம் இருக்கிறது. அது எல்லா அரசாங்கக் கட்டிடங்களிலும், இந்தியக் கப்பல்களிலும், இந்தியத் தூதர் நிலையங்களிலும் பறக்க விடப்படுகின்றன. ஆனால், முன்பு நாம் பிரிட்டிஷ் கொடியாகிய யூனியன் ஜாக்கைப் பறக்க விட நேர்ந்தது. (4) எல்லாவற்றையும் விட தரைப்படை, கப்பற்படை, விமானப்படை ஆகிய இந்திய பாதுகாப்புப் படைகள் இந்திய பாதுகாப்பு மந்திரியின் நிர்வாகத்தின் கீழ் இருக்கின்றன. அவர் வெளியிடத்து சக்தி எதற்கும் உட்பட்டவர் அல்லர். இந்தியாவின் சுதந்திரத்தைப் பாதுகாப்பது அவருடைய பொறுப்பு.

கு: இந்திய மக்களுக்குச் சுதந்திரம் என்ன கொண்டு வந்திருக்கிறது?

ஆ: அவர்களுக்கு அது கொண்டு வந்திருப்பதாவது:— (1) சுயேச்சையான குடி உரிமை. ஒரு அந்நிய நாட்டிற்கு அவர்கள் இன்னும் அடிமைகள் அல்லர்—அவர்கள் இன்னும் பிரிட்டிஷ் குடிகள் அல்லர், ஆனால், இந்தியக் குடிகள் மற்ற நாடுகளின்குடிகளை அவர்கள் வெட்கப்படாமல் பார்க்க இயலும்; மற்ற நாடுகளின் குடிகளுக்கிடையில் அவர்கள் தலை நிமிர்ந்து நிற்க முடியும். ஏனென்றால் பிரிட்டிஷ் ஆட்சி எவ்வளவு பயனுள்ளதாக இருந்த போதிலும் அவர்களின் கீழ் நமக்கு இந்த தன் மதிப்பு தன்னம்பிக்கை உணர்ச்சி இருந்ததில்லை. (2) நம்மை ஆள்வதற்கும், நம் விவகாரங்களை நாமே முடிவு செய்வதற்கும் உரிமையைப் பெற்று அதை உபயோகித்து வருகிறோம். நமது, மத்திய, மாகாண அரசாங்கங்கள் நமக்குச் சொந்தமானவை; நம்மால் உண்டாக்கப்பட்டவை; நமக்குப் பொறுப்புள்ளவை. நமது

வர்த்தகக் கொள்கையும், நமது பொருளாதாரக் கொள்கையும், நமது உள்நாட்டுக் கொள்கையும், வெளிநாட்டுக் கொள்கையும் நமக்குச் சொந்த மானவை; அவற்றை வெளிநாட்டினர் தூண்ட வில்லை, யோசனையாகக்கூட கூறவில்லை.

கு: அதிக உணவு, அதிக உடை, அதிக நல்ல வீடுகள் போன்ற பலன்களை சுதந்திரம் கொண்டு வந்திருக் கிறதா?

ஆ: அந்தோ, இல்லை! சுதந்திரம் எல்லாம் சுவர்க்கபோக மன்று-அது ஒரு பூலோக சுவர்க்கத்தை, ஒரு புதிய தேவலோகத்தை, ஒரு புதிய பூமியை உண்டாக்க வில்லை.

கு: ஏன்?

ஆ: ஏனென்றால் அவை (அமைதியும் சுபிட்சமும் நல் வாழ்க்கையும்) விவேகத்தையும் வேலையையும் சார்ந் திருக்கின்றன.

கு: யாருடைய விவேகம், வேலை ஆகியவற்றின் மீது?

ஆ: அரசாங்கங்கள், மக்கள் ஆகியவர்களின் விவேகம், வேலை மீது.

கு: அது ஏன் அரசாங்கத்தின் விவேகம், வேலை ஆகிய வற்றின் மீது சார்ந்திருக்க வேண்டும்?

ஆ: ஏனென்றால் நாட்டின் பொது விவகாரங்களை நிர் வகிப்பதும், சட்டங்களை இயற்றுவதும், நாட்டை ஆள்வதும் ஆகிய கடமைகள் அரசாங்கத்திடம் ஒப்படைக்கப் பட்டுள்ளன. நாட்டின் விவகாரங்களை விவேகத்துடன் அரசாங்கம் நடத்த வேண்டும்.

கு: தேச விவகாரங்களின் விவேகம் எதில் இருக்கிறது?

ஆ: அரசியல் விவகாரங்களில் விவேகம் என்பது, மக்களின் நலனை வளர்ப்பதற்குப் பயதுள்ளவற்றை எல்லாம் செய்வதாகும். பழைய காலத்தில் பயனுள்ளதாக நிரூபிக்கப்பட்டதன் மீதும், மற்ற நாடுகளின் அரசாங்கங்கள் மக்கள் ஆகியோரின் அனுபவத்தின் மீதும் அதுதோன்றுகிறது. பிரத்யட்ச நிலையிலிருந்து விவேகம் பிறக்கிறது, அறிவால் வளர்க்கப்படுகிறது. அரசியல் விவேகம், நாட்டின் நன்மையைக் குறிக்கோளாகக் கொண்டிருக்கிறது. உண்மையை விரும்புதல், சாதுர்யம், ஏழைகளுக்கு இரங்குதல் ஆகியவை அரசியல் விவேகத்தின் ஒரு பகுதி.

கு: ஒரு சுதந்திர நாட்டின் அமைதிக்கும் வளத்திற்கும் உழைப்பு தேவையா?

ஆ: உழைப்பின்றி உலகத்தில் நல்லதைச் சாதிக்க முடியாது என்பது வெளிப்படை—நாட்டின் அமைதியையும் வளத்தையும் வளர்ப்பதற்கு நாட்டின் அரசாங்கப் பொறுப்பை ஏற்றுள்ளவர்களின் உழைப்பு தேவை.

கு: இந்த உழைப்பு எதிலுள்ளது?

ஆ: மந்திரி முதல் தாழ்மையான குமாஸ்தாவரை அரசாங்கத்திலுள்ள அனைவரும் அவசியமான அறிவைப் பெறுவதில் அது இருக்கிறது; அரசியலறிவு, பொருளாதார அறிவு விஞ்ஞான அறிவு- காலத்தின் சூழ்நிலைக்கு ஏற்றவாறு இந்த அறிவைப் பயன்படுத்த வேண்டும். நாட்டின் சந்தர்ப்பங்களையும், மக்களின் வாழ்க்கையையும் கவனிப்பதிலிருந்து தோன்றுவதுதான் அந்த அறிவின் மிக உபயோகமான பாகம்.

கு: அறிவு மட்டும் போதுமா?

ஆ: புத்தகங்கள், அரசாங்க ஏடுகள் ஆகியவற்றிலிருந்து கிடைக்கும் அறிவு மட்டும் போதாது — மக்களுடைய சூழ்நிலைகள், வாழ்க்கை ஆகியவற்றுடன் நேரடியாகத் தொடர்பு கொள்வது, விஷயமறிந்தவர்களுடன் பேசுவது, குறைகள் உள்ள மக்களுக்குப்பேட்டியளிப்பது, நாட்டின் குறுக்கிலும், நெடுக்கிலும் பிரயாணம் செய்வது ஆகியவை அனைத்தும், அலுவலகத்தில் பணியாற்றுவது உட்பட, நாட்டு ஆட்சியாளர்களின் வேலைகளாகின்றன.

கு: ஆட்சியாளரின் உழைப்பு மட்டும் போதுமா?

ஆ: இல்லை. மக்களின் உழைப்பும், குறிப்பாக ஒரு சுதந்திர நாட்டில் அவசியமாகிறது.

கு: சுதந்திர நாட்டில் ஏன் அது விசேஷமாக அவசியமாகிறது?

ஆ: ஏனென்றால் சுதந்திரம் நீடிப்பது, நாட்டின் நல்ல ஆட்சியையும், மக்களின் உழைப்பையும் செழிப்பையும் சார்ந்துள்ளது. பலவீனமான அரசாங்கம் அல்லது மக்கள் பிளவுபட்டும் ஏழைகளாகவும் பலமான அரசாங்கத்தை ஆதரிக்க இயலாமலும் நாட்டைப் பாதுகாக்கபலமான ராணுவத்தைப் பராமரிக்க இயலாமலும் இருப்பதன் காரணமாக நிரந்தரக்குழப்பத்தில் கிடக்கும் நாடு, பொருளையும் பலமும் கொண்ட அண்டை நாடுகளின் படையெடுப்பைத் தோற்றுவிக்கிறது. மோசமாக ஆளப்பட்ட ஏழ்மையான பிளவுபட்ட நாடு ஒரு வகை அரசியல் சூன்யத்தை ஏற்படுத்துகிறது. அதில் மற்றவர்கள் புகுந்துகொள்கிறார்கள். நம் நாட்டு சரித்திரத்தில் அவ்வாறு பல முறை நிகழ்ந்துள்ளது.

கு: ஆகவே, இந்திய சுதந்திரத்தைப் பாதுகாக்க எது அவசியம்?

ஆ: தன் மக்களுக்கு அமைதியையும் பாதுகாப்பையும் அளித்து, தங்களுடைய நலனேயும் நாட்டின் செல்வத்தையும் அதிகரிப்பதற்காக மக்கள் உழைப்பதற்கு உதவகக்கூடியதும், நல்லவாழ்க்கையின்வழியிலுள்ள முட்டுக்கட்டைகளே நீக்கிச் சரியான சூழ்நிலையை உண்டாக்கக் கூடியதுமாகிய ஒரு விவேகமான அரசாங்கம். மக்கள் ஒற்றுமையாகவும் நாட்டுப்பற்றுடனும் விளங்கவும்; ஒழுங்கான முறையான வீட்டு, குடும்ப வாழ்க்கையின் மூலம் சமூகத்தின் அஸ்திவாரத்தை மக்கள் பலப்படுத்தவும்; தனிப்பட்ட, சமூக நற்குணங்களே ஏற்படுத்தியும் சமூக விரோத தீமைகளான குற்றம், கெட்டவர்கள் ஆகியவற்றை அடக்கியும் கடுமையாக உழைத்துத் தங்களேயும் நாட்டையும் மக்கள் செழிப்பாக்கவும் அரசாங்கம் கோருகிறது.

கு: சுதந்திரத்தைப் பாதுகாப்பதற்கு மக்கள் அல்லது அரசாங்கம்—இதில் எது அதிக அவசியம்?

ஆ: மக்கள். ஏனென்ருல் ஒரு ஜனநாயக நாட்டில் அரசாங்கத்தை அமைப்பதுமக்களே. மக்கள் எப்படியோ அவ்வாறே அரசாங்கமும் இருக்கும். பொது விவகாரங்களில் மக்கள் தொடர்ந்து ஆர்வம் கொள்வதாலும், சட்டசபைக்கும் ஏனேய பொது ஸ்தாபனங்களுக்கும் தகுந்த நபர்களேத் தேர்ந்தெடுப்பதாலும் சுதத்திரத்தின் எதிர்காலத்தை மக்கள் ஆக்கவோ அல்லது அழிக்கவோ இயலும்.

கு: இந்திய சுதந்திரத்தின் எதிர்க்காலத்தை எவ்வாறு பாதுகாப்பது?

ஆ: உண்மையும் கௌரவமும் பொருந்திய வாழ்க்கைக்கு அரசாங்கமும் மக்களும் தங்களை அர்ப்பணித்துக் கொண்டு நாட்டிற்காக உழைப்பதன் மூலம் சுதந்திரத்தின் எதிர் காலத்தைப் பாதுகாக்க இயலும்.

# 19. மனச்சாட்சியை குடிகள் சோதித்தல்

1. மில்டனின் சொற்களின்படி "சிறந்த வேலை வாங்குபவரின் கண்களில்" (கடவுள் சாட்சியாக) இன்று நான் என்னுடைய அரசியல், சமூகக் கடமைகள் அனைத்தையும் செய்திருக்கிறேனா, ஏனென்றால் கடவுள் எல்லாவற்றையும் காண்கிறார். என் உடன் வாழ் குடிகள்மீது நான் இழைத்த குற்றங்களை அவரிடமிருந்து நான் மறைக்க இயலாது!

2. நமது அரசாங்கங்களின் கொள்கைகள், திட்டங்கள் ஆகியவற்றைப் பரிசீலனை செய்து முடிவு செய்வதற்காக நன்றாக அமைக்கப்பட்ட முற்போக்கான நாடுகளின் சட்டங்கள் வழக்கங்கள் சம்பிரதாயங்கள் ஆகியவை பற்றியும், சமூக, பொருளாதார முன்னேற்றத்தின் காரணங்கள் நிலைமைகள் பற்றியும் இன்று நான் மேலும் சிறிது தெரிந்துகொள்ள முயன்றிருக்கிறேனா?

3. இந்திய அரசாங்கத்தின் வெளிநாட்டுக் கொள்கையை ஆராய்வதற்காக, தேசங்களின் சட்டம் சர்வதேச கொள்கை ஆகியவை குறித்து இன்று நான் மேலும் கொஞ்சம் தெரிந்து கொள்ள முயற்சித்திருக்கிறேனா?

4. என் நாட்டின் கடந்தகாலம், நிகழ்காலம், அதன் மக்கள் தொகை வாய்ப்புகள் அதன் உள்நாட்டு வெளி நாட்டு வாணிகம் ஆகியவை குறித்து இன்று நான் மேலும் சிறிது அறிந்திருக்கிறேனா, ஏனென்றால் தன் நாட்டைப் பற்றி அறியாத குடி பாதிக்குடி.

5, இன்று நான் என் உடன் வாழ் குடிகளுடன் பழகும்போது சமத்துவக் கொள்கையை கடைப்பிடித்தேனா; என்னுடைய ஊழியர்கள் அல்லது என்னிடம் பணி செய்தவர்களை மரியாதையுடன் நடத்தியிருக்கிறேனா? அவர்களை நோக்கி எவ்வளவு தடவைகள் நான் கூச்சலிட்டிருக்கிறேன், ஏசியிருக்கிறேன்; பஸ்வண்டிகளிலும் டிராம் வண்டிகளிலும், கிராமங்களிலும், கிணற்றிலும், அக்கிரகாரத்திலும் தீண்டாதவர்களை (ஹரிஜனங்களை)மனிதர்களாக நடத்தியிருக்கிறேனா; பெண்களையும் வியாதியஸ்தர்களையும் மரியாதையுடன் நடத்தி, பஸ்களிலும் டிராம்களிலும் ரெயில்களிலும் அவர்களுக்கு இடம் கிடைக்காதபோது, என் இடத்தைக் கொடுத்தேனா?

6. இன்று நான் தொழிலுறவு கொண்டவர்களிடம் யோக்கியமற்றும் நேர்மையற்றும் நடந்துகொண்டேனா; நான் அலுவலக குமாஸ்தாவானால் அவலட்சணமாகவும் திறமையற்றும் என்றும் பணி செய்தேனா? பால்காரனானால் பாலில் தண்ணீர் கலந்தேனா; வியாபாரியா

ஞல் பொருள்களின் அளவைக் குறைத்து விற்றேனு; ஏற்றுமதி வியாபாரியாஞல் கனத்திற்காக கற்களையும் குப்பைகளையும் சேர்த்தேனு, எவ்வளவு தடவைகள் இந்த வழியில் அல்லது அந்த வழியில் என் நாட்டிற்கும், என் குடி உரிமைக்கும் இழிவு செய்துள்ளேன்?

7. எல்லா நியாயமான வரிகளையும் கட்டணங்களையும் செலுத்தி இருக்கிறேனு; வருமான வரி அறிக்கையை தாரிக்கும்போது எந்த வருமானத்தையாவது விட்டிருக்கிறேனு; வருமானவரித் துறைக்கு ஒரு கணக்கும் என் சொந்த கவனத்திற்கும் உபயோகத்திற்கு இன்னெரு கணக்கும் வைத்திருக்கிறேனு?

8. பொது இடங்களில் அசுத்தம் செய்கிறவர்களை நான் கண்டித்தபோது என்மனச்சாட்சி அந்தவிஷயத்தில் களங்கமற்று இருந்ததா?

9. சட்டத்திற்கும்பொது ஒழுங்கிற்கும் விரோதமான குற்றங்களைக் கண்டுபிடிப்பதில் போலீசிற்கும் மற்ற அதிகாரிகளுக்கும் உதவியிருக்கிறேனு அல்லது அந்தக் குற்றங்கள் நடந்தபோது காணுதவன் போல இருந்து விட்டேனு?

10. என் வீட்டில் அல்லது என் பகுதியில் காலரா, அம்மை, வேறு தொத்து நோய்கள் ஏற்பட்டபோது அதை நகரசபை அதிகாரிகளிடம் அறிவித்திருக்கிறேனு?

11. நிர்வாக முறையின் தவறுகள் அல்லது மக்களின் குறைகள் குறித்து பொது அதிகாரிகளுக்கோ

அல்லது பத்திகைகளுக்கோ அல்லது சட்டசபையிலுள்ள என் பிரதிநிதிக்கோ எழுதியிருக்கிறேனா?

12. நாட்டின் சமூக, பொருளாதார வாழ்க்கையின் மேன்மையை வளர்க்க அல்லது தடுக்க இன்று நான் ஏதாவது செய்திருக்கிறேனா?

அரசியல் அறிவு

# கேள்வியும்-பதிலும்

சுதந்திர நாட்டின் ஒவ்வொரு ஆண்-பெண்ணும் அறிந்து கொள்ளவேண்டிய செய்தி களின் விளக்கம்.

ஆசிரியர்கள், மாணவர்கள் அரசியல் வாதிகள், மேடைப் பேச்சாளர்கள் அனைவருக்கும் இன்றியமையாத நூல்.

இதைப் படித்து விட்டால் உரிமையை அறிந்து கடமை ஆற்றலாம்.

**WHAT FVFRY CITIZEN OUGHT TO KNOW**

By

Prof. M. RUTHNASWAMY